


# சொரூபசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மீக அன்பர்களது அந்தரங்கப் பிரார்த்தனை

(1) சித்த சலனஞ், சிதையாத் துயரம் என அறிந்து, ஏகாந்த தரிசனமுற்றுச் சுவானுபூதி உற அருள் புரிவீராக!

(2) ஓயாச் சிந்தை, ஓயாத் துயர்தான் ஒழியத், தன்னந் தனியாய் ஒளிரும், பரஞானந் தானாகி நிலைக்க, அருள் புரிவீராக!

(3) அனைத்தை அறியும், ஆன்மாவை அறிந்து, தாக்கற்ற, துரிய நிலை தானாய் விளங்க, அருள் புரிவீராக!

(4) முன்னிலை சாராது, மூதறிவைத் தான் உணர்ந்து, பின்னம் இலாப் பேரின்பந் தான் விளைய அருள் புரிவீராக!

(5) அகத்தில் புறத்தில், அருள் ஒளியைக் கண்டு, சுக வெளி தானாய், எங்கும் நீக்கமற நிற்க, அருள் புரிவீராக!

(6) தன்னை அறிந்து, தனி வெளியுந் தானாகித், தன் செயல் அற்றுப், போக்கு வரவு அற்ற பூரணம், பொருந்த, அருள் புரிவீராக!

(7) அகண்ட வெளியில், அமைதி அடைந்து, முத்திக்கு, இதுவே மூலம் என அறிந்து, சக மயக்கம் மாற்றுஞ், சுத்த நிர் விகற்ப சுக நிலை பெற்றுய்ய அருள் புரிவீராக!

(8) இமையாத நாட்டத்து இருந்து உணர்வாருக்கு, அமையும், ஆனந்தமாம்!

(9) எங்கும் இருப்பது இறை அருள் பூரணம்
அங்கு தங்கிட ஆனது மங்களம்
பொங்கி விளைந்தது பூரண மங்களம்
எங்கும் தங்குக எய்து மங்களமே!

**- ஸ்ரீமத் அருணாசலம் சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சொரூபானந்தர்

அருளிச் செய்த

# சொரூப சாரம்

இஃது

இந்திரபீடம் கரபாத்திர சுவாமிகள்

ஆதீனத்துக்குரிய

**ஸ்ரீ ஈ.சூர் - சச்சிதானந்த சுவாமிகளால்**

உரைசெய்யப்பட்டு

மேற்படி மாணவர் தண்டறை

**ஸ்ரீமான் சுப்பராய ஆச்சாரிய சுவாமிகள்**

மாணாக்கரில் ஒருவரான

**மதுரை எஸ். கந்தசாமி பிள்ளை**

அவர்களால் தமது

**ஸ்ரீ மீனாம்பிகை பிரஸில்**

பதிப்பிக்கப்பெற்றது

மூன்றாம் பதிப்பு

1950

ஸ்ரீ சிவகுருநாத குருபீட அறக்கட்டளை

மறுபதிப்பு - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புக்கு:
Dr. க. கிருஷ்ணானந்தசிவம் M.V.Sc.
Apt #: 501, Land Mark Court,
33, Rudra Mawatha,
Colombo-06, Sri Lanka.
Tel: 0094 11 2081273/74, Fax: 0094 11 2081106
E-mail: drksivam@yahoo.co.in

திரு. க. மகாதேவசிவம்
சிவன் மாளிகை
இல. 28, மாரி அம்மன் ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம், இலங்கை.
Tel: 0094 21 2226781, 0094 21 2222996

அச்சு
குமரன் அச்சகம்.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6
Tel. - 011 2364550, E-mail: kumbhlk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

ஆன்மீக பாதையில் பயணம் செய்வது, அப்போது ஏற்படும் அனுபவங்கள், உயர் ஞானிகளின் விளக்கங்கள் என்பவை கோர்வையாக சொல்லப்படுவது அருமை. ஆயினும், இவை பற்றி ஆங்கங்கே சிறு சிறு அனுபவங்கள் வெளிப் படுத்தப்பட்டுள்ளன.

அவைகள் தொகுக்கப்பட்டு சுட்டும் இலட்சியம், அணுகுமுறை, அதன் வெளிப்பாடுகள், மாற்றங்கள், வழிகள், தடங்கல்கள், சந்தேகங்கள் என ஒரு சாதகனுக்கு உதவும் வகையில் உள்ள நூல்கள், அரிதினும் அரிது. இவ் வகையில், இந்நூல் முழுமை நிறை கஞ்சியமாக உள்ளது, ஸ்ரீமத் சங்கரா சாரியார் அருளிய **விவேக சூடாமணி, ஞான நூல்** எனும். **சொரூப சாரம்.** ஆத்ம தரிசனத்திற்கு உதவும் அற்புதமான அனுபவ நூல். அரிதினும் அரிதாகிய அனுபவங்களை சுட்டி நிற்பது. அனுபவ ஞானிகளின், அற்புத அனுபவ மகிமையை வெளிப்படுத்தும் உச்ச அனுபவ அறிவுப் பொக்கிஷம். இத்தகைய இந்நூலை மீள வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.


**பேசும் பொருளல்ல**
**கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்**
**அனுபவித்து அறிவாய் நீ (ஆன்மா - சிவம்)**
**அனுபவம் ஒன்றே உணர்த்தும்**
**திருவருள் சித்திக் கட்டும்**

**Dr. க. கிருஷ்னானந்தசிவம்**
ஸ்ரீ சிவகுருநாத குருபீட
அறக்கட்டளை
9.1.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி நாதன்
# ஸ்ரீமத் கடையிற் சுவாமிகள்



சுத்த அத்வைத முக்த
பிரம்மம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



ஸ்ரீ சிவகுருநாத குருபீடக தாபகர்
ஸ்ரீ மத் மகாதேவ சுவாமிகளின் மாணக்கரும்
ஆத்மாத்ம அந்தரங்க வழித் தாபகர்
கொழும்பு ஆண்டவர், ஸ்ரீ தாளையன் சுவாமிகளின் சீடரும்
சுத்த அத்வைத, பிரம்ம சொருபருமாகிய

**ஸ்ரீமத் அருணாசல சுவாமிகள்**

* * * * * *

**அழுந்தொறும் அணைக்கும் அன்னை**
**அறிவிலாது ஆடி ஓடி**
**விழுந்தொறும், எடுக்கும் அப்பன்,**
**விளையாடும் போது, தோழன்,**
**தொழுந் தொறும், காக்கும் தெய்வம்,**
**சொந்தமாய், எடுப்போர்க்கு எல்லாம்,**
**குழந்தையாய், இப்படி உலாவும், என்**
**சற்குருநாதன், வாழி, வாழி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சிவகுருநாத குருபீடாதிபதி

(1942 - 1968)

நித்த முத்த, அகண்டாகார, அத்வைத,

**ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள்**




**''தாங்காமல், வையகத்தை அழிக்கும் வேந்தர்,**
**தரணியில் பலர் உள்ளார், தருக்கி வீழ்வார்,**
**ஓங்காமல், அஞ்சாமல், இடர் செய்யாமல்,**
**என்றும் அருள் ஞானியரே, எமக்கு வேந்தர்''**

- பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமத் மஹாதேவ சுவாமிகளின் சீடரான முருகேசு கந்தையா சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்


# சமர்ப்பணம்

ஸ்ரீ சிவகுருநாத குருபீட
பிரம்ம சொரூபன்
சுவாமி குருபரன், மகாதேவன்
செழுங்கிளை தாங்கி, சுட்டிய வாழ்வில்
அவித்தை அழியும் மூலமும்
வழியும் அறிந்து, அதுவாய் வாழ்ந்தோன்.

கலையும் பொருளும் நலமும்
அருளுடன் நற்சிந்தையும் உயர் நோக்கும்
வல்லோர் வாழ்த்தும் தூயோர் துணையும்
தன் வழியில் என்னைத் தந்தோன்.

குருவைக் காட்டி,
மெய்யின் வழியும் காட்டி
இசைபட பயன் தர வாழ் என்ற
எந்தை கந்தையா ஐயன்
திருவடிக்கே சமர்ப்பணம்

09/07/2011



Dr. **க. கிருஷ்ணானந்தசிவம்**
**க. மகாதேவசிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியா அவித்தை
# அழிந்தொழிய ஞான

அழியா அவித்தை அழிந்து ஒழிய ஞான
விழியால் எரிக்கும் விமலன்- மொழி அதனை
நெஞ்சே நினைந்து உருக நீங்காக் குருபரன்றன்
கஞ்ச மலர்த் தாளே கதி.

தூய குருவருளே தோன்றத் திருவருளில்
தோய வழிகாட்டுந் துன்பகல- நேயமுடன்
பாராது பார்த்துப் பழகியது தானாகில்
வாராது வன் பிறவி வாழ்வு

**- ஸ்ரீமத் அருணாச்சலம் சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சொரூபம்

## விதி குணங்கள் - சகுணம்

நித்தியம் பூரணம் ஏகம் பரமார்த்தம் பரப் பிரமம்
நிதானம் சாந்தம்
சத்தியம் கேவலம் துரியம் சமந் திருக்கு கூடஸ்தன்
சாட்சி போதம்
சுத்தம் இலக்கியம் சனாதனம் சீவன் தத்துவம் விண்
சோதி ஆன்மா
முத்தம் விபு சூக்குமம் என்(று) இவ் வண்ணம்
மொழியும் வேதம்

## விதி குணங்கள் - நிர்க்குணம்

அசலம் நிரஞ்சனம் அமிர்தம் அப்பிரமேயம் விமலம்
வசனா தீதம்
அசடம் அநாமயம் அசங்கம் அதுலம் நிரந்தரம் அணு
நிருபா அகண்டம்
அசம் அனந்தம் அவினாசி நிர்க்குண நிஷ்களம்
நிர் அவயம் அநாதி
அசரீர அவிகாரம் அத்துவிதம் என விலக்கும்
அநேகம் உண்டே.

அப்பிரமேயம் - அறியப்படாது; அநாமயம் - நோய் இல்லாதது.
அதுலம் - கனமில்லாதது; நிரந்தரம் - இடையில்லாதது.
நிரவயவம் - அவயவம் இல்லாதது; அசம் - பிறப்பில்லாதது.

**- கைவல்ய நவநீதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வநாதம்

விஸ்வநாதம், விபும் பூரணம் -நமாமி

- விஸ்

பக்த அனுக்கிரக, பரம கிருபா நிதே.
துக்க விநாசக, மங்கள தாரண

- விஸ்

கைலாச நாதம், நீலகண்டம்
கேதார நிவாசம், பசுபதிம்
மீனாக்ஷி பிரியம், சுந்தரேசம்,
உமாபதிம், மகாதேவம் சிவம்

- விஸ்

ஆதி குரும், லோக குரும், தக்ஷணா மூர்த்திம்,
மாயா நிரோதம், ஞான சாகரம்
மோக்ஷ மூலம், சிஷ்ய அனுகூலம்
முக்தி சாதனம், ஏகம் நித்தியம்

- விஸ்

**உத்தரகாசி**
14.05.2002

**அருணாசலத்தான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகத் தாயே

கற்பகத் தாயே, கருணாகரியே
பொற் பதத் தாழ், சரணம் சரணமம்மா

- கற்பக

அருள் ஒழுகும், அகண்டம் சேர்க்கும்
நீயே நான் எனும், நயன தீட்சை, நல்கும் (சொரியும்)

- கற்பக

அஞ்சாதே, எனும் அபய கரமும்,
துஞ்சாதே, எனும் பாதச் சிலம்பும்,
கெஞ்சாதே, எனும் திண் தோளும்,
விஞ்சாதே, எனும் சாந்த மனமும், நல்கும்

- கற்பக

கலை நிறை நாவும் கறையறு வாழ்வும்,
குறைவில் கொடையும் நிறை நிலை மனமும்,
மறை புகல், தூய அருட் சிந்தையும்,
வல், சிறையறு, அகண்ட ஒளி வெளி தரு

- கற்பக

கழல் தனைக் கருதிக், கண்ணீர் சொரிந்து,
கர்ம யோகத் தீயில், சித்தம் நீறாக்கி,
அதுவுமற்று, இதுவுமற்று, சுட்டாமல் சுட்டி,
அத்துவித, சுபாவம் தரும்

- கற்பக

**அருணாசலத்தான்** 29.01.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ சிவ சிவோகம்

சிவ சிவ, சிவ சிவ, சிவோகம்
சிவ சிவ, சிவ சிவ, சிவோகம் - சிவ சிவ

ஆனந்த தாண்டவ சிவோகம்
அகண்ட அனுபவ சிவோகம் - சிவ சிவ

மனம் அடக்க சிவோகம்
மனம் நசிக்க சிவோகம்
மயல் அறுக்க சிவோகம்
மூல மந்திரம் சிவோகம்- சிவ சிவ

பாவம் அறுப்பது சிவோகம்
பாவம் கெடுப்பது சிவோகம்
சித்த சுத்தி அனுபூதி சிவோகம்
சிவானந்தம் ஆவது சிவோகம் - சிவ சிவ

முத்தி தருவது சிவோகம்
மூலமதாவது சிவோகம்
புரை இல்லது சிவோகம்
பூரணமாக்குவது சிவோகம் - சிவ சிவ

மோன மூலம் சிவோகம்
மோன முடிவும் சிவோகம்
கௌரி சங்கர சிவோகம்
ஷிவங்கரி மனோகரம் சிவோகம் - சிவ சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகதா நாத சிவோகம்
ஜெகம் முழுமையும் சிவோகம்
தேவ தேவ சிவோகம்
பரமகம்சம் சிவோகம் - சிவ சிவ

தேவ தேவ மகா தேவ சிவோகம்
தத்துவமசிப் பொருள் சிவோகம்
பரப் பிரம்மம் சிவோகம்
பரம சித் சொரூபம் சிவோகம் - சிவ சிவ

தினம் தினம் ஓதுக, சிவோகம்
சிவோகம், சிவோகம், சிவோகம், - சிவ சிவ

**Leeds - U.K**
25.01.2008

**அருணாசலத்தான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகும், நாதமும்

அழகும், நாதமும் அமுதம் கொண்ட
அற்புத மரகத வீணை செய்தேன் - அழகும்

கற்பக தரு உடலில், தந்தம் இழைத்து
வைரம், வைடூரியம், அழகுறப் பதித்து
ஒளிரும், நாத வெள்ளக், கங்கை
நானிலம் எங்கும், உயிரோடு பாய்ந்திடும் - அழகும்

துன்பங்கள் தொலைந்தன, இன்பங்கள் எழுந்தன
சலனங்கள் மறைந்தன, சாந்தி பிறந்தது
அன்னை பராசக்தி, அருட் பார்வை
வாழ்க, வாழ்க, எழுக, என்றே அருளிட - அழகும்

எங்கும் ஆடல் எங்கும் பாடல்
தத் தாம் தழங்கு தழங்கிட தாம்
தித் தாம் தத் தித் தாம் என்றே முழங்கிட
அண்டம் எல்லாம், ஆனந்த நடனம், குலுங்கிட
- அழகும்

சுந்தர நடேசர் நல்லையில் கந்தனுடன் ஆட
வாணியும் திருவும் யாழோடு சுகந்தமாய்ப் பாட
நித்திய முக்த்தர்கள், ஆசிகள் கூறிட
அற்புத, மங்களமாய், எழுந்தது, புது யுகம் - அழகும்

அருணாசலத்தான் 17.05.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவ பிரம்ம ஐக்கிய சொரூபம்

குருவின் திருவடி, தடையெல்லாம், தகர்க்கும்
குருவின் திருவடி, அஞ்ஞானம், அகற்றும்
குருவின் திருவடி, எல்லாம் அருளும்,
குருவின் திருவடி, என்றும் துணையே,

பேசுவதல்ல உணர்வு, வாழ்வது தான்
தயையும், கருணையும், வெளியாக்கி
தரணியில் உடல் கொண்டு, சாந்தி தந்த
அகண்டாகார, நித்த, முத்த, திருவடி வாழ்க

தான் அடங்கி, தரணி அடக்கி,
நீயே நான் எனும், அகண்ட நிலையில்,
குருவே எல்லாம், சர்வம் பிரமம் எனும்
பொன்னார் திருவடி, என்றும் வாழ்க.

கருவாகி உருவாகி, களப்பில் ஜீவப் பயிர் செய்து
ஜீவ பிரம்ம, ஐக்கிய சொரூபமாய்,
ஜீவானந்த, லட்சண நிலையின் சுட்டாய்
என்றும், எம்முடன் நிலைத்த, திருவடி வாழ்க

21.02.2006

**அருணாசலத்தான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிடை மருதுறை அற்புத சித்தன்

திருவிடை மருது(உ)றை, அற்புத, சித்தா, ஈசா,
- **திருவிடை**

அகண்டானுபவ, அத்வைத சொருபா சிதம்பரா
அன்பே வடிவான, கருணாகரா - **திருவிடை**

கட்டும், கூட்டும் தகர்த்து
சொல் இறந்த வெளிகாட்டும்,
தாயே, தந்தையே, சிவமே,
கரை காண, கருணா சாகரா, சங்கரா
ஒளி வெள்ளத் (இ)திருத்தும், மாயா தாண்டவா - **திருவிடை**

தேவரும் மூவரும் உன் ஆழியின், திவலைகள்
அண்டமும், பிண்டமும், உன் துகழ்கள்
அகிலம் அனைத்தும், உன் அதிர்வு
ஆனந்த, அனுபவ, சுந்தர, நீலகண்ட - **திருவிடை**

ஒன்றேயான, அறிவு சொரூப, சங்கரா,
திருவிடை மருதுறை, மகா லிங்கேஸ்வரா,
கைவல்ய பிரதாயக, சிவோக மூலமே,
விவேக சூடாமணி, தாரக, விபோ, - **திருவிடை**

பெரு வெளி திகழ், குஞ்சித பாத, குருவே
அகம் பிரம்மாஸ்மி, அனுபவ, ஒளி, உருவே
பிரம்ம ஞான, விஸ்வ ரூப, அருளே
தத்துவமசி, அருணாசல, திருவடி சித்தே - **திருவிடை**

**அருணாசலத்தான்** 20.09.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ மூழ்கு மனமே ஆழ மூழ்கு

ஆழ மூழ்கு மனமே ஆழ மூழ்கு
- ஆழ மூழ்கு

சொல்லறு நிலையின், சுகத் பெற
ஆனந்த ஆழியின், அனுபவம் சித்திக்க
- ஆழ மூழ்கு

எங்கும் பிரமம், எதிலும் பிரமம்
உள்ளதும் பிரமம், இல்லதும் பிரமம்
உண்மையும் பிரமம், பொய்மையும் பிரமம்
இருப்பது ஒன்றே, அதுவும் பிரமம் - அதனால்
- ஆழ மூழ்கு

பேதம் அற்றது பிரமம், பேச்சற்றது பிரமம்
போதம் அற்றது பிரமம், புண்ணியமானது பிரமம்
தூயதும் பிரமம், துளங்குவதும் பிரமம்
மோனமும் பிரமம், முக்தியும் பிரமம் - அதனால்
- ஆழ மூழ்கு

**அருணாசலத்தான்** 02.10.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்வாங்கு மனமே

உள்வாங்கு மனமே, ஆழ உள்வாங்கு - உள்வாங்கு

எண்ணம், காற்றென, விரியும் மனமே
உண்மை சொருபம் காண வேண்டிடில் - உள்வாங்கு

விசாரணைக்கு முன் உண்மையாகவும்
விசாரணைக்கு பின் பொய்யாகவும்
உளது எதுவோ, அதுவே மாயை
மனதின் சொரூபம், மாயை, அதனால் - உள்வாங்கு

ஆசை அற்று, அசுத்த வாதனைகள் ஓய,
பலன் அற்று, சுத்த கருமம் செய்து
அழுக்கது கழுவியே, சிறுக சிறுக
நிர்மலமாய், ஞான பூமியில், ஏறவே - உள்வாங்கு

அவித்தை, ஆசை, துன்பக் கர்மம்,
தடை செய், முடிச்சுகள் மாய
துர்ச் சங்கம் ஓய, சங்கல்ப நாச,
ஆத்ம தரிசன, உபாயம் கொண்டு - உள்வாங்கு

மனம் அற்ற, பரிசுத்த, வெளியில்
அத்வைத பூரண நிலையின்,
ஆனந்த ஆழியின், அனுபவம் ஆகி,
சுத்த ஒளிர், பிரம்மாகித், திளைத்திட - உள்வாங்கு

அருணாசலத்தான் 02.10.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலறிவுடை மகான்கள்

வாலறிவுடை மகான்களுக்கு வணக்கம் **- வாலறிவுடை**

மறை அறிவு, அனுபவக் குன்றேறியோர்,
துறை அறிவு, மாண்புடைய **- வாலறிவுடை**

கலைகள் பலவகை, படைக்கும் நிலைகள், பலப்பல
தொழில்கள், ஓவியம், காவிய உரு,
வெளிப் படு வகை, தாக்கம் எண்ணில,
ஆடும் சக்தி, ஆனந்த ரூபம், அனந்தம் - எனும்
**- வாலறிவுடை**

பிரமம் இரு நிலை- தடத்தம், சொரூபமாம்
சொரூப பத்தியே, தடத்த அனுபவ வழியாம்
சித்த சுத்திக்கு, பக்தி செய்வாய்-
தூய, கண்ணீர் பெருக, அழுவாய் - எனும்
**- வாலறிவுடை**

மனம் அடக்கல், யோகம், என்றார்
மயல் அறுத்தல், ஞானம் என்பார்
மனம் நசித்தால், மாய திரைகள் விலகும்,
மயல் அறுத்தால், ஆத்ம தரிசனம் தானாம் - எனும்
**- வாலறிவுடை**

**அருணாசலத்தான்** 30.04.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவன் இந்து –யார்?

சைவன், இந்து யாரெனக் கேளீர் **- சைவன்**

சிவன், விஷ்ணு, அம்பிகை, பிரம்மம்
சம்பந்தம் உடையவனே, சைவன் **- சைவன்**

தள்ள வேண்டிவை, என்றும் தள்ளிடுவான்
(கோபம், காமம், களவு, கொலை, மோகம், லோபம், கபடம்)
கொள்ள வேண்டியவை, நாளும் கொண்டிடுவான்
(தயை, கருணை, அன்பு, கொடை, ஒப்புரவு, சான்றான்மை)
சித்த சுத்தி கை வரவே, சாதனை செய்திடுவான்
தொண்டன், அடியன், எனவே உலவிடுவான் **- சைவன்**

நாளும் பொழுதும், சிவன் நாமம் பாடிடுவான்
சிவனெனவே, எக் கணமும் வாழ்ந்திடுவான்
தடத்தம், சொரூபம் அறிந்திடுவான்
தண் அருள் கொண்டு, இலங்கிடுவான் **- சைவன்**

கருமக் கழிம்பு எரித்து, சித்தம் சுத்தமாகிட
வேதமும் சாஸ்திரங்களும், ஓதாமல் வெளியாகும்
ஐயனும் ஆன்மாவும் ஒன்றாகிட, அலை எழும்பும்
அகிலம் முழுமையும், பரவியே தானாகும் **- சைவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேக வைராக்கியம், சத்தியம், சாந்தம், பூண்டு
பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வர, சொரூபமாகி
அட்டமா சித்தியும், அகிலமும், ஒன்றாகிட
நாம ரூப கட்டறுத்து, அகண்டமாகிடுவான் **- சைவன்**

தானேயாகி, தண் அருளுமாகி, தாயாகி
சொல்லும் செயலும் அற்று, அத்துவித
சிவமாகி, சிவோகமாகி தைல தாரை என
பிரம, சிவமே, சிவோகம், சிவோகம் **- சைவன்**

**அருணாசலத்தான்** 11.03.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரணன் நீ

எழுவாய், எழுவாய், என் குழந்தாய்,

- எழுவாய்

ஞான சூரியன் நீ, உலகின் ஜோதி நீ,
மயல் போக்கி, சோம்பல் நீக்கி,

- எழுவாய்

அச்சமில், நிலையம் காட்டி,
ஆறாதார, சக்தியும் கொண்டு,
பாரெல்லாம், காலடியில் தலை சாய,
இராஜ யோக சிம்மமாய், மிளிரவே

- எழுவாய்

வீர நரேந்திரன், என்றும் உன்னை,
விரைவுடன் வருகென, கூவி அழைக்க,
திடம் கொண்ட தீரனாய், என்றும்
சூன்றா நிறைவுடன், சக்திச் சிம்மமாய்

- எழுவாய்

அம்மை சாரதை, உளம் அறிவாய்,
இம்மை துயர், இடர் களைவாய்,
மும்மைக்கும், முதல்வன் நீ, மூலவன் நீ,
செம்மை பெறு, சத்தியயன் நீ, பூரணன் நீ

- எழுவாய்

24.02.2002

**அருணாசலத்தான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவா எங்களை தண்ணருளாய்....!

ஆண்டவா எங்களை தண்ணருளாய், மேலோங்கும் உக்கிரமாய், வைத்து, கண்டத்திரை நீக்கி, பூரண நிலையில் ஸ்திரப்படுத்தி, வேதத்தின்

அந்தரங்கத்தை

எங்களில் நின்றும் வெளியாக்கி,

(எவ்வறிவு அகிலத்தார் நினைவிற்கு வேறாகி,

தேவையற்றதாய்)

சதானந்த சொரூபமாய் விளங்குகின்றதோ

அவ் அறிவோடு வைப்பாயாக.

**- தாளையான் சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் தத் சத்

## சிறப்புப் பாயிரம்

## திரு மயிலை வித்வான் சண்முகம் பிள்ளை அவர்கள் பாடிய அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தங்கள்

**பொன் பூத்த செங் கமலப் புத்தேளும் புயல் பூத்த புரை தீர் மேனிக்,**
**கொன் பூத்த சுடராழிப் படைத்தேவு நிலமாறிக் குழகற் தேடித்**
**தென் பூத்த சிறகரகனஞ் சூகரமாச் சென்று அறியாத் திறல் சால் செஞ் சொல்**
**மன் பூத்த நடு நாட்டை வடக்கட் கொண்டோங்கு தொண்டை மா நன் நாடு (1)**

**அந் நாடு செய் தவமா நால் வகை ஆச்சிரமத்தின் நுணுகி வாழுஞ்**
**சொன் நாடு குடி வளனும் இறை நீற்றின் படிவம் எனத் தோன்றி யார்க்கும்**
**பொன் நாடு மகிழ் பூப்ப வரு பாலி நீர் வளனும் பொதுளி ஓங்கு**
**முன் நாடு சீர் வளத்த ஈசூரர் என்றொரு நகர முகிழ்க்கு மன்றே (2)**

**அன்ன நகர் வயின் நன்று வாத நாராயணன் வகுத்த அமல ஞானந்**
**துன்னு உப நிடப் பொருளாஞ் சூத்திரத்து உட் பொருள் தோன்றச் சுருதி அன்ன,**
**நன்னர் சங்கராரியன் முன் நாட்டு பாடியங் கடுப்ப அவை தீர்ந்தோங்க,**
**இன்னலுறுவார் இடர் நின்றேற ஒருரை வகுத்தான் இனிது மாதோ (3)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற் சுருங்கல் பொருள் விளங்கல் சொல்ல இனிதாதல்
அருஞ் சொற் புணர்த்தல், கற்குநருக்கு இன்னோசை, பொலிதல்
ஆழ்ந்து இருத்தல், கவின் முறையில் நிற்றல். ஒற்கமில் சீர்
விழுமியது பயத்தல் அலைவது தீர்தல் ஓங்கு காட்டா, நிற்கு நெறி
ஆதலெனத் தகு வனப்பு நனி என்று நிலவ மன்னோ (4)

இன்ன உரை உரைத்தனன் யா ரெனின் நன்றது அடுத்த
வரை என்றும் தன் போல், உன் அருஞ் சுவானு பவந்தனை
எய்தச் செய்கிற் போனொருவாது என்றும், தன் நிகர் சீர்
பொதுளிய அக் குறட்கு உரை செய்த பதின்மரும் இத்தரணி
தன்னில், நன் அருஉருக் கொண்டு இவண் வந்தனை சச்சிதானந்த நாம
மேலோன் (5)

இன்ன உரை கர லிகிதத்து உள் புத் தீர்த்தளித்தி என
இயைந்து நின்று, மன்னும் அவனடித் தொண்டாம் அத்துவிதச்
சபையினர் தாம் வருந்திக் கேட்ப, என் இனிய நண்பன்
தோவளத் துரைசாமிக் குரிசில் இதனை ஓர்ந்திட்டு அன்ன எழுதா
எழுத்திற் பொறித்து அளித்தான் அவன் கீர்த்தி அறைதற் பாற்றோ (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் உரையாசிரியர் மாணாக்கர்
அ. முநிசாமி நாயகரவர்கள் செய்த
நேரிசை வெண்பா

சொருப ஞானந் தனையே தொல் உலக மெய் அச்
சொருப ஆனந்த குரு சொன்ன – ஒரு சொருப
சாரமதற்கு ஈசூர் வாழ் சச்சிதானந்த எம்மான்
பாரில் உரை சொற்றான் பரிந்து

திரு முக் கூடலில் சதா நிட்டரால் எழுந்தருளி இருக்கும்
முனியப்ப சுவாமிகள் மாணாக்கர் மணி மங்கலம்
திரு வேங்கட முதலியார் இயற்றிய
அறு சீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்
சிறப்புப் பாயிரம்

சொரூப நிலை இஃதென மாமறை கிளத்தும் பரிசனைத்துந் தொகுத்து
அஞ்ஞான்று,
சொருப ஆனந்த தேசிகன் தென் மொழி யினின் நவின்ற துணிபை ஓர்ந்தச்,
சொரூப ஞானப் பெயரின் ஓங்கு நூற் கோர் உரையைச் சொற்றான் தானே,
சொருபம் என் நனி இலங்குஞ் சச்சிதானந்தன் எனுந் தோன்றன் மாதோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு மயிலை வித்வான் சண்முகம் பிள்ளை அவர்கள் மாணாக்கர்
மணவூர் - முனிசாமி முதலியார் பாடிய
நேரிசை வெண்பா

சீர் சொரூப சாரக்குச் செய்ய உரை உரைத்தான்
பார் புகழ் வேதாந்த முதற் பாவலன் என்றேர் குலவு
சச்சிதானந்தம் உணர் சான்றோன் எழில் ஈசூர்ச்
சச்சிதா னந்தன் தக

சிறப்புப் பாயிரம் முற்றிற்று

இந் நூல் உரையாசிரியர் மாணாக்கர் சேலம்
திரு. கோமளேசுவர முதலியார் இயற்றிய
நேரிசை வெண்பா

கீர்த்தி மிகுஞ் சச்சிதானந்த குரு தேசிகன் தன்
ஆர்த்தி மிகுந் தொண்டர் அறிந்து உய்யப் - பூர்த்தியதாய்த்
தந்திட்டான் ஒருரையைத் தற் சொரூப சாரம் அதாய்
முந்திட்ட நூலதற்கு முன்.

சிறப்புப் பாயிரம்
கட்டளைக் கலித்துறை

சொரூப ஞானச் சுடர் கண்டு அடியார் உய்யத் தோன்றிய சீர்க்
குருபரனாஞ் சச்சி தானந்த வள்ளல் குளிர்ந்து மனந்
தரு பொருள் எல்லாந் தனைத் தெளிதற்கே தகுவது எனச்
சொரூப சாரத் தொன்மை நூற்கு ஒருரை தனைச் சொற்றனனே ( )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சொரூப சாரம்

## மூலமும் உரையும்

## சொரூப வணக்கம்

நேரிசை வெண்பா

**சிற் சொரூபந் தானே செக சொரூபம் ஆன எலாந்**
**தற் சொரூப சாரமாச் சாற்றவே - பொற் சொரூபம்**
**அச்சு உருவாம் போல அது அதுவாத் தோற்றும் ஒரு**
**சொச் சொரூபந் தானே துணை**

(இதன் பொருள்)

**சிற் சொரூபந் தானே செக சொரூபம்:** களங்க ரகிதமாக நின்று விளங்கும் ஞான சொரூபமே திரிசியமாகக் காணப்படுஞ் செக சொரூபங்களாம்.

**ஆன எலாந் தற் சொரூப சாரமாச் சாற்ற:** அங்ஙனமாய செக சொரூபம் அனைத்துந் ததாகார நிலையினதாக மீண்டுங் கணத்தில் விளங்கு முறைமையை ஐயந் திரிபறக் கூறுவான் வேண்டி.

**பொற் சொரூபம் அச்சுருவாம் போல:** உருக்கிய இடத்துப் பொன்னாகிய சொரூபம் நானா விதமாக் கட்டிய அச்சு உருவங்கள் எங்ஙனம் எங்ஙனமோ அங்ஙனம் அங்ஙனமாகப் பாய்வது போன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அது அதுவாத் தோற்றும் ஒரு சொச் சொரூபந் தானே துணை:** எவரெவர் விருத்திகள் எங்ஙனம் எங்ஙனமோ, அங்ஙனம் அங்ஙனமாகத் தோற்றுதலை இயல்பாகவுடைய முன்னர்க் கூறிய ஒப்பற்ற ஞானப்பிரகாச சொரூபமே, எனக்குத் துணையாய் நின்றுள்ளது, வேறு அன்றாம்.

**(கருத்து)** ஆனவெலாம் என்ற பன்மையால் செக சொரூபங்கள் என்றாம். சாற்றவே என்பதில் ஏகாரம் அசை நிலை. சிற் சொரூபம், செக சொரூபம், தற் சொரூபம், சொச் சொரூபம் என்பவற்றுட் போந்த சொரூபம் என்பன: ''ஒன்றொழி பொதுச் சொல்'' என்னும் இலக்கணத்தால் பொருள் அமைந்தவாறு காண்க. யாம் இருக்கும் அண்டம், எமக்கு இடமாகுமாறு போன்று அளவையில் அடங்கா நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலிய பற்பல அண்டங்களாக ஆகாயத்தில் தோற்றுவன அனைத்தும், அவரவர்க்கு இடமாகும் எனக் கணித்தற்கு முரண் என்னை? உளதேல், பூகோள சாஸ்திர கணிதர்களால் இயைந்த, தூர திருஷ்டிக் கருவிகள் கொண்டு கண்டு பிடித்த நில, நீர் முதலிய குறிகளும், அவற்றாற் கணிக்கப் பெறுங் கிரகணங்களும், உற் பாதங்களும் இன்னும் இவை போல்வன பிறவும், ஆங்காங்குக் காணப் படாதிருக்க வேண்டும்: அங்ஙனம் இன்றேல், ஆங்காங்கு அவ் அவ் அண்டங்களும், இவ் அண்டம் போல, உயிர்களுக்குப் போக பூமியாக வேண்டும். அன்றெனின், இவ் அண்டம் போக சாதனக் கருவி அன்றாக வேண்டும். இங்ஙனங் கூடாதெனின், அங்ஙனங் கூடாது. இது பிரத்தியட்சம் எனின், ஆங்காங்கு உள்ளார்க்கு அவை பிரத்தியட்டசம் ஆகும் அன்றோ? இதை மறுத்தல் கூடாது: ஆதலின், செக சொரூபம் எல்லாம் என்றார். சிற் சொரூபம் நிர் விகாரம், செக சொரூபங்கள் விகாரம். நிர்விகாரம் விகாரங்கள் ஆனமைக்குச் சோதனை, ஞாயம், பொருத்தம் கூறுமாறு ஞானமன்றி அஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுளதேல், அஞ்ஞானத்தை அன்றிச், சகமெனல் வேறுளதாம். அங்ஙனம் இன்றெனின், மாறென்னை உளது? இங்கே, ஞானம் எனலும், அஞ்ஞானம் எனலும் பொருளைப் பொருளாகக், கோடலும், அல்லவற்றைப் பொருளாகக் கோடலுமாம். அதாவது: அதிஷ்டானம் எனற்கு இயைந்தது, இனி யாதோ ஏதுவினாலும் ஆரோபமெனற்கு இயையாதது, ஞான மெனவும், இயைந்தது அஞ்ஞான மெனவும், பொருள் தரக் கிடந்ததை கண்டு, கருத்துப் பொருளையேனுங், காட்சிப் பொருளையேனும், வழுவாது உரை அமைத்துக் கொள்க. சுருதி, குரு, சுவானுபவம் ஒத்தமைந்தது, உள்ளத் தெளிவாதலால், அதனை ஞானமெனவும், அல்லாததை அஞ்ஞானம் எனவுங் கோடற்கும் அமையும். சாற்றாத் துணையென முடிக்க, சாற்றாவெனற்கு எழுவாய் எனவும், துணை என்னும் பெயர்ப் பயனிலைக் கெழுவாய் சொரூபந் தானெனவுங் கொள்க. சொச் சொரூபந் தான், என்னாது, சொச் சொரூபந்தானே எனத் தேற்றேகாரந் தந்தது, வேறிது போற் சிறந்தது எனற்கு. அது அதுவாத் தோற்றும் என்றதனால், எல்லாமாய் இருக்கும் அவசரத்தையும், தற் சொரூப சாரமாச் சாற்ற என்றதனால், அல்லவுமாய் இருக்கும் அவரசத்தையும் பெற்றாம். பெறவே, சிற்சொரூபம் இனையதென உணர்த்தக் கண்டாம் என்க. சிற் சொரூபந்தானே என்பதில் ஏகாரம், ஏனையவற்றின் திரிபு: செகத், அன்றெனக் காட்டப் பிரித்து நிற்கையால், பிரி நிலை எனினும் அமையும். ஆமென்னுமாக்க வினை எஞ்சி நின்றது. இங்ஙனம் ஆயாவிடத்து உரை இடுதல், இக் கவி ஏலாதென்பது கருத்து. சிற் சொரூபம் உபாதானம், செக சொரூபம் உபாதேயம் என்க. **ஞானப் பிரகாசமே ஆன்மா** ஆதலால், ஆத்ம சொரூப வணக்கம் என்பதே, சிறப்பு. ஆத்மாவானது தனது யதார்த்த வடிவினையும், தனது கற்பித வடிவினையும் ஆய்ந்து கணித்தற்கு வல்லதாதல் என்க. இத் தலைச் செய்யுள், தெய்வ வணக்கமாதலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவற்றுள் ஒன்றெனக் கூட்டற்க. ஆய்தலிற் தேர்ந்த சொரூப வணக்கமாதலின், வழிபடு கடவுள் ஏற்புடைக் கடவுள் என்னற்க. இவ் வணக்கத்தாலாய பயன் **''ஏகமேவாத்வைதம் பிரமோகம்''** எனலும், **''துவாத சாந்தப் பெரு வெளி''** எனலுமாம். இந் நூலாசிரியர், வேறல்லராதலின் சொரூப ஞான தேசிகரெனத் தனக்கு அமைந்த பெயரையே, தன்னால் இயற்றப்பட்ட இந் நூற்குச், சொரூப சாரமெனப் பெயர் தந்தது, காரண இடு குறியாம் என்க. ''பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப் பிண்ட மாகக் கொண்டு உரைப்பதுவே'', என்பது இலக்கணமாதலின், பொழிப் புரை என்றாம். இந் நூன் முழுதுந், துதி கவியில், வணக்கம் பேதமாக, அமைந்தது போலக், காரண காரிய வாதம், அம்சாம்சிக வாதம், குண குணி வாதம், பிம்பப் பிரதி பிம்ப வாதம், விகார வாதம் என்னும், இவ் ஐந்து அபேத வாதமும், சுருங்கச் சொல்லல் என்னும் பத்து அழகும், கூறியது கூறன், முதலிய பத்துக் குற்ற நிவிர்த்தியும் அமைந்து கிடப்பதை, மிக்க நுண்ணிய உணர்வினானும், ஆழ்ந்த கேள்விப் பெருக்கானும் உய்த்துணர்க. இனி, விரிக்கிற் பெருகுமாதலின் சுருக்கி உரைத்தாம்.

## நூல்

**(அவதாரிகை)**

**ஞானப் பிரகாசமே, ஆன்மா எனின், சுசாதிகம், விசாதிகம், சுவகத பேதம் என்னும் விகற்ப பேதங்கள் அற்றிருக்க வேண்டுமே** என்ற சங்கைக்கு உத்தரம், இக் கவியிற் கூறுகின்றது.

**பூதாதி ஐந்து பொறி புலன்கள் எல்லாஞ் சித்தே,**
**ஆதி, அந்தம் அவை எல்லாஞ் சித்து ஓதரிய கற்பனையுஞ் சித்து,**
**அனைத்துங் காண்பானுங் காட்சியுஞ் சித்து,**
**அற்பமும் வேறு இல்லாமையால்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இதன் பொருள்]

**பூதாதி ஐந்து பொறி புலன்கள் எல்லாஞ் சித்தே.**
**ஆதி அந்தம் அவை எல்லாஞ் சித்து**

பூதம் முதலியவைகளும், ஐந்து பொறிகளும், ஐந்து புலன்களுமாகிய இவை அனைத்தும் ஞானமேயாம். இஃதன்றியும் இவை அனைத் திற்குக் காரணமாகிய மூலப் பிரகிருதி முதற் பஞ்ச தன்மாத்திரை இறுதியாகக் கிடந்தவை அனைத்தும் ஞானமேயாம்.

**ஓதரிய கற்பனையுஞ், சித்து, அனைத்துங் காண்பானுங் காட்சியுஞ் சித்து**

அற்பமும் வேறில்லாமையால்: யாவரானுங் கணித்தற்கு அரிய கற்பனைகள் எனப்பட்டவைகள் அனைத்தும் ஞானமேயாம். எல்லாவற்றையும் காண்பானாகிய ஞாதுருவும் அந்த அவன் அறிவாகிய ஞானமும் மெய் உணர்வேயாம். ஏனெனின் அந்த மெய் உணர்வுக்கு, யாதும் வேறு இல்லாமையால்.

**(கருத்து)** தனித் தனி பயனிலை ஆக்கினும் ஒன்றாக்கினும் அமையும் என்று இலக்கணம் இருப்பதால் உய்த்து உணர்ந்து அமைத்துக் கொள்க. என்னை? ''ஒரு பொருண் மேற் பல பெயர் வரின் இறுதி - ஒருவினை கொடுப்ப அனியும் ஒரோவழி'' என்பது இலக்கணம், ஆகலின், பிரக்ஞை அன்றி அவத்தாத் திரயங்களும், காட்சித் திரயங்களும், அபிமானத் திரயங்களும் அயலோ? தனது விகாரமோ? அயலெனின், சோதனையில் தனது விகாரமாக முடியாது இருக்க வேண்டும்: விகாரமெனின், தன்னைத் தவிர விசாரம் வேறாய் இருக்க இயைய வேண்டும். ஆதலின் அனைத்தும் ஞெப்தி மயம் எனற்கு மாறு என்னை? இன்றேற் கொள்ளற் பாற்று: அன்றேற் தள்ளப் பாற்று. தள்ளப் படுபவைகளுங் கொள்ளப் படுபவைகளும் அன்னியம். அன்றாதலின், சுசாதிக முதலிய மூன்று பேதங்களும், தனக்கு இன்மையால், ஞானப் பிரகாசம் மெய் எனற்கு இக் கவி தக்க உதாரணம் என்க. மெய் அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல், மெய் அறிவு இன்மையின், சுகாதிக பேதமும், மெய்யறிவுக்கு வேறாகச் சகமாதி இன்மையின் விசாதிக பேதமும், அந்த மெய்யறிவு நிரவயவமாகவும் களங்க ரகிதமாகவும், உபாதி ரகிதமாகவும், சதோதயமாகவும் விளங்கலிற், சுவகத பேதமும் இன்மையால், ஞானப் பிரகாசம் போல்வது, வேறு இன்றென வஸ்து சோதனையாற் கணித்தாம். ஐந்து என்பதனைப் பூதத்திற்கும், பொறிகட்கும், புலன்கட்கும் ஒட்டுக. எல்லாம் என்றது, இவை போல்வன பிறவும் எனக் கோடற்கு நின்றது. இவற்றிற்கு எல்லாம் ஏதுவாய் நிற்றலின், மூலப் பிரகிருதி முதலியவற்றைக் கொண்டாம். காண்பானுங் காட்சியும் என்றதனாற் கற்பனை என்பதனைக், காணும் பொருளாகக் கொள்க. இக் கவியினது கருத்து, அதிஷ்டான நாட்டம் இல்லாதார்க்கு அமையாது. எங்ஙனம் எனின், பொன் நாட்டம் இல்லாதாருக்குப் பணி அனைத்தும், பொன்னெனின் ஐயந்திரிபறாவாறு போலும் என்க. (1)

**(அவதாரிகை)**

அந்தப் பர வஸ்து சச்சிதானந்த மயம் எனற்கு, முன் கவியில் சித்தே, சத்தென்றது போல. இக் கவி சத்தே, சித்தெனலைக் கூறுகின்றது.

**புத்தி விகற்பத்தாற் பொருந்து சகபேதம், எலாஞ்**
**சத்தியம் போற் தோன்றுவது சாட்சி அன்றோ - முத்தி முதற்**
**சுத்தம் அசுத்தஞ் சுகா சுகங்கள் உள்ளதில**
**அத்தனையுஞ் சத்தாதலால்.**

[இதன் பொருள்]

**புத்தி விகற் பத்தாற் பொருந்து சக பேதம் எலாஞ்**
**சத்தியம் போற் தோன்றுவது சாட்சி அன்றோ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயந்திரிபு அகலாத புத்தி விகற்பத்தினால் பற்பல விகற்ப பேத ரூபமாக எழும் சகம் முதலிய பேதங்கள் அனைத்தும் உண்மை போற் காணப் படுவது எவற்றிற்குஞ் சாட்சியாக விளங்கு மெய் உணர்வாவதன்றோ?

**முத்தி முதற் சுத்தம் அசுத்தஞ் சுகா சுகங்கள் உள்ளதில்**
**அத்தனையுஞ் சத்தாத லால்**

நிர்வாண நிலை முதல் கீழ்க் கொண்டு உணரத் தகுஞ் சுத்தம், அசுத்தம், சுகம், அசுகம், உள்ளது இல்லது முதலியனவும் இவை போல்வன பிறவும் சத்தெனப்படுந் தன்மையாதலால்.

**(கருத்து)** எழு வகைத் தோற்றங்களும் மீண்டு மண்ணாதலின், பிருதுவியின் கூறு என்றெனலாகாது. பட்சி பேதங்களைச் சலத்தில் ஊர்வன எனவும், மனித பேதங்களை மிருக பேதம் எனவும் ஒன்றை ஒன்றாகக் கூறற் பாற்றோ? அன்றெனவும் ஆமெனவுங் கோடற்கு இயைந்தது, பிருதுவி எனின் கர்த்தத்துவம், அசேதனத்துவம் உண்டாயிருப்பானேன்? இவ் விகற்பம் புத்திக்கு ஆதலின், ''புத்தி விகற்பத்தாற் பொருந்து சக பேதம்'' என்றார். இவை அனைத்தும் புத்தியை அன்றித், தாமோர் முதல் அன்றாதலின் ''சத்தியம் போற் தோன்றுவது'' எனவும், இவ் விகற்பஞ் சகலத்தில் அன்றிக் கேவலத்தல்'' இன்மையின், உண்டெனவும் இன்றெனவும், சாட்சியாய் நின்று உணரத் தக்கது. மெய்யுணர்வு ஆதலால் அதன் ''சாட்சி'' என்றார். விடுதி முதற் பந்தம் இறுதியாகக் கிடந்தவற்றுள் இடையிலுள்ள நிலை அனைத்துஞ் சிதாகாயப் பிரதிபலனமாதலின், ''முத்தி முதற் சுத்த அசுத்தஞ் சுகா சுகங்களுள்ளதில் அத்தனையுஞ் சத்தாதலால்'' என்றார். சிற் பிரகாசத்தைச் சாட்சி எனவும், சிதாகாயத்தைச் சத்தெனவுங் கோடற்கு இயைதலின் சத்தே சித்தென்றாம். அனைத்துஞ் சிதாகாயப் பிரதி பலனம் என்றறிந்தார். சிற் பிரகாசத்தால் அன்றி வேறெதுவால் அன்றாதலின் சத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தெனவும், சித்தே சத்தெனவும், அமையுமாறு அறிந்தது ஐக்கிய நிலையுறுவர். ஏனையர் ஐக்கியங் கொள்ளுமாறு எங்ஙனம்? கொள்வர் எனின் அசத்தைச் சத்தெனவும், சடத்தைச் சித்தெனவும் ஏற்றற்பாலர். ஆதலினாலும், ஐயந்திரிபு அகன்றார் அல்லாரா தலினாலும் அது மறுக்கற்பாற்று. அனுபவ நிலை உணராதார் ஐக்கியஞ் சாதித்தல், சொல்லால் அன்றிப் பொருளாலும் எனின், ஆனந்தப் பேறு அயலாக முடிவதென்னை? இது நிற்க அறிவறி யாமை அடுக்குகளும், உபாதான உபாதேய அடுக்குகளும் கழற்றிப் பொருளுணர்த்த அறியாதார் அசி பதத்திற் கென் செய்வர்? ''ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற, நன்றெழி ஞாண நான் முகன்'' என்னுங் கவிக்கு உரையும் ''எல்லாமாய் அல்லவுமாய்'' என்னுங் கவிக்கு உரையும், எங்ஙனம் ஐயந்திரி பின்றிக் கூற வல்லார்? பொருள் அல்லவற்றைப் பொருள் எனக் கொள்ளும் விவேகிகளாதலின் என்க. எவ்விதப் பாஷா நிபுணரும் குணத்தைக் குணி எனவும் ஆதேயத்தை, அதிஷ்டானம் எனவும் கோடற்கு உணர்வு தரற் பாலது பாஷா ஞானமாதலின் அஃதவர் கூறுஞ் சித்தாந்தப் பேறு முத்தி அன்று என்க. **முத்தியைத் தரத் தக்க கல்வி, வேறாய் இருத்தலின் ''திரி வித உலகத் அரிதொரு ஞானி'' என்றார் அறிஞர்.** சத்துஞ் சித்து மொத்த நிலையைக் கூறியது என்பது கருத்து. என்னை? ''சத்தே சித்தாகும் அயலெனில் சடமாகும், அசத்தானாற் சாட்சி எங்கே, சித்தே சத்தாகும் அயலெனிற் சடமாஞ். சடங்களுக்குத் திதியும் இல்லை, ஒத்தே தோன்றிய சத்துஞ் சித்து நல்ல சுகமாகும் மூகத்துக்கோர், வித்தே அன்னிய மாகிற் சடம் அசத்தாஞ், சுகானுபவம் விளைந்திடாதே'' என்றார், தாண்டவராய சுவாமிகள். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவதாரிகை)**

சத்துஞ் சித்தும் ஒத்ததே ஆனந்தப் பேறாதலின் அதனை இக் கவி கூறுகின்றது.

**பார்த்த திசை எல்லாம் பரி பூரண சொரூபந்**
**தீர்த்தம் எல்லாம் ஆனந்த சிற் சொரூபம் - கீர்த்திக்குந்**
**தோத்திரங்கள் எல்லாஞ் சுக சொரூபம் நம்மை அல்லால்**
**வேற்றுருவம் ஏதாகுமே**

[இதன் பொருள்]

**பார்த்த திசை எல்லாம் பரி பூரண சொரூபந்**
**தீர்த்தம் எல்லாம் ஆனந்த சிற் சொரூபம்**

இங்ஙனமாய சுவானுப நிலை எய்தினோனுக்கு, அவன் சென்று கண்ட, திசை அனைத்தும் பரிபூரண சொருபமாயும், அவன் சென்று ஆடிய தீர்த்தங்கள் அனைத்தும், ஆனந்த சிற் சொருபமாயும்.

**கீர்த்திக்குந் தோத்திரங்கள் எல்லாஞ் சுக சொருபம்**
**நம்மை அல்லால் வேற்றுருவம் ஏதாகும்**

புகழ் அமையச் செய்யும் தோத்திரங்கள் அனைத்தும் சுக சொரூப மாயும் இருக்கும். இங்ஙனமாய அனுபவப் பேறு அனைத்தும் நம்மை அன்றி வேற்றுருவம் எங்ஙனமாகும்?

**(கருத்து)** ஏ - அசை. ''பார்த்த திசை எல்லாம்'' எனலைத் தலங்கள் எனவும், ''தீர்த்தம் எல்லாம்'' எனலைக், கங்கை முதலிய நதிகள் எனவும், ''கீர்த்திக்குந் தோத்திரங்கள் எல்லாம்'' எனலை, மூர்த்திகள் எனவும், அமையக் கிடந்தமை காண்க. எனவே, **இவ் அனுபூதி நிலை உடையோனே மூர்த்தி, தலம், தீர்த்தம் எனப் பெற்றாம். இந்தச் சுவானபவ நிலை, நமக்கு எய்தின், விகற்ப வடிவங்கள் அனைத்தும், ஆனந்த வடிவமாகக் காணும்.** ஆதலின் ''நம்மை அலால் வேற்றுறுவம் ஏதாகும்'' என்றார். சச்சிதானந்தம் எனற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஸ்து நிலை. இங்ஙனமாதலான் இஃதறியார், இம் மொழியைத், தாம் எடுத்தாளுதலின் என் பயனாம்? இதனினும் வாய் பொத்திக் கிடக்கை, பிறர் மதிக்கைக்கு நன்கு சிறப்பு! இங்ஙனம் ஆய்ந்து உணர்ந்தாருக்குத், தமது ஆனந்தப் பெருக்கே, எங்கும் நிறைந்து காணும் எனற்கு மாறென்னை? உளதேல் கள்ள நாயகனால், எய்திய ஆனந்தப் பெருக்கு, அவனை, விடாமல் எங்குமாகக் காணுதல், பொய்யோ? மெய்யோ? பொய்யெனின், வினை தொடர்வது எற்றிற்கு? ஆதலிற், சிற்றின்பத்தைக் காட்டிலும், பேரின்பம் அளவின்மையின், ஐயந் திரிபின்றி, இஃது எவரும் ஏற்றற் பாற்று, இங்ஙனமாய பேரின்பம் வாய்த்த விடத்து, ஆலிங்கன முதலிய பலவற்றாற், சிற்றின்பங்களைப் புகட்டினுந் தினைத் துணையும் இன்மையின், கண்ண பிரானை நித்திய பிரமசாரி என்றார். இஃது ஏற்றற் பாற்றோ? தள்ளற் பாற்றோ? தளளற் பாற்றெனின், சிற்றின்பப் பேற்றின் மிக்கோர்க்குப் பேரின்பப் பேற்றை எங்ஙனம் எடுத்துப் புகட்டினும் ஏலாமை யென்னை? அற்ப சுகத்திற்கே இவ்வளவு மகிமை இருக்க, அளவின்றிய பேரின்ப வாழ்விற்கு எவ்வளவு மகிமை இருக்கலாம்? ஆதலின் ஏற்றப்பாற்று என்க. அற்ப வின்பத்திற்கு உடல் பொருள் ஆவி காணா விடத்து, இதற்கென்னை கூறுவது? என்னை?

**''அசத்தில் எம் மட்டு அண்டம் மட்டும் பரா முகமாகினாய் அம் மட்டு,**
**நிசத்தில் உன் விழிப் பார்வையால், இப்படி நிரந்தரப் பழக்கத்தால்,**
**வசத்தில் உன் மனம் நின்று, சின் மாத்திர வடிவம் ஆயிடின் மைந்தா,**
**சுசத்த தேகத்தில் இருக்கினும் ஆனந்தக் கடல் வடிவு ஆவாயோ''**

வடிவாகிய நம்மை அன்றி வேற்று உருவம் உளதேல் ஆனந்தமும் வேறு உளதாம். அங்ஙனம், இன்றெனின், இங்ஙனமும் இன்றாம். இதனாற், பிரக்ஞானம் பிரமம் என்றது இருக்கு வேத மகா வாக்கியத் துணிபென்க. அறிவே ஆனந்தானுபவம் ஆதலின் பிரக்ஞானமே பிரமம் என்றார் என்பது கருத்து. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அவ தாரிகை)

இது வசன மாத்திரமாம் எனின் அனுபவம் உண்டென இக் கவி கூறுகின்றது.

**அப்பா, சகத் தோற்ற ஆதாரம் எல்லாம், நீ**
**பொய்யாது சோதி எனப் போதித்தான் - மெய்யாக**
**உற்றுணரின் நானென்று உரையா ஒருவர் இலை,**
**முற்று உணர்வான், நானே, முதல்.**

[இதன் பொருள்]

**அப்பா சகத் தோற்ற ஆதாரம் எல்லாம் நீ**
**பொய்யாது சோதி எனப் போதித்தான்**

ஐயனே! சகந் தோற்றுவதற்கு ஆதாரம் யாதெனக் கேட்ட மாணாக்கனை நோக்கி எல்லா விதங்களாலும் சிந்திக்கும் இடத்து நீயே ஆகும், அது பொய் அன்று, நீ சுயஞ் சோதி வடிவமாதலின் என உபதேசித்தனன்.

**மெய்யாக உற்றுணரின் நானென்று உரையா ஒருவர் இலை**
**முற்று உணர்வான் நானே, முதல்**

அதற்கு மாணாக்கன், ஐயந் திரிபகற்றிச் சிரவண மனனாதிகளாற் சத்தியமாகச் சிந்தித்து உணருமிடத்து எங்கணும் நானென்றும் உரையாத பேர் ஒருவரும் இல்லை. ஆதலினால் என்பதைப் பரிபூரணமாக விளங்கும் உணர்வே வடிவாகக் கண்டனன். எல்லா நானும், இங்ஙனமாதலால், யானே ஆதாரமெனக் கூறினன்.

**(பதசாரம்)** சகத் என்னாது சகத் தோற்றம் என்றது கால தேச வஸ்துவை அன்றி, ஓர் முதல் அன்றாதலின், பலவின் இட்டம் பற்றி என்க. நானெனல் முன்னிலை ஒருமை பற்றி. நீ என்றாயது, விகாரமேனும் அறிவன்றோ? விவகரிப்பான் வேண்டித் தன்மை ஒருமை, முன்னிலை படற்கையாய தென்க. சகம் வேறு, தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறாயின், ஆறாம் வேற்றுமைத் தற்கிழமை என்பம். தோற்றத்தையே, ஒரு முதலாக உடைமையின், சகமாகிய தோற்றம் என இரு பெயர் ஒட்டுப் பார்க்குக. காரணம் நீ என்னாது, ஆதாரம் நீ என்றது. தோற்றன் மாத்திரப் பொருளாகிய, அலை ஆதிகட்குச் சமுத்திரங் காரணம் என்னாதது போலாம். அது போல அறிவாகிய சைதன்னியம், தேகாதி பிரபஞ்சந், தோற்றி மறைதற்கு ஆதானமாய் இருத்தலின் ஆதாரம் எனல் பொருந்தும். ஆய்ந்து தெளியாதார்க்கு, நீ சோதி எனல் பொருந்தாது. என்னை? ''ஆயின் அறிவாய் இருப்பர் காண் அம்மானை, ஆயாத போது உலகாயிருப்பர் காண் அம்மானை'' என்றார் தத்துவராயர். அயலாக நின்றுள்ள அனைத்தும், சிற்பிரகாசந் தானாக விளங்கிய இடத்துத், தினைத் துணையுமில்லை என்பது கருத்து. (4)

(அவதாரிகை)

இஃது அனுபவமாயின் என்றும் இராததற்கு ஏது என்னை என்ற மாணாக்கனை நோக்கி, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**நம்மை அறிவே வடிவாய் நாங் கண்டோம், நம்மை அன்றிச்**
**செம்மை உலகத் திரள் காணோம் - நம்மை நாம்**
**உற்றுப் பாராது இருந்தோம் அல்லால் ஒருகாலும்**
**இற்றுப் போனோமோ யாம்.**

[இதன் பொருள்]

**நம்மை அறிவே வடிவாய் நாங் கண்டோம் நம்மை அன்றிச்**
**செம்மை உலகத் திரள் காணோம்**

ஐயனே! சுயஞ் சோதி வடிவாகிய அறிவாக, நம்மை நாம் கண்டனம். அதனாற் செம்மையாக நின்றுள்ள உலகத் தோற்றம் அனைத்தும், நம்மை அன்றி வேறாகக் கண்டிலம். இங்ஙனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுங் காணாமைக்கு எதுவென்னை என்ற மாணாக்கனை நோக்கி ஆசிரியர் கூறுவது.

**நம்மை நாம் உற்றுப் பாராது இருந்தோம் அல்லால்**
**ஒருகாலும் இற்றுப் போனோமோ யாம்**

மாணாக்கனே! நீ கேட்டது மெய்யே. சிரவணாதிகளால் நாம் இப்போது உற்று உணர்ந்தது போல, எப்போதும் உற்று உணர்ந்து இருப்பமாயின், இவ் அனுபவமாகவே விளங்குதும். இவ் அனுபவம் நிலையினராகிய யாம், எக்காலத்திலும் இல்லாது இருந்தனம் அல்லம். இங்ஙனஞ் சோதித்துப் பாராத குற்றம் அன்றி, வேறு குற்றங் கண்டிலம்.

**(பதசாரம்)** தன்மை ஒருமையாகிய நான் என்பதைப் பற்றி, முன் கவியிற் கூறி இருப்பதாற், தன்மைப் பன்மையும் அங்ஙனம் எனக் கூறற்கு வழுவென்னை? இன்றாதலின் 'நம்மை அறிவே வடிவாய் நாங் கண்டோம். நம்மை அன்றிச் செம்மை உலகத் திரள் காணோம்' எனவும், இந் நிலை எப்போது நமக்கில்லாதது, இப்போது, விசாரித்து உணர்ந்தவாறு போல, எப்போதும் விசாரித்து உணராமையின் 'நம்மை நாம் உற்றுப் பாராதிருந்தோம்' எனவும், இஃதன்றி வேறு குற்றம் இல்லாமையின் என்றும், இருந்திருப் போம் என்பார். 'ஒரு காலும் இற்றுப் போனோமோ யாம்' எனவுங் கூறியவாறு காண்க. வாச்சி யார்த்தமே இல்லாதார், இலட்சி யார்த்தம் எங்ஙனம் உறுவர்? சுயஞ் சோதி வடிவாகாவிடத்து, எவர்க்கும் இஃது உடன்பாடன்று. அந்தர் முக நாட்டம் இல்லாமையால் என்க. நம்மை நாம் உற்றுப் பார்க்கு முறைமை, அல்லவற்றை நாமெனக் கொள்ளாது, சென்று, சென்று, அணுவாய்த் தேய்ந்து, தேய்ந்து, முப் பாழையும், அகன்று அப்பால் ஞானாஞ்ஞான ரகிதமாய்த் தன்னைத் தான் செலுத்தல் என்க. இடைவிடாது உற்றுப் பார்க்கின், இடைவிடாது, விளங்குது என்பது கருத்து. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அவ தாரிகை)

ஆயின், **நானென்பது ஒன்றோ? பலவோ? என்ற மாணாக்கனை நோக்கிப், பகிர் முகத்தால் பலவெனவும், அந்தர் முகத்தால் ஒன்றெனவும் உதாரண முகத்தால் உத்தரங் கூறுகின்றது.**

**எல்லாரும் நானா இருந்து உரைப்பாராகி ஆறமை**
**அல்லாமல் ஈசன் அளவு மலர் - சொல்லாலே**
**பெற்ற மகன் தம்பிப் பிதாப் பேருரைத்து ஒருவற்கு**
**உற்ற உடல் வேறாகுமோ.**

[இதன் பொருள்]

**எல்லாரும் நானா விருந்து உரைப்பாராகி ஆறமை**
**அல்லாமல் ஈசன் அளவு மலர்**

என்னை யான் விசாரித்துத் தெளிந்தவாறு போன்று, யாவருந், தன்னைத் தான், ஐயந்திரிபற உணர்ந்திருந்து, தத்தம் நிலைகளைச் சொல்ல வல்லராயும், அவர்கள் தத்தமை அன்றி ஈசன் என்னுஞ் சொல் பரியந்தம், வெவ்வேறு பொருளுடையர் அல்லர். எங்ஙனம் எனின்,

**சொல்லாலே, பெற்ற மகன், தம்பிப், பிதாப் பேருரைத்து**
**ஒருவற்கு, உற்ற உடல் வேறாகுமோ**

ஒருவன் தன் தந்தைக்குத், தன்னை மகன் எனவும், தன் தமயனுக்குத், தன்னைத், தம்பி எனவும், தன் மகனுக்குத், தன்னைப் பிதா எனவும், பேர் கொண்டு பாவிக்கின், அவனுக்கு வாய்த்த உடல் அவன் பாவனைப் படி வெவ்வேறாகுமா, ஆகாதே. அது போல என்று அறி.

**(பத சாரம்)** பிரமா முதற் பிபீலி காந்த வரையும் நான் என்னாதார் எங்கணும் இல்லை. உபாதி சகித நாட்டத்தால் திணை பாலிடம் ஏங்கினும், யாதும் நிலை இன்மையின் உபாதி ரகித நாட்டத்தால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மையுமாய் நிற்றலின் இவ் இருவகை நாட்டத்தாற் செல்லாது, நான் எனலைச் சிந்திக்கும் இடத்து, எல்லா நானும், ஒன்றாக விளங்கும் அன்றோ? அப்போது எழு வகைத் தோற்றம் பற்பல வகைப் பெயரால், யாது பயனுள என்பார். சொல்லாலே, பெற்ற மகன், தம்பிப், பிதாப் பேருரைத்த ஒருவற்கு, உற்ற உடல் வேறாகுமோ' என்றார். உரைத்த ஒருவற்கு என்பது, உரைத்தொருவற் கென்றாயது, விகாரத்தால் என்க. ஒருவற்கு உற்ற உடல் சொல்லால் வேறாகுமோ என முடிக்க. எல்லா நானெனலும் அறிவாகத் தெரிசிக்கும் இடத்து வெவ் வேறு படா என்க. 'எனை அல்லாமல் ஈசனளவும் இல்லை' எனப் பாடம் ஓதி, உரை கொள்ளினும் அமையும். 'எல்லாரும் உரைப்பாராகில்,' எனப் படர்க்கைப் பலர் பாலாயிருத்தலின், தமை எனத் திருத்தி, உரைகொண்டாம். இலை எனப் பாடம் ஓதாது, அலரெனப் பாடம் ஓதி, உரை கொண்டது, தமை எனக் கொண்டதனால் என்க. இவை தம்முள் வேற்றுமை என்க. தாஷ்டாந்திர உண்மை ஆதலின், தக்க திருஷ்டாந்தம் எனக் கண்டாம். அன்றெனின் சோதனை ஆதியாற் காட்டலாம். வலி இன்றெனின் மறுத்துரையாமை நன்று. வேறாகுதோ என்பதில், ஓகாரம் ஆகாதெனப் பொருள் தரலால், எதிர் மறை, அந்தர் முகத்தால் ஒன்றெனவும், பகிர் முகத்தாற் பலவெனவும் கோடற்கு இயையும் என்பது கருத்து. (6)

**(அவ தாரிகை)**

அல்லவற்றை நான் என்னாமையாற் களையப் படுபவைகள் இருக்க எல்லாம் நானெனல் பொருந்துமா என்ற மாணாக்கானை நோக்கி, இக் கவியில் உதாரண முகத்தால் உத்தரங் கூறுகின்றது.

**நாமா விருந் தோமும் நாமே நாம் அல்லவாப்**
**போமாறு போகும் பொருளும் நாம் - யாமத்துத்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தானே உறங்கிச் சகத்து உருவாத் தோற்றி, விழித்து**
**தானே அவன் போலத் தான்.**

[இதன் பொருள்]

**நாமா யிருந் தோமும் நாமே நாம் அல்லவாய்**
**போமாறு போகும் பொருளும் நாம்**

சகல விகற்பமும் அற்று, நாமாக விளங்கி நின்றதும், நாமே யாம். சோதனை ஆதிகளாற் களையுமிடத்து, நாமல்ல, அல்ல வெனப் போதற்கு, இயைந்த தத்துவக் கூட்டப் பொருள்களும் நாமே யாம். எங்ஙனம் எனின்,

**யாமத்துத் தானே உறங்கிச், சகத்து உருவாத் தோற்றி விழித்து**

தானே அவன் போலத் தான்: இரவில் நடுச் சாமத் தொருவன், சலிப்பறத், தானே நன்கு தூங்கித், தானே, சகத்து வடிவமாகத் தோற்றி விழித்தால், எங்ஙனமோ அவனைப் போலத் தீரத் தெளிதி.

**(பத சாரம்)** அஞ்ஞான காலத்தில் தத்துவக் கூட்டமாய் நின்றதும் யாமே. ஞான காலத்து அவற்றுள் ஒன்றும் அல்லவாய்ப் பிரகாசித்துக் கொண்டு இருந்ததும் யாமே. அஞ்ஞான காலத்துக் கற்பனைகள் சத்தியமாயும், ஞான காலத்து சங்கற்ப ரகிதங்கள், சத்தியமாயும் இருத்தலால், 'நாமாய் இருந்தோமும் நாமே, நாம் அல்லவாப் போமாறு, போகும் பொருளும் நாம், என்றார். இஃது அனுபவம் ஆதலின், ஒருவனது உறக்கத்தையும், விழிப்பையும் உதாரணமாக எடுத்துக் காட்டியது பொருந்தும் என்க. சாதாரண தருமம் அறியாதார், மறுப்பினும் மறுப்பர். நாமே என்பதின் தோற்றேகாரத்தை நாமென்பதற்குங் கூட்டுக. சகத் உருவாத் தோற்றல், நித்திரைத் தெளிவின் கண், எவர்க்கும் ஆதலின், இவ் உவமானந் தகுமென அறிக. தள்ளப்படுவதும், கொள்ளப்படுவதும் நம்மை அன்றி, வேறில்லை என்பது கருத்து. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவ தாரிகை**

இங்ஙனம் எல்லாமாயும், அல்லவாயும் விளங்கிய ஆத்மாவின் சொருபந்தான் யாதோ எனக் கேட்ட மாணாக்கனை நோக்கி, இக் கவி உத்தரங் கூறுகின்றது.

**ஆகமாய் ஆருயிராய் அஞ்ஞானமாய் ஞானப்**
**போகமாய் இன்பப் பொருளாகி - ஏகமாஞ்**
**சிற் சொருபமாகி எல்லாச் செய்கையுமாய் நம்முடைய**
**தற் சொருபமே தான தால்.**

[இதன் பொருள்]

**ஆகமாய் ஆருயிராய் அஞ்ஞானமாய் ஞானப்**
**போகமாய் இன்பப் பொருளாகி**

முத்தனுமாகியும், நிறைந்த உயிராகியும், அஞ்ஞான சொரூபம் ஆகியும், ஞான போக வடிவாகியும், போரின்ப சொரூபமாகியும்,

**ஏகமாஞ் சிற் சொருபமாகி எல்லாச் செய்கையுமாய்**
**நம்முடைய தற் சொருபமே தான தால்**

யாதோர் விகற்பமும் இன்றி விளங்குஞ் சிற் சொருபமாகியும், சமஸ்த சேஷ்டைகளாகியும் நின்று விளங்குவது வேறன்று. உமது எதார்த்த சொரூபமே உபாதானமாய் நிற்றலின்.

**(பத சாரம்)** ஆகம் என்றதனால் முத்தனுவும் எனவும், ஆருயிர் என்றதனால், பிராணன் எனவும், அஞ்ஞானம் என்றதனால் மூலப் பிரகிருதி எனவுங் கொள்க. ஏகம் என்பது இருமையும் எனக் காட்ட நின்றது. அதாவது பந்தமும் வீடும் என்க. செய்கை என்னாது இருமைக்கும் உரிய சேட்டைகளை எனக் கொள்க. தானென்றது இருமைக்கும் ஏதுவாதலின், 'நம்முடைய தற்சொருபமே தான தால்' என்றார். எனவே, தற் சொருபம் என்பது, தானே தானாய் விளங்குவது. எனப் பெற்றாம். நமது ஆத்ம ஸ்வரூபமே ஞான மாகவும் அஞ்ஞானமாகவும் இருக்கும் என்பது கருத்து. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அவ தாரிகை)

இங்ஙனந், தானே தானாய் விளங்கிய ஒருண்மை நாமத்தை, ஏனும், ஏலாதோ எனக் கேட்ட மாணாக்கனை நோக்கி, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**ஆனந்தம் என்பார், அதீதம் என்பார், நான் மறைக்குந**
**தானந்தமாஞ் சர்வ சாட்சி என்பார் - ஞான நூல்**
**சொன்ன குறி எல்லாந் தொடராத என் வடிவுக்கு**
**என்ன குறி சொல்லுவேன் யான்.**

[இதன் பொருள்]

**ஆனந்தம் என்பார், அதீதம் என்பார், நான் மறைக்குந்**
**தானந்தமாஞ் சர்வ சாட்சி என்பார்**

ஞானானுபவ நிலைகளில் நவநவமாய் அவற்றுள் ஆங்காங்கு நிலை உற்றார், தத்தம் நிலையைக் கூறுமாறு, யாதெனின், சிலர் ஆனந்த சொரூபம் எனக் கூறுவர். சிலர் அதீத வடிவம் எனக் கூறுவர். சிலர் இருக்கு முதலிய நான்கு வேதங்களுக்கும் முடிவாய் நின்றுள்ள மகா வாக்கிய அர்த்தங்கட்குத் தான் சர்வசாட்சியாய் விளங்கும் என்பர்.

**ஞான நூல் சொன்ன குறி எல்லாந் தொடராத**
**என் வடிவுக்கு என்ன குறி சொல்லுவேன் யான்**

இங்ஙனம் பற் பலவாக ஞான நூல் சொல்லிய குறிகள் அனைத்தும் ஏற்றற்கு இயையாத என எதார்த்த சொரூபத்திற்கு யாது குணங் குறியுடையது எனக் கூறுவன்?

**(பத சாரம்)** சகுணஞ் சாதித்தல், கற்பனைகளை அகற்றுவதற்கன்றி இதுவே சித்தாந்தம் அன்று. சித்தாந்தம் எனின், நிர்க்குண வஸ்து வெனக் கூறுவது எற்றிற்கு? அஃது அதீதானுபவ நிலையின தாதலின் ஏலாது என்க. தன்னிடத்திற் சர்வமும் நிகழ்தலின், சர்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சி எனப்பட்டது. அறிவொன்றே பிரதி வாதித்தலின் ஞான நூலென்றார். சகுணங்களையும், நிர்க்குணங்களையும், ஞான நூல் அனைத் துள்ளுங் காண்க. **சகுணமென்பன: நித்தியம், பூரணம், ஏகம், பரமார்த்தம், பரப்பிரமம் முதலியன. நிர்க்குணம் என்பன: அசலம், நிரஞ்சனம், அமிர்தம், அப்பிரமேயம், விமலம் முதலியன. இவற்றைச் சகுணப் பிரமம் எனவும், நிர்க்குணப் பிரமம் எனவும் அறிஞர் கூறுப.** சைதன்னியமானது அந்தந்த அவசர நாமங்களைப் பெறும் என்பது கருத்து. (9)

**(அவ தாரிகை)**

இங்ஙனம் அதீதமாயின் விசாரணைக்கு இடமின்றி, அழிகுதுமே என்ற மாணாக்கனை நோக்கி இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**நானோ, அதுவோ, அது நானோ, நான் அதுவோ**
**ஞானோதயமோ நாதாந்தமோ - மோனமோ**
**சுத்தமோ சூனியமோ தோற்றுஞ் சுபாவ நிலை**
**இத்தனையும் அல்லவாமே**

[இதன் பொருள்]

**நானோ, அதுவோ, அது நானோ, நான் அதுவோ**
**ஞானோதயமோ, நாதாந்தமோ**

யானெனப் படுவதோ? அது எனப்படுவதோ? நானெலே அதுவெனப்படுவதோ? ஞானோதயம் எனப்படுவதோ? வேத முடிவெனப்படுவதோ? மௌன நிலை எனப்படுவதோ?

**மோனமோ, சுத்தமோ, சூனியமோ, தோற்றுஞ்**
**சுபாவ நிலை இத்தனையும் அல்லவாம்**

சுத்த நிலை எனப் படுவதோ? சூனிய நிலை எனப்படுவதோ? அனுபவத்தில் உதிக்குஞ் சுபாவ நிலைகள், ஒவ்வோர் பழுதுளதாய் இருத்தலின், இத்தனையும் எதார்த்த நிலை அல்லனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(பத சாரம்)** ஏ - அசை. நானெனின் எட்டப்படாமையானும், அதுவெனின் சொல் மாத்திரமாய் நிற்றலானும், அது நானெனின் சொல் அலங்காரமாய் நிற்றலானும், நானது எனின் வரம்பின்றி நிற்றலானும், ஞானோதயம் எனின் உதயாத்தனம் இன்றெனற்கு மாறாதலானும், நாதாந்தம் எனின் பிரக்ஞையை அன்றி, நாதமில்லை எனற்கு மாறாதலானும், மோனம் எனின் வேத ரகசியங்கள் வெளிப் பட்டிருப்பதனானும், சுத்தம் எனின், தன்னை அன்றி, அசுத்தம் அன்றி, நாம ரூபம் இருக்க வேண்டும். ஆதலானும் இத்தனையும் அல்லவா என்றார். எனவே, இத்தனையும் ஆமெனக் குறிப்பிக்க நின்றது பெற்றாம். பெறவே, வஸ்து நிலை கணிக்கப் பட்டது என்பது கண்டாம். இக் கவியிலுள்ள ஒன்பது ஓகாரமும் ஐயம். (10)

**(அவ தாரிகை)**

இங்ஙனம் கூறின், ஆத்மாவை அறிபவரும் இலராம். அந்த ஞானம், பரிபாலனமும் ஆகாதாம். ஆதலின் அதற்கு ஓர் நாமங் கூற வேண்டுமே என்ற மாணாக்கனை நோக்கி, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**புத் தோகம் முத் தோகம் பூரணானந் தோகஞ்**
**சத் தோகஞ் சித் தோகஞ் சாந் தோகஞ் - சுத் தோகம்**
**ஆரணங்கள் தேடரிய அற்புத தோகஞ் சகல**
**காரணமாஞ் சைதன்ய யோகம்**

[இதன் பொருள்]

**புத் தோகம் முத் தோகம் பூரணானந் தோகஞ்**
**சத் தோகஞ் சித் தோகஞ் சாந் தோகம்**

புத் தோகமும், முத் தோகமும், பூரணனாந் தோகமும், சத் தோகமும், சித் தோகமும், சாந் தோகமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுத் தோகம் ஆரணங்கள் தேடரிய அற்புத தோகஞ் சகல காரணமாஞ் சைதன்ய யோகம்**

சுத்தோகமும் வேதங்களாலும் ஆராய்ந்து அறிதற்கு அரிய அற்பு தோகமும் அனைத்திற்கும் உபாதானமாய் நின்றுள்ள சைதன்ய யோகமும், இவை போல்பவைகளும் பிரபல சுருதிகளால் நியமிக்கப் பட்டவைகள்.

**(பத சாரம்) புதிதாகக் காண்டலின் பத்தோகம் எனவும், சகல கற்பனைகளும் முடிந்ததாகக் காண்டலின் முத்தோகம் எனவும், அபரிச் சின்னமாய் நிற்றலின் பூரணானந்தோகம் எனவும், என்றும் உள்ளதாகக் காண்டலின் சத்தோகம், எனவும், தன்னைத் தானே விளக்கி உணர்வதாகக் காண்டலின் சித்தோகம் எனவும், தானே உபசாந்த நிலையதாகக் காண்டலின் சாந்தோகம் எனவும், நின்மலம் இது போல்வது இன்றாகக் காண்டலின், சுத்தோகம் எனவும், நிரேதுவாக அற்புதங்களைத் தரற்பாலது வேறின்மையின், அற்பு தோகம் எனவும், உபாதானம் எனற்கு இயைவது, அது போல்வது ஒன்றின்மையின், சைதன்ய யோகம் எனவும் பெயர்கள் அமைந்தவாறு காண்க.** இவை சுருதிகளால் நியமித்த நாமங்கள் என்பதாம். இவை அனைத்தும் இடு குறியால் அமைந்தன அல்லவாதலின், விசாரணைத் தெளிவால் எனக் கூற வேண்டுமோ? குணமே குணியாக நிற்றலின், விடாத இலக்கணையால், வஸ்துவைக் குறியாமல், குறித்ததென்க. ஆதலின், இந்த நாமங்கள் வேண்டும் என்பது கருத்து. அனுபவம் எய்தாத விடத்து இந் நாமங்களாற் பயனின்றென்க. (11)

**(அவ தாரிகை)**

இந்த நாமங்கள் அனுபவப் பெற்றிற்கு இயையுமா என்ற மாணாக்கனை நோக்கி இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொல்லாச் சுவானுபவாதீதச் சுகாநந்தம்**
**எல்லாமும் நாமாய் இருந்தோமே - தொல்லை வினை**
**அற்றோம் எனச் சொலவும் அற்றோமே நம்மை நாம்**
**பெற்றோம் பிழைத்தோம் பிள்ளாய்**

[இதன் பொருள்]

**சொல்லாச் சுவானுபவாதீதச் சுகாநந்தம்**
**எல்லாமும் நாமாய் இருந்தோம்**

இனையதெனக் கூறற்கரிய சுவானுபவமாயும், அதனால் தானே எய்தும் அதீதமாகிய நிரதியசானந்தமாயும் இந் நிலையை அன்றி அனைத்தும் இன்மையின், சமஸ்தமும் நாமாய்யும் இருந்து விளங்குகின்றோம்.

**தொல்லை வினை அற்றோம் எனச் சொலவும் அற்றோமே,**
**நம்மை நாம் பெற்றோம் பிழைத்தோம் பிள்ளாய்**

பூர்வ வாசனையாய் நின்றுள்ள சஞ்சித வினைகள் அனைத்தையும் ஞானாக்கினியால் எரித்து நின்றன, என்று, அனுபவித்துச் சொல்லவும், இறந்தனம். அதனால் நாமாகின்ற சொரூபம் யாதோ, அதனை ஐயமின்றிப் பெற்றனம். மரண பவங்களைப் பற்றி வரும் பய கம்பன் ஆதிகளினின்று பிழைத்து நின்றனம்,

**(பத சாரம்)** ஏ - அசை சான்றோர்கள், தாங்கள் அனுபவித்த அனுபவப் பேற்றைப்பின்னுள்ளோர் அனுபவிப்பான் வேண்டிக் கூறிய நாமங்கள், யாவும் அனுபவித்தற்கு ஏதுவாய் நிற்றலின், இயையும் என்க, சுகாந்தம் என்பது ஒரு பொருட் பன்மொழி. பெயர் எச்சமாய் நிற்றல் பொருந்தாமையின் எனுஞ் சொலவும் என்னாது எனச் சொலவும் எனத் திருத்திப் பொருள் கொண்டாம். மரண பவங்களும் பய கம்பனாதிகளும் எஞ்சி நிற்றலின், இசை எச்சம் என்க. பிள்ளாய் என்பது பிளாயென்றாயது இடைக் குறை. இவை அனுபவத்திற்கு இயையும் என்பது கருத்து. (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அவ தாரிகை)

இவ் அனுபவத்தாலாய பயன் யாதோ, எனக் கேட்ட மாணாக்கனை நோக்கி, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**சந்தமும் நீங்காத் தனி அரசு பெற்றாமே**
**தொந்தச் சுகா சுகமுஞ் சுட்டோமே - சிந்தனையை**
**வாட்டிய தேகாதி வனவாசம் விட்டோமே**
**வீட்டிற் குடி புகுந்தோமே**

[இதன் பொருள்]

**சந்ததமுந் நிங்காத் தனியரசு பெற்றோமே,**
**தொந்தந் சுகா சுகமுஞ் சுட்டோமே**

எப்போதும் அழியாது நின்றுள்ள நிகரற்ற ஞான சிங்காசனத்தை அடைந்தனம். விடாது மாறி மாறித் தொந்தமாய் எய்தற் பால வாகிய சுக துக்கங்களை எரித்தனம்.

**சிந்தனையை வாட்டிய தேகாதி வனவாசம் விட்டோமே,**
**வீட்டிற் குடி புகுந்தோமே**

பந்தத்தால், யாவரது சிந்தனையையும், அல்லவற்றை யான் எனதெனக் கற்பித்து, வதக்கிக் கொண்டு வருதலை இயல்பாக உடைய தேகம் முதல், மூலப் பிரகிருதி இறுதியாய் உள்ள, தத்துவக் குழாங்களாகிய, வன வாசத்தினின்றும் அகலப் பெற்றனம். அதனால், இப்போது நிருவாண நிலையதாகிய கூட்டிற் குடி புகுந்தனம்.

**(பத சாரம்)** ஏகாரங்கள் நான்கும் அசை நிலைகள். பணிக்குப் பொன்னும், கடத்திற்கு மண்ணும், படத்திற்கு நூலும் ஆகிய இவைகள், தத்தங் கற்பனைகளில், நான்கு காலத்தினும் இருக்குமாறு போன்று, சைதன்யம் இருத்தலின் அதனை 'தனி அரசு பெற்றோம்' எனவும், அதனை மறத்தலால் எய்துவனவாதலின், 'சொந்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகா சுகங்கள் சுட்டோம்' எனவும், கற்பனைகளை, மெய்யெனக் கருதி வாழும் வாசம், இப்போது அகன்றிருத்தலின், 'சிந்தனை வாட்டிய தேகாதி வன வாசம் விட்டோம்' எனவும், வச வாசத் திற்கு எதிர் மறை, வீடாதலால் 'வீட்டிற் குடி பகுந்தோம்' எனவுங் கூறியவாறு காண்க. தேகாதிப் பிரபஞ்சங்களை, வனவாசம் எனலானும், விட்டோம் எனலானுஞ் சர்வமும் மித்தையெனக் காணப்பட்டது என்க. அயல் இன்மையின், இங்கே வீடென்றது சிதாகாசம் எனக்கொள்க. முத்தி உலகிற், அரசனாதல் என்பது கருத்து. (13)

**(அவ தாரிகை)**

இவ் அரசன் தன் அரங்கில் எந்த விநோத தரிசனமாய் இருப்பான், என்ற மாணாக்கனை நோக்கி, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**நனவிற் தசேந்திரிய நாட்டியங்கள் பார்ப்போம்**
**கனவின் மனக் கூத்துங் காண்போம் - நினைவில்**
**சுழுத்தியிலே இல்லாத சூனியக் கூத்தாடி**
**விழுப் பொருளாய் நாம் இருப்போமே.**

[இதன் பொருள்]

**நனவிற் தசேந்திரிய நாட்டியங்கள் பார்ப்போம்**

அனு தினமுஞ் சாக்கிரத்திற் திரிசியங்கள் தூலமாகக் காணுமிடத்து, ஞானேந்திரியம், கன்மேந்திரியமாகிய பத்தும், இயங்குவனவாகிய நாட்டியங்களைப் பார்த்துக் கொண்டிருப்போம்.

**கனவின் மனக் கூத்துங் காண்போம்**

சொப்பனத்தில் திரிசியங்கள் சாயையைக் காணும் இடத்து அப்பொது அங்கே நின்றியங்கி நிற்பதாகிய மனக் கூத்தையுங் கண்டு கொண்டிருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நினைவில் சுழுத்தியிலே இல்லாத சூனியக் கூத்தாடி**
**விழுப் பொருளாய் நாம் இருப்போம்**

அந்த மனம் என்பது, கிஞ்சித்தும் இல்லாத சுழுத்தியின் கண், தனக்கெனச் சொரூப மொன்றில்லாத சூனியமாய் நின்று, இயங்குவதாகிய நடனத்தை மிக்க விருப்பத்தோடு ஆடி, மேலாய பொருளாயும், எவற்றிற்குஞ் சாட்சியாயும், நாம் எப்போதும் இருப்போம்.

**(பத சாரம்)** ஏ - அசை, நினைவில் என்பது வினைத் தொகை ஆதலின், திரியாதென்க. திரிசியத்தின் தன்மை, இம் மூன்று விதமாய் நிற்றலின் ஆங்காங்கு இயைந்தவாறு நடித்தலும், தனது புடை பெயர்ச்சி ஏனும் காணாது களித்தலும், அஞ்ஞான திசை எனவும், இங்ஙனமாய் அவை எல்லாம் யாதென உன்னிய விடத்து, அறிவாகக் காண்டலின் **'விழுப் பொருளாய் நாம் இருப்போம்' என்றது ஞான திசை எனவும்,** குறிக்க நின்றமை காண்க. இங்ஙனமாய விநோத தரிசனமாய் இருப்பன் என்பது கருத்து. (14)

**(அவ தாரிகை)**

இங்ஙனமாய விநோத தரிசனத்திற் சுக துக்கங்கள் எய்தற் பாலவாமே. அப்போது இந்தச் சாக்ஷாத்காரப் பிரத்யக்ஷா அனுபவநிலை எங்ஙனோ, என்ற மாணாக்கனை நோக்கி, உத்தரம் இக் கவியிற் கூறுகின்றது.

**நான் என்றிருந்தவன் ஆர், நான் கண்டேனாகில் அவன்**
**ஊன் என்று உருத் தரிக்க ஒட்டேனே - ஞான**
**வடிவான நானே, நான், மற்றுள நானெல்லாம்**
**வடிவான், இறந்து பிறப்பான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இதன் பொருள்]

**நான் என்றிருந்தவன் ஆர், நான் கண்டேனாகில் அவன்**
**ஊன் என்று உருத் தரிக்க ஒட்டேனே**

எங்கணுஞ் சோபாதிகத்தையேனும், நிருபாதிகத்தையேனும், நானென்று அபிமானித்திருந்தவன் எவன், அவனை உள்ளவாறு நான் காண்பேனாயின், அப்படிப்பட்ட புருடன் மாமிச வடிவாகார மாதற்குச் சற்றும் உடன் படேனே.

**ஞான வடிவான நானே நான், மற்றுள நான் எல்லாம்**
**வடிவான இறந்து பிறப்பான்**

இப்போது கண்ட விடத்தில் ஞான வடிவாக விளங்குவது எந்த நானோ. அந்த நானே நான் எனப்படுவதாம். அதற்கு அயலா நின்றுள்ளவற்றை நான் எனப் படுவதெல்லாம், வடிவம் எடுத்துப் பிறந்து இறப்பான் வேண்டியாம்.

**(பத சாரம்)** நான் கண்டேனாகில் என்றதனால், அறிவென அறிந்துந், தரிசனம் இன்மையின், பரோட்ச ஞானம் எனவும், ஞான வடிவான நானே, நான் என்றதனால் தரிசனமானமையின், அபரோட்ச ஞானம் எனவுங் கொள்ளக் கிடந்தமை காண்க. எனவே, ஞான தரிசனமாகிய விடத்துச், சனன மரணம் இன்மையும், ஆகாத விடத்து உண்மையும், எனக்கொள்க. நான் அலாததை நானென்றிருந்த போதும் எதார்த்த நானை அன்றி, இன்மையின், அப்போதும் உண்டென்பது கருத்து. (15)

**(அவ தாரிகை)**

நிர் விகாரியான, இவ் ஆத்மா விவகரிக்கிற், பந்தப்படாதோ என்ற மாணாக்கனை நோக்கி உத்தரம் இக் கவியிற் கூறுகின்றது.

**சாயை என வாழ் குடும்பந் தன்னைச் சுமந்தாலும்**
**மாயை எனும் மேகம் மறைத்தாலுந் - தூய வொளி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தானா விளங்கிச் சக சாட்சியாய் இருக்கும்**
**ஞானாதித்தன் தானே நாம்**

[இதன் பொருள்]

**சாயை என வாழ் குடும்பந் தன்னைச் சுமந்தாலும்**
**மாயை எனும் மேகம் மறைத்தாலும்**

சாயா வடிவம் எங்ஙனமோ, அது போன்று வாழ்கின்ற குடும்ப பாரத்தைத் தாங்கிச் சுமந்து நின்றாலும், தனது பிராந்தியாகிய மாயை என்னும் மேகந் தன்னை மறைத்தாலும்

**தூயவொளி தானா விளங்கிச் சக சாட்சியாய்**
**இருக்கும் ஞானாதித்தன் தானே நாம்**

நின்மல ரூபமாகிய சுவயம் பிரகாசமே தனது எதார்த்த வடிவமாக விளங்கித் திரிசிய ரூபமாகிய சகத்திற்குச் சாட்சியாக இருக்கும் ஞான சூரியனே நாமென அறிக.

**(பத சாரம்)** மெய் போலக் காண்டலின் குடும்பத்தைச் சாயை எனவும், தனது பிராந்தி நிருவாண நிலைக் கண் இன்றி, அழிதலின், மாயையை மேகம் எனவும், யாதொன்றாலும் மறைவு படாது என்றும் சதோதயமாக விளங்கலின், ஆன்மாவை ஞானாதித்தன் எனவுங் கூறியதைக், குரு முன்னிலையில், சுகானுபவத்தாற் காணலாம் என்க. பகிர் முகத்தாலும், அந்தர் முகத்தாலும், பந்தப் பட்டது போலவும், விடு பட்டது போலவும் காண்டலே, அன்றி, ஆன்மாவுக்கு இல்லை என அறிக. சுவயம் பிரகாசம், வேறு என்பாரை மறுத்து, ஆன்மாவே எனக் கூறியது என்க. ஆன்மா ஆதி மத்தி அந்த ரதகிதமா விளங்கலின், அந் நாட்டம் அகலா விடத்துப் பந்தப் படாது என்பது கருத்து. (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை)**

ஆதித்தனைப் போல இவன் தொழிற் படாமல் இருக்கவில்லையே என்ற மாணாக்கனை நோக்கி உத்தரம் இக் கவியிற் கூறுகின்றது.

**ஏதேது வந்தாலும் எதேது செய்தாலும்**
**ஏதேதில் இன்புற்று இருந்தாலும் - ஏதேதுந்**
**தானாகா வண்ணந் தனியே தெரிந்து இருக்கும்**
**ஞானா காரந் தானே நாம்.**

[இதன் பொருள்]

**ஏதேது வந்தாலும் எதேது செய்தாலும்**
**ஏதேதில் இன்புற்று இருந்தாலும்**

எந்தெந்தக் கதி வந்தடைந்தாலும், **நற் கருமம் துர்க் கருமம் மிசிர கருமம்** என்பவற்றுள் யாது யாது செய்தாலும், எந்தெந்தப் பதவிகளிற் சுகித்திருந்தாலும்,

**ஏதேதுந் தானாகா வண்ணம் தனியே தெரிந்து**
**இருக்கும் ஞானா காரந் தானே நாம்**

இவற்றுள் யாது யாதாகவேனும் ஆகாரப்படாமல் அவலட்சண மாயும், தான் விலட்சணமாயும் நின்று தனியே தெரிந்து ஞானா காரமாய் நிற்றலால், நாமே ஞானாகார வடிவாம்.

**(பத சாரம்)** பிறவி முதலியவைகள் யாவும் நிலை இன்மையின், எது எது என்கின்ற அடுக்குகள் நான்கும் ஐயம், இதனைக் காண வேண்டின், இந்தப் பிறவியிற், தானே மூன்று அவத்தையினும், தூலமாயும், சாயையாயும், பாழாயும், இவை அவத்தை அல்லவாயும், நாம் இருப்பதே சாட்சியாம் என்க. தொழிற்படுவது போற், காண்டலே அன்றி உற்றுணரும் இடத்துத், தனக்கில்லை என்க. தொழிற் படினும், ஆதார நாட்டம் அகலாமையின் பட்டது போற் காண்பன் என்பது கருத்து. (17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அவ தாரிகை)

**ஆத்மா, அசைப்பிக்கச், சகலமும் அசைதலின்,** அதற்குப் பந்தம் உளதே, என்ற மாணாக்கனை நோக்கி, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**ஆட்டி விட்ட பம்பரம் போல், ஆசை முதல் இக் கரணங்**
**கூட்டி முடித்தாலும், கூடோமே - சாட்டி அதிற்**
**சம்பந்தம் அற்றோமே தற் சொரூபம் ஆனோமே**
**எம் பந்தம் போனவாறே**

[இதன் பொருள்]

**ஆட்டி விட்ட பம்பரம் போல் ஆசை முதல் இக் கரணங்**
**கூட்டி முடித்தாலும் கூடோமே**

தானாட வகை அறியாது, ஒருவன் ஆட்ட, அதனால் ஆடும் பம்பரம் எங்ஙனமோ, அது போல, ஆசை முதலிய அகக் கரண, புறக் கரணங்களாகிற இவைகளைக் கொண்டு, இன்ப தன்பங்களை ஊழாற் கூட்டி முடிக்கினுஞ் சம்பந்தப்படுவது இலம்.

**சாட்டி அதிற் சம்பந்தம் அற்றோமே, தற் சொரூபம்**
**ஆனோமே எம் பந்தம் போனவாறே**

அப் பம்பரத்தை ஆட்டிய கயிற்றைப் போல, உற்று நின்று தம்மை உணரும் இடத்துச், சகல பந்தமும் அற்று நின்றனம். தானாகின்ற சுவயம் பிரகாச வடிவமாயினம். அப்போது எமது பந்தம் போனவாறு எங்ஙனமோ, யாம் அறிகிலம்.

**(பத சாரம்)** நம்மால் எய்தியது ஊழாதலால், ஊழின் மேரேலற்றிக் கூறினும், நமது புடை பெயர்ச்சியே என்க. நம்மை நாம் ஆயா விடத்து, எவ்வகைப் புடை பெயர்ச்சியும் அயலினதாகக் காணும். காணினும், அறிஞர்க்கு அயலன்று. அன்னியங் காணாமையின் என்க. என்னை? ''நன்னிலைக் கட்டன்னை நிறுப்பானுந் தன்னை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை கலக்கிக் கீழ் இடுவானும் - நிலையினும் மேன் மேல் உயர்த்தி நிறுப்பானுந் தன்னைத் தலையாகச் செய்வானுந்தான்'' என்றார் தற்கண்டார், ஆன்மா விலட்சணமாய் இருத்தலின், தனக்குப் பந்தம் இன்றென்பது கருத்து. (18)

**(அவ தாரிகை)**

அஞ்ஞானம், நீங்கி, ஞானம் வந்த வழி, யாதெனக் கேட்ட மாணாக்கனை நோக்கி, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**அஞ்ஞானம் எத்தால் அழிந்ததோ, ஆராயும்**
**விஞ்ஞானம் எத்தால் விளைந்ததோ - மெய்ஞ் ஞானச்**
**செம்மை அனுபூதித் தெளிவு பெற்றது எங்ஙனோ**
**எம்மை அல்லால், ஏது கண்டோம் யாம்**

[இதன் பொருள்]

**அஞ்ஞானம் எத்தால் அழிந்ததோ ஆராயும்**
**விஞ்ஞானம் எத்தால் விளைந்ததோ**

அஞ்ஞானம் எனப்படுவது யாதினால் அழிவுற்றதோ? தன்னைத் தான் ஆராய்தற்கு இயைந்த மெய்ஞ் ஞானம் எனப்படுவது யாதினால் விளைவு உற்றதோ?

**மெய்ஞ் ஞானச் செம்மை அனுபூதித் தெளிவு பெற்றது**
**எங்ஙனோ எம்மை அல்லால் ஏது கண்டோம் யாம்**

அந்த மெய் உணர்வால் எய்தும் மேல் கீழொப்பின்று எனத் தெளிவு பெற நின்றது யாதென்றாலோ எனின், எம்மை அன்றி உபாதானமாக யாம் ஏதுங் கண்டிலம்.

**(பத சாரம்)** தனது மருள் அழிந்ததும், மெய்ஞ் ஞானம் விளைந்ததும், சுவானுபூதித் தெளிவு பெற்றதும் நம்மை அன்றி, ஆதார ஆதேயமும், உபாதான உபாதேயமும், நிர் விகார, விகாரமும், அதிஷ்டான ஆரோபமும் இன்மையின், நாமே எனக் கண்டனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சுவானுபவத்தில் வந்ததும் போனதும் இல்லை என்பது கருத்து. மூன்று ஓகாரமும் ஐயம். தன்மை ஒருமை எங்ஙனமோ, அங்ஙனமே, தன்மைப் பன்மையும். மருளின் கண்ணும், தெருளின் கண்ணு மாதலின் எம்மை அல்லால் ஏது கண்டோம் யாம் என்றார். தம் நிலைகளில் நில்லாதார்க்கு இஃதெங்ஙனம் உடன் பாடாம்? அவர்கள் மறுப்பைக் கோடற்க. மானிட மிருகம் போல்பவர் ஆதலின். (19)

**(அவ தாரிகை)**

ஞானம் வருதலும், அஞ்ஞானம் போதலும் தெரியாவிடின், அறிஞன் என்பது எங்ஙனங் கூடும், அதற்கோர் அளவு கூற வேண்டும், என்ற மாணாக்கனை நோக்கி உத்தரம் இக் கவியிற் கூறுகின்றது.

**மெய் எல்லாம் நாமா விளங்கிய பின், நாம் ஆய,**
**பொய் எல்லாம் எங்கேனும் போயவோ - மெய், பொய்**
**இரு வகைக்கு நாமே இடமானோந், தொந்தித்**
**இரு வகைக்கும் எட்டாமலே.**

[இதன் பொருள்]

**மெய் எல்லாம் நாமா விளங்கிய பின், நாம் ஆய**
**பொய் எல்லாம் எங்கேனும் போயவோ**

மெய் எனப்படுபவை எவையோ, அவை அனைத்தும் யாமாக விளங்கிய பின்னர், முன்னர் யாமாக நின்ற கற்பனைகளாகிய பொய் அனைத்தும், எங்ஙனஞ் சென்றனவோ?

**மெய் பொய் இருவகைக்கு நாமே இடமானோந்**
**தொந்தித் இரு வகைக்கும் எட்டாமல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனா ரகிதம், கற்பனா சகிதம் என்கின்ற, இரு வகைப் பாகுபாட்டிற்கும், யாமே ஆதாரமாக நின்றோம். மேற் கூறிய மெய் பொய் என்னும் இரு வகைக்கு உடன்படாமல்.

**(பத சாரம்)** ஏ- அசை. பகிர் முக நாட்டத்தில், தூல முதன் மூலப் பிரகிருதி இறுதியாய் கிடந்த, தத்துவக் குழாங்கள் அனைத்துங், கற்பித சகிதங்களாகவும், அந்தர் முகத்தில், அவை அனைத்தும் ரகிதங்களாகவும் நின்றமையான், மெய் பொய் என்னாது 'மெய் யெல்லாம் பொய் யெல்லாம்' என்றார். பழுதையிற் பாம்பு வந்ததும் போனதுஞ் சொல் மாத்திரமே அன்றிப், பொருள் இன்மை போல, நமது எதார்த்த வடிவிற், கற்பனை வந்ததும் போனது என்பது சொன் மாத்திரமே அன்றிப் பொருள் இல்லாமையைக் கண்டு, இங்ஙனங் கூறினார் என்க. மெய் பொய் இருந்தாலன்றோ, அவற்றிற்கு யாம் ஆதாரம். என்னலாம்? இல்லாத விடத்து ஆதாரம் என்பது எங்ஙனங் கூடும் என்பார். 'இரு வகைக்கும் எட்டாமல்' என்றார். திசை முட் போல் நிற்றலின் அறிஞன் எனப்படுபவன் என்பது கருத்து. விகற்பத்தில் நிர் விகற்பமும், நிர் விகற்பத்தில் விகற்பமும் இல்லையேனும் அதது மயமாய் நின்ற யாம் இன்றோ? இதனைக் குறிப்பால் தெரிவித்தார் என்க. (20)

**(அவ தாரிகை)**

முன் தேகி நானெனவும், தேகம் நான் அன்றெனவுங் கூறி, இப்போது தேகத்திற்கு வேறு பட்டும் படாமலும் இருப்பான் எனக் கூறின், உண்மை தான் யாதோ, என்ற மாணாக்கனை நோக்கி, உவமான பூர்வமாக இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**தேகி நாம் என்றோமே, செல்வம் நமது என்றோமே**
**போகி நாம் என்றோமே, பொய் அன்றேயாக முதல்**
**நாமாய் இருந்தது மெய், நாம் அசங்கம் ஆனது மெய்**
**தேமா வித்தே போல் தினம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இதன் பொருள்]

**தேகி நாம் என்றோமே செல்வம் நமது என்றோமே**
**போகி நாம் என்றோமே பொய் அன்றே**

தேகமாகிய உபாதித் திரயம் நாமல்ல, அவற்றை இயக்குங் கர்த்தத்துவமும் அவற்றை உணருஞ் சேதனத்துவமும் உடையது, ஆன்மா ஆதலின், அது பற்றி முன்னோர் தேகி நாமெனக் கூறியதும், அது காரணமாக எய்திய பேரின்பச் செல்வம் நமதெனக் கூறியதும், போகங்கள் அனைத்தையும் அங்கங்கே நின்று நுகர்பவன் ஆன்மா ஆதலின் அது பற்றிப் போகி நாமெனக் கூறியதும் பொய் அல்லவே.

**ஆக முதல் நாமா விருந்தது மெய் நாம் அசங்கம்**
**ஆனது மெய், தேமா வித்தே போல் தினம்**

தூல தனு முதல் பிரகிருதி வரையும் நாம் அததுவாக அந்தந்த அவசரத்தில் இருந்ததுவும் மெய், இருந்துங் கலப் பற்று யாம் இருந்ததுவும் மெய். இனிய மாங்கனியின் வித்து எங்ஙனமோ அது போல எப்போதும்.

**(பத சாரம்)** சிற் பிரகாசத்தை அன்றித் தேகி வேறெனின், யாவும் அயலாக முடியும், முடிவதால் யாவும் நாமாக முடியாது. முடியாததால் இவை உவமானம் பொருந்தும் என்க. அறிவறியாமை யோடு கூடியுங் கூடாமலும் இருத்தலே உண்மை நிலையாம் என்பது கருத்து. இக் கவியிலுள்ள நான்கு ஏகாரமும் அசை நிலைகள். (21)

**(அவ தாரிகை)**

இப்படிப் பற்றியும் பற்றாதும் இருத்தல் அஞ்ஞான திசையில் மாத்திரமா? ஞான திசையிலுமோ என்ற மாணாக்கனை நோக்கி இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வால மதி யூக மதி போன் ஞான அஞ்ஞானக்**
**காலமும் நாங் கண்டு கழித்தோமே - சீலமாம்**
**அப்போது நம்மிலே ஆரோபமான எலாம்**
**இப்போது பொய்யானவே.**

[இதன் பொருள்]

**வால மதி யூக மதி போன் ஞான அஞ்ஞானக்**
**காலமும் நாங் கண்டு கழித்தோம்**

உலக விவகாரம் தெரியாத, கால மதி, வால மதி எனவும், தெரிந்த மதி, யூகமதி, எனவும் இரண்டாம். இதுபோல, விஸ்மரணை காலத்தையும், தஸ்மரணை காலத்தையும், உள்ளவாறு கண்டு அனுபவித்துக் கழித்தோம்.

**சீலமாம் அப்போது நம்மிலே ஆரோபமான எலாம்**
**இப்போதும் பொய்யானவே**

சீலமாகிய அவ்விரண்டு பருவத்தும், நம்மில் ஆரோபமாகக் காணப்பட்ட (ஒன்றில் ஒன்று) அனைத்தும் இப்போது கற்பித மாகவே முடிந்தன.

**(பத சாரம்)** மதி, இவ் இரண்டு பருவமாகியும், ஆகாதது போலத், திர ஞானம். இவ் விரண்டு பருவமும் ஆகியும் ஆகாததுமாய் நிற்றலின் இவ் உவமை பொருந்தும். அது பண்பு, தொழில், பயன் என்னும் சாதாரண தரும இலக்கணத்தால் என்க. என்னை? ''பண்புத் தொழிலும் பயனும் என்ற இவற்றின், ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த், தொப்புமை தோன்றச் செப்புவது உவமை'' என்பது இலக்கணமாதலின், இக் கவியிலுள்ள மூன்று ஏகாரமும் அசை நிலைகள். களங்க ரகிதமாக விளங்கும் பருவ நோக்கிச் சீலமாம் அப்போதென்றார். சீலமா எனப் பாட மோதி வினை எச்சமாக்கின் ஆரோபமாதலாகின்ற பகுதி வினை கொண்டு முடிய வேண்டும். முடியின் சீலத்திற்கும், ஆரோபத்திற்கும் பொருத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையாது. அது பற்றிச் சீலத்தை அப்போது என்கின்ற காலப் பெயருக்குப் பண்பாக்கினாம். ஆதலின் இது வழுவன்று, இவ் இரு திசையினும் என்பது கருத்து. (22)

**(அவ தாரிகை)**

இப் அனுபவம் வருவதற்கு முன்னர், உள்ள அஞ்ஞான திசையிற் சனன மரணங்கள் உளவோ என்ற மாணாக்கனை நோக்கி, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**பொய் தானே இன்பப் பொருளாப் பரம்பரையின்**
**மெய்யாச் சுகம் போல் விளைந்தக்கால் - ஐயோ நாம்**
**எங்கே பிறந்தோம், எதைத் தெய்வமாத் தொழுதோம்**
**எங்கே அடைந்தோமோ யாம்.**

[இதன் பொருள்]

**பொய் தானே இன்பப் பொருளாப் பரம்பரையின்**
**மெய்யாச் சுகம் போல் விளைந்தக்கால்**

பொய்யாகிய தேகாதிப் பிரபஞ்சங்களே நித்திய சுகம் போற் காணப்பட்டு அதற்கியைந்த பொருளாகித், தொன்று தொட்டுப், பரம்பரையாக, எவர்க்கும் உண்மையாகத் தனது நிரதிசியானந்தம் போல விளங்கிக் கொண்டு வருமாயின்.

**ஐயோ நாம் எங்கே பிறந்தோம், எதைத் தெய்வமாத்**
**தொழுதோம், எங்கே அடைந்தோமோ யாம்**

ஐயையோ, தொன்று தொட்டு, இது போல எங்கெங்கே பிறந் தோமோ? எவற்றைத் தெய்வமாகத் தொழுதோமோ? இங்ஙனமாக ஆகாது முடிவில் யாதிடத்தை அடைந்தோமோ யாம்.

**(பத சாரம்)** பொய்யாகிய மாயா காரியத்தைப், பொய் என்றது காரணவாகு பெயர். பொய் மெய்யாகச், சகம் போற் காணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதும், இன்பப் பொருளாக நிற்பதும், மலடி மைந்தனுக்குக் கர்த்தத்துவமுஞ் சேதனத்துவமுந் தந்து, கதை கட்டினாற் போலும் ஆதலின், போலென்னும் உவமைவுருபை விரித்தார். ஐயோ என்பது இரக்கக் குறிப்பு. யாமெனல் அதிஷ்டான சைதன்யமாதலின் பிறந்ததும் இல்லை, இறந்ததும் இல்லை, தொழுததும் இல்லை அடைந்ததும் இல்லை என்பதைக் குறிப்பிக்க, எங்கே என, இரண்டு இடத்துங் கூறினர். பொய்தானே என்பதில் ஏகாரந் தேற்றம். மெய் தானே என்னாதது அசத்து, சடம், துக்கம் என்னும் இலக்கணத்தை இயல்பாக ஏற்றல் பற்றி என்க. சகத்து சத்தெனின், சித்து வேறாகாது இருக்க வேண்டும். அங்ஙனமின்றே. சத்தே சித்தெனக் கூடுமா? அசத்தே சடமெனக்கூடும். ஆகவே, இன்பமெனல் எங்ஙனங் கூடும்? துக்கம் எனலே பொருந்தும். இன்பம் என அனுப்விப்பான் எனின், பொருளைப் பொருளாகக் காணத் தெரியாததால் இன்பத்தை இன்பமாக அனுபவிக்க எங்ஙனங் கூடும்? இன்பம் என நுகர்தல், மூடமே என்க. ஆத்ம சைதன்யத்திற்கு ஆதி மத்தியந்தம் இன்மையின். அறிவே வடிவாகிய நமக்குஞ் சனன மரணம் இன்றென்பது கருத்து. போலியைப் பொருளாகக் கோடல் மூடம். இன்றல்ல என்பதைக் காட்டப் பரம்பரை என்றார். பொருள் அல்லவற்றைப் பொருளாகக் கோடலும், சுகம் இல்லவற்றைச் சுகமாகக் கோடலும் நம்மால் அன்று. நமக்குத், தந்தைக்குத் தந்தையும், அவர் தந்தைக்குத் தந்தையும், அவர் தந்தைக்கும் தந்தையும் விடாது செல்லுதலையும், நமக்கு இங்ஙனம் போதிக்க எழுந்தருளிய குருவுக்குக் குருவும், அவர் குருவுக்குக் குருவும், அவர் குருவுக்குக் குருவும் விடாது செல்லுதலையும், இயல்பாக என்றும் உடைமையின், இது பற்றிப் பரம்பரை எனினும், அமையும் என்க. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அவ தாரிகை)

இவ் அனுபவம் உதிப்பதற்கு முன் ஆத்மா எப்படி இருந்ததோ, என்ற மாணாக்கற்கு, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**ஆராகியோ இருந்தோம், ஆர்க்கோ வீணுக்கு உழைத்தோம்**
**பேர் ஆயிரமாகப் பேதித்தோம் - பூரை இனி**
**நம்மாலே தேடரிய நம்மை நாங் கண்டோமே**
**அம்மா பிழைத்தோமடா.**

(இதன் பொருள்)

**ஆராகியோ இருந்தோம் ஆர்க்கோ வீணுக்கு உழைத்தோம்**
**பேர் ஆயிரமாகப் பேதித்தோம்**

பிரகிருதி முதல் இதுகாறும் எழுவகைத் தோற்றத்துள் யாராகி இருந்தோமோ? யார்க்கு வீணுக்கு உழைத்தோமோ? பிறவிகள் தோறுங், கணக்கில்லாத நாமங்கள், யாது யாது பெற்றோமோ அறியோம்.

**பூரை இனி நம்மாலே தேடரிய நம்மை நாங்**
**கண்டோமே அம்மா பிழைத்தோ மடா**

பரிபூரணமாய் நின்றுள்ள நிலையில் முன்னர் நம்மாலே தேடற்கு அரிய, நம்மை, இப்போது கண்டோமே. ஆ! ஆ!! பிறவிக் கடலில் அகப்படாமல், பிழைத்தோம்! சற் புத்திரனே!

**(பத சாரம்)** இக் கவியிலுள்ள இரண்டு ஓகாரமும் நிச்சயப் பொருளைத் தராததால், ஐயம். இச் சென்மம் அயலையோ தன்னையோ தானெனற்கு இயைவது? தன்னை எனின், உடல் நானாகுமா? அயல் எனின், பிறவி தோறுமா? இப் பிறவியில் தானோ? பழக்கத்தால் எய்தியதாதலின், பிறவி தோறும் எனின், இப் பிறவி யாமாகுதுமா. ஆகாதெனின், எப் பிறவி யாமாகுதும் என்பார். 'ஆராகியோ இருந்தோம் எனவும்' இப் பிறவியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாகும் போது, இவ் உடல் மெய்யாகுமா? இதனை அபிமானித்தலுதம், உபசரித்தலும், பொருள் தேடிப் பாதுகாத்தலும், இதனைச் சார்ந்த உயிர்ச் சார்புகளைப் பேணிக் காப்பான் வேண்டிப், பலவாறாக வருந்தி, முயன்று பாடுபட்டு உழைத்தலும் அவலமோ? பயனோ? பயனெனின், முன்னர்ப் பிறவி தோறும், இவ்வாறாக முயன்ற முயற்சிகள் இப்போது பயன் தர வேண்டுமே. இல்லை எனின், இதுவும், பின்னர் அவை போல்வனவாக முடியும் அன்றோ? ஆதலின், ஆர்க்கொ வீணுக்கு உழைத்தோம் எனவும், பொய்யாகிய இப் பிறவிக்கு எந்த நாமும் பொய்யோ? மெய்யோ? மெய் எனின், முன்னர்ப் பிறவிகள் தோறும், எமக்கு எய்திய பெயர்கள், இப்போது எமக்கு மெய்யாக வேண்டுமே. பொய் எனின், இதற்கு எய்திய பெயரும் இனிப் பிறவிகள் தோறும் பொய்யாதற்கு இயையும் அன்றோ? ஆதலின் 'பேர் ஆயிரமாகப் பேதித்தோம்' எனவும், முன்போற் பகிர்முகத்த ஆகாது. இப்போது யாம் அந்தர் முகத்தாதலின், 'பூரையினி நம்மாலே தேடரிய நம்மைய நாங் கண்டோமே அம்மா பிழைத் தோமடா' எனவுங் கூறினார். பகிர்முகம் எனலும், அந்தர் முகம் எனலும், முறையே உலகை அயலாகப் பார்த்தலும், அறிவாகப் பார்த்தலுமே என்க. வறியோனுக் குச் செல்வம் வந்துழிப் பசி நோய் காதனோய் என்பவற்றினின்று பிழைத்தோம் என அவன் களிப்பது போன்று, பிறப்பு இறப்பாகிய நோய்க்கு நின்று வருந்துவோன். ஞானச் செல்வம் எய்துழி, 'அம்மா பிழைத்தோமடா' எனக் கூறுவான் அன்றோ? ஆதலின் இஃது ஏற்றற் பாற்றோ? தள்ளற் பாற்றோ? தள்ளற் பாற்றெனின், அஃதுந் தள்ளற் பாற்றாக வேண்டும். அன்றெனின் இஃதும் அன்றாக முடியும். இதனைச் சுருக்கி உரைத்தாம். விரிக்கிற் பெருகுமாதல் பற்றி என்க. அப்போதும் பரிபூரணமாய் இருந்தது என்பது கருத்து. (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை)**

தம்மைத் தரிசிக்கிற் பெறுவதும் உறுவதும் யாதோ, என்ற மாணாக் கனை நோக்கி இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**கள்ள மனத்தைக் கரைந்து உருகப் பெற்றோமே**
**உள்ள படி நம்மை உணர்ந்தோமே - தெள்ளமுதச்**
**சச்சிதானந்தமும் நாம் தாமாக இருந்தோமே**
**அச்செல்லா நாம் ஆகையால்**

[இதன் பொருள்]

**கள்ள மனத்தைக் கரைந்து உருகப் பெற்றோமே**
**உள்ள படி நம்மை உணர்ந்தோமே**

கள்ளத்தனமாக நின்று உள்ள எமது மனத்தை ஞானாக்கினியாற் கரைந்து உருகும்படி நமது வயமாக்கினோம். இனித் தடை இன்மையின், உள்ளவாறு நமது எதார்த்த நிலையைப் பெற்றோம்.

**தெள்ளமுதச் சச்சிதானந்தமும் நாம் தாமாக**
**இருந்தோமே, அச்செல்லா நாம் ஆகையால்**

முன் அநிர்த சட துக்கமாக நின்றவாறு போன்று இப்போது தெளிவாகிய அமிர்தம் போன்ற சச்சிதானந்த வடிவமாகவும் இருந்தோமே. சகல உயிர்களும் நாமாய் இருத்தலினால்.

**(பத சாரம்)** முன் பழக்க வாசனையினால், அல்லவற்றை ஆண் பெண்ணெனக் கருதித் தனது பிரதிபலனம் என அறியாமலும், நிதானியாமலும், சேறலை, இன்னும் இயல்பாக உடைமையின் 'கள்ள மனம்' எனவும், உட்டணத்தால் அன்றி, அரக்கு முதலியவை கரைதலும் உருகுதலும் எங்ஙனம் ஏலாதோ, அது போல ஞானாக் கினியால் அன்றி, அயலாகத் தடித்த மனம் கரைதலும் உருகுதலும் ஏலாமையின், 'கரைந்து உருகப் பெற்றோம்' எனவும்! அங்ஙனம் அது கரையாத இடத்தும் நம்மை நாம் சிதாகாயமாகக் காண்டல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாமையின் 'உள்ள படி உம்மை உணர்ந்தோம்' எனவும், சிதாகாயமாகா இடத்துக் கூறற்கு இயையாத இலக்கணங்களை இப்போது ஏற்றலின் 'சச்சிதானந்த அமுதாமாய் இருந்தோம்' எனவும், விகாரித்து நிற்கினும், உயிாகள் வேறில்லாமையான் சச்சிதானந்த வடிவமாதலின், 'அச்செல்லாம் நாமாகையால்' எனவுங் கூறியவாறு காண்க. கள்ள மனத்தைக் கரைத் துருகப் பெற்றொமே எனப் பாடம் ஓதி உரை கூறப் பொருந்துமேனுங் கரைத்து என்பது போல உருக்கலெனப் பிறவினை ஆக்காமையால் வழுவெய்தும் எனக் கருதி இங்ஙனந் திருத்தி உரை கூறினாம். உள்ளபடி என்ற மிகையால் சிதாகாயத்தை வருவித்தாம். சொல்லால் அன்றிப் பொருளாற் பகுத்து எகமாக்குதல் எவர்க்கும் அரிதரிதாலின் அது கருதித் தெள்ளரிய சச்சிதாநந்தம் எனப் பாடம் என்பதிருப்பது பற்றிக், கள்ள மனம் என்றார் என்க. இக் கவியிலுள்ள மூன்று ஏகாரமும் அசை நிலைகள். இங்ஙனம், அந்தர் முகமாக நம்மை ஆக்கியது நாமே அன்றோ, என்று ஆழ்ந்து உரை கொள்ளற்க என்க. மனத்தைத், தன்னிற் கரைப்பதுந், தானே தானாதலும் பயன் என்பது கருத்து. (25)

### (அவ தாரிரகை)

ஆன்ம சைதன்யமே சகத் என்றது கெம்பீரமாய்க் கூறுவதை அன்றி, உண்மை ஆகுமா, என்ற மாணாக்கனை நோக்கி, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**கண் அலாற் காட்சி உண்டோ, காது அலாற் கேட்பது உண்டோ**
**வீண்ணலால் ஏதும் விரிந்தது உண்டோ - எண்ணுங்காற்**
**கானலால் ஓடிவரக் கண்டது போற் தோற்றுகினுந்**
**தானலாது உண்டோ சகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இதன் பொருள்]

**கண் அலாற் காட்சி உண்டோ, காது அலாற் கேட்பது உண்டோ**
**விண்ணலால் ஏதும் விரிந்தது உண்டோ**

கண் அறிவை அன்றிக் காணப் படுபவைகளும், செவி உணர்வை அன்றி, ஒலி விகற்ப பேதங்களும், பூதாகாயத்தை அன்றி, யாதாயினும் பல விகற்பமாக விரிந்து, நிற்பவைகளும் உளவோ?

**எண்ணுங் காற் கானலால் ஓடிவரக் கண்டது போற்**
**தோற்றுகினுந் தானலாது உண்டோ சகம்**

சுவானுபவத் தேர்ச்சியால் உன்னும் இடத்து, நடுப் பகலிற் சூரிய கிரணம் பாலை நிலத்தில் வெகு வேகமாய் ஓடி வருகின்ற ஆறு போற் காணத் தோற்றினும், அந்த ஆறானது, எங்ஙனம் இன்றோ, அது போலச் சைதன்யமாகின்ற தன்னைத் தவிரச், சகத் என்பது வேறாக உளதோ?

**(பத சாரம்)** இக் கவியினுள் நான்கு ஓகாரமும் இல்லை என்னும் பொருள் தரலால், எதிர் மறை, தாஷ்டாந்தம் அபேதமாக நிற்க, அதனை விளக்கப் புகுந்த திருஷ்டாந்தம் அபேதமாய் இருக்க வேண்டும் அன்றோ? அபேந்தான் எனின், காணப் படுபவைகளும் கேட்கப் படுபவைகளும் மண், நீர், அனல், வளி என்னும் நான்கு பூதங்களுங் கண் உணர்வு, செவி உணர்வு ஆகாய மாகுமா? இஃதன்றியுங் கானலால் தேடி வர என்றதும் திருஷ்டாந்தம் அன்றொ? இஃது அபேதமாயது போல ஏனைய மூன்று திருஷ்டாந் தங்களும் அபேதமாகச் சொல்லாற் கூறினும் பொருளால் அமையுமோ? அமையுமெனின், தேற்றே காரந் தராது என்னை. தந்து பொருள் கொள்ளுதும் எனின், கண் உணர்வே பூத பௌதிக மாகுமா? ஆகும் எனின், அறி படுபொருள் ஆகாதிருக்க வேண்டும். அங்ஙனம் ஆகாதிருக்க முடியுமா? அங்ஙனம் முடித்துத் தெரிவிப்பவர் பால் அடுத்துக் கேட்டுத் தெளியாதது என்னை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வெள்ளை ஆதலால், ஆழமும் வெள்ளையோ? இது நிற்க, யாம் கூறுதும். ஐயறிவிற் கண்ணையும், பஞ்ச பூதங்களில் மண்ணையும் எடுத்து, வாதிக்குதும் கண் எனல் அறிவறியாமை அடுக்கு கட்கும், மண் எனல் உபாதான உபாதேய அடுக்குகட்கும் அமையாமல் இந்தச் சட சித்துக்களைப் பொருளாக அமைத்துக் கூறப் புகின் குணமாக முடியும் அன்றி இருந்தாலன்றோ குணியாக முடியும்? முடியா விடத்துச் சூனியமாக நிற்கும் அன்றோ? அங்ஙனம் **பல்லூழி காலம் நிற்கின் சீவப் பாழ், சிவப் பாழ், பரப் பாழ் இவை நிரையே தோன்றும். அதனைத் தான், கிரியா யோகிகள் குண்டல சக்தி என்பர். மருள் அகலாததால், அந்த இருள் அகலாது. இங்ஙனம் நெடுங் காலம் பழகப் பழக, அங்கே, ஒளி, மின்மினி போன்றும், தீபம் போன்றும், நட்சத்திரம் போன்றும், நிலவு போன்றும், தினகரன் போன்றும் பற்பல தினகரர் போன்றும் இலகிப் பின்னர், உபாதி ரகிதமாகக் காணும். அவ்வாறு பலகாற் பழகப் பழகச் சச்சிதனாந்தம் அதிஷ்டானமனாகவும், சக சீவ பரம் ஆரோபமாகவும் காணப்பட்டு, விருத்தி திருஷ்டாந்தம் போலவும், விவர்த்த திருஷ்டாந்தம் போலவும் ஆகும்.** அங்ஙனமாய நிலையினின்றும் கணிக்கின் அமையுமே அன்றிக், கற்பனை அறிவாற், கற்பனா திரிசயத்தைக் கணிப்பது, பிறவிக் குருடன், சூரிய இலக்கணத்தைக் கண்டு களித்தாற் போலும். இவ்வளவு எட்டி அறியா விடத்துக் கணித்தல் பொருந்தாதென்க. அது அபக்குவத்தைப், பக்குவம் எனவும், அநாசிரியரை, ஆசிரியர் எனவுங், கொண்ட குற்றமே அன்றி வேறன்று. இவ்வளவு தெரியாதவரா இந் நூலாசிரியர். விசாரித்துத் தெளியாது, இவர் மேற் குற்றஞ் சாற்றல் முறையன்று. இவர் மேற் குற்றஞ் சாற்றுவார் ''அகர முதல எழுத்து எல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'' என்னுங் கவிக்குங் குற்றம் கூறுவார் போலும்!. அனைத்தும் தன்னை அன்றி வேறு இன்றென்பது கருத்து. (26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை)**

அங்ஙனமாயின், காண்பானும் காட்சியும் வேறாகக் காணப் படுகின்றனவே என்ற மாணாக்கனை நோக்கி, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**என்னைத் தவிர, மற்றிங்கு ஏதும் இல்லை என் ஆணை**
**பொன்னைத் தவிர இலாப் பூடணம் போற் - பொன்னை உரு**
**வேறாக்கிப் பேருரைத்த வேற்றுமை போல் நம்மையும்**
**அவ்வாறாய்ப் பகுத்து உரைத்தோமால்**

[இதன் பொருள்]

**என்னைத் தவிர மற்றிங்கு ஏதும் இல்லை, என் ஆணை**
**பொன்னைத் தவிர இலாப் பூடணம் போல்**

எனது எதார்த்த வடிவமாகின்ற, சுத்த சைதன்யத்தை அன்றி 'எங்கப்பானை' அதற்கு திருத்தமாக யாதொரு பரமாணு வேனும் எங்கணும் இல்லவே இல்லை. யாது போலும் எனின், பொன்னினது எதார்த்த வடிவை அன்றிப், பூடணம் எனல் தினைத் துணையேனும் எங்கணும் இல்லவே இல்லை என்பது எங்ஙனமோ, அது போன்று.

**பொன்னை உரு வேறாக்கிப், பேருரைத்த வேற்றுமை போல்**
**நம்மையும் அவ்வாறாய்ப் பகுத்து உரைத் தோமால்**

பொன் என்னல் யாதோ, அதனை வெவ்வேறு பற் பல விநோத வடிவங்களாக்கி அவ் வவ் விகற்ப வடிவங்களுக்குத் தக்க காரணக் குறியாகப் பெயர்கள் உரைத்த வேற்றுமைப் பேதங்கள் எங்ஙனமோ, அது போல நமது எதார்த்த வடிவினையும், அப்படியே பற்பலவாக வகுத்துக் காரணக் குறியாகப் பற்பல நாமங்களை உரைத்தோம். ஆதலால் இதிற் சற்றும் ஐயம் இல்லை.

**(பத சாரம்)** தனது எதார்த்த வடிவினைக் காணாதார்க்கு இந் நூன் முழுதும் முரணுமன்றோ? முரணினும், அறிவும் அறிவினது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகற்பமும் எந்தெந்த ஏதுவினாலும் முரணுதற்கு இயையுமோ? முரணவே, முரணாவென, வற்புறுத்தப் பொன்னையும், அதனது பற் பல விகாரங்களையும் அவ் அவற்றிற்கு இயைய அமைத்த பெயர்களையும் உவமானமாக்கியது என்க. மற்று என்பது ''மற்றொன்று சூழினும்'' என்பது போல் நிற்றலின், பிறிதென்னும் பொருள தென்க. வாளா கூறாது 'என் ஆணை' என்றதனால், எவரும் என்னைப் போல் ஆராய்ந்து, தற் தரிசனத்திற் கண்டிதனை ஏற்கப் பாலராவர் என்னுந் துணிபு தொனிக்கக் கண்டாம். காணவே, பகிர் முகத்தால் ஆயுஞ் சொல் ஆற்றலை விடுக என்பதாயிற்று. தற் தெரிசனத்தில் விடாது நிற்கின் அயலாகக் காணப்படுவதின்று என்பது கருத்து. பொன் நாட்டம் அகலின், பணிகள் காணாது அகலுமோ? பணிகள் அகலினும் நிற்கினும் பொன்னிற்கு நய நட்டம் என்ன, என்னுந் தன் கருத்தை, இக் கவியில் வெளிப் படுத்தியவாறு காண்க. (27)

**(அவ தாரிகை)**

இவ் அனுபவம், நவ நவமாக நிற்கும் நிலைகளிற், தனித்தனி ஒவ் ஒன்றாகக் கூற வேண்டும், என்ற மாணாக்கனை நோக்கி, இக் கவி யாதிற்கும் எட்டாது என்பதைக் கூறுகின்றது.

**வாக்கிற்கும் எட்டாது, மனத்திற்கும் எட்டாது,**
**தேக்கிட்டாலுந் தெவிட்டாத் தெள்ளமிர்தம் - நாக்கினில்**
**ஊறல் போல், எம்மிலே ஊறி, ஊமைக் குடம் போல்**
**வேறற, நாமாய் இருந்தோமே.**

[இதன் பொருள்]

**வாக்கிற்கும் எட்டாது, மனத்திற்கும் எட்டாது**
**தேக்கிட்டாலுந் தெவிட்டா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருதிகளுக்கும் எட்ட முடியாது. பகிர் முக மனத்திற்கும் எட்டமுடியாது. பூரணமாக நிறையினும் விஷயங்கள் போல் தெவிட்டாது.

**தெள்ளமிர்தம், நாக்கினில் ஊறல் போல், எம்மிலே**
**ஊறி, ஊமைக் குடம் போல், வேறற நாமாய் இருந்தோம்**

உட் கொண்ட தேவாமிர்தம் காரணமாக, நாக்கில், நீர் கசிவது எங்ஙனமோ, அது போல இந்த ஞானாமிர்தம் உட்கொண்ட கால முதலாக, யாமாகின்ற அறிவின் கண் ஊறித் தன் மயமாக்கியது. அதனாற் தன்னிடத்தில், யாதொன்றும் ஏலாது, வறுமையில் நிற்கும் ஊமைக் குடம் எங்ஙனமோ, அங்ஙனமே வேறாகி, யாதோர் கற்பனைகளும் இன்றி, நாமே நாமாக இருந்தனம்.

**(பத சாரம்)** சற்குருவினது பூரண அருள் வாய்க்காத விடத்து, எங்ஙனம் எட்டும் என்பார். 'வாக்கிற்கும் எட்டாது, மனத்திற்கும் எட்டாது' எனவும், அறிவானந்தம், ஆதலின் 'தேக்கட்டாலுந் தெவிட்டா' எனவும், யாது அபாயம் வரினுந் தேவாமிர்தம் உண்டவனுக்கு, அஃது உயிருக்கு வரச் செய்யாதது போல, யாதாலேனுங் கலங்கினும், உணர்வு கலங்காமை பற்றி ஞானா மிர்தம் ஊறி வருவதால் 'எம்மிலே யூறி' எனவும், யாதொன்றும் பெய்யாமல் வைத்த ஊமைக் குடம் எங்ஙனமோ, அங்ஙனமே சகல கற்பனைகளையும் நம்மில் நசிக்கச் செய்ததால் 'வேறற நாமா இருந்தோம்' எனவுங், கூறியவாறு காண்க. யாதோர் கற்பனையும் இன்றி என்பது கருத்து. எட்டாத, தெவிட்டாத, என்பன இரண்டுங் கடைக் குறைந்து நின்றன. **எம்மிலே ஊறலாவது, சொப்பிரகாசம்,** அணுவணுவாக நாளுக்கு நாள் மேலிட்டு இடைவிடாது வருதலை. (28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அவ தாரிகை)

**அறிவே வடிவாய் இருப்பாய், என்பதை இக் கவி கூறுகின்றது.**

**ஏது சிவானந்தமோ, ஏது சிவாகாரமோ**
**ஏது சிவன் செயலோ, என்னாதே - ஏதும்**
**பிறிவாக, ஒன்றாகாப், பேதமாகாத**
**அறிவா, நிறைவே அது.**

இதன் பொருள்

**ஏது சிவானந்தமோ ஏது சிவாகாரமோ**
**ஏது சிவன் செயலோ என்னாதே**

சிவானந்தம் என்பது யாதோ, சிவாகாரம் என்பது யாதோ, சிவன் செயல் என்பது யாதோ என்று ஐயமுறாமல்.

**ஏதும் பிறிவாக, ஒன்றாகாப் பேதமாகாத**
**அறிவா நிறைவே அது**

தினைத் துணையுந் தண்ணீரைப் போலப் பிறிவு பட நின்றதும், மீண்டும் பிறிவு படாது நின்றதும் ஆகிய பேதஞ் சிறிதுங் காணாத, ஞானப் பிரகாசமாகிப் பரிபூரண சொரூபமே, அது, ஆதலால்.

**(பத சாரம்)** இக் கவியிலுள்ள, மூன்று ஓகாரமுஞ், சுருதி வாசனை யினதாற், துணிபு பெற நில்லாமையின், ஐயம், பிறிவு படுத்தினாற் பிறிவு படுவது போலவும், ஏகப் படுத்தினால் ஏகப்படுவது போலவுங் காண்டலேயன்றி அங்ஙனமாகாது, என்றும் ஒரு தகைத்தாய் நிற்றலின், அஃதிருந்த வண்ணம், நீ இருக்கின், உன் ஐயம் எல்லாந், தானே தவிர்க்கும், என்பது கருத்து. இயைதற்கு இடம்பெறாத மாசற்ற பரம் பொருளைத், துவிதம் எனவும், விசிட்டாத்துவிதம் எனவும், அத்துவிதம் எனவும், இயைவதற்கு வகுத்துக் கூறியது, இனி, ஐயந் திரிபு வாராமைக்கு என்க. **அறிவானந் தத்தைச் சிவானந்தம் எனவும், அறிவாகாரத்தைச் சிவாகாரம் எனவும், அறிவினது புடைபெயர்ச்சியைச் சிவன் செயல் எனவும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளக் கிடந்தமை காண்க. அறிவினது நிலை, எங்ஙனம் எங்ஙனமமோ, அங்ஙனம் அங்ஙனமாய் நிற்றல், ஆனந்தம் ஆதலின், 'அறிவா நிறைவே' அது, என்றார். அறிவு சோபாதிக, நிருபாதிகத்தோடு, கலந்து நிற்கின் ஆனந்தமும் அந் நிலையதாம் என்க. அறிவா நிறைவே அது என்பதில் ஏகாரந் தேற்றம். ஆனந்தத்தை விளக்க நிற்றலின். (29)

**(அவ தாரிகை)**

தான் எனலே, தெருளும், மருளுமாய் நிற்றலின், இரு பக்கமுஞ் சாயாது நிற்கின், அதுவே சந்தமாம், என்பதை இக் கவி கூறுகின்றது.

**நானறியுந் தத்துவங்கள் எல்லாம், தனக்கு அனியந்,**
**தான் அதுவே அன்று, என்று தள்ளும் கால் - ஞானமாத்**
**தள்ளும் அவனாய் இருக்குந் தன்னால், தான் என்று உணர்ந்து,**
**கொள்ளும் அதுவே, சாந்தம் ஆம்**

[இதன் பொருள்]

**நானறியுந் தத்துவங்கள் எல்லாம், தனக்கு அனியந்**
**தான் அதுவே அன்று, என்று தள்ளுங் கால்**

தன்னாலே தான் அறியப் படுபவனவாகிய நில முதலாக நாத தத்துவம், இறுதியாகக் கிடந்த தத்துவக் குழாங்கள் அனைத்துந், தான் எனற்கு அன்னிய மாக நிற்கினும், ஆராய்ச்சியின் கண், தான் அவை அல்ல அல்லவென, நியதி களையப் பட்டுக் கொண்டே வரும். அங்ஙனம் வரும் இடத்து.

**ஞானமாத் தள்ளும், அவனாய் இருக்குந் தன்னால்**
**தான் என்று உணர்ந்து கொள்ளும், அதுவே சாந்தம் ஆம்**

ஆராய்ந்து தெளிந்து தள்ளுவது மெய் உணர்ச்சி அன்றோ? அந்த மெய் உணர்ச்சியாய் நின்று இயற்றுவதற்கு, கருத்தாவாகிய தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனாலே, இங்ஙனம் இருமையும் ஆயின என்று உணர்ந்து திடம் பெறுவதே உப சாந்த நிலை எனப்படுவதாம்.

**(பத சாரம்)** தன்னைத் தான் உணர அறியாமையால், தத்துவங் களைத் தனக்கு அன்னியம் எனவும், பன்மையின் ஒருமையும் என்று வழுவமைதி இருப்பதால் 'தானதுவே' எனவும், தான் அஞ்ஞானமாய் நின்று, இவை அனைத்தும் மெய் எனக்கொண்டது என்பதைக் குறிப்பிக்க 'ஞானமாத் தள்ளும் அவனாய் இருக்குந் தன்னால் தான்' எனவும் ஈரிடத்தும் இயற்றுதற் கருத்தாவாயும், ஏவுதற் கருத்தாவாயும், அறிவறியாமையை இயக்கலின், தான் என்பதே உண்மை என்று அனுபவ பூர்வமாகத் திடங் கொண்டு நிற்பதினும், உப சாந்தம் எனற்கு இடம் இன்மையின் 'என்று உணர்ந்து கொள்ளும் அதுவே சாந்தமாம்' எனவுங் கூறியவாறு காண்க. உப சாந்தம் என்றது சாந்தம் என நின்றது. தான் எனலே, ஞான, அஞ்ஞானமாய் நிற்கும் என்பது கருத்து. (30)

**(அவ தாரிகை)**

உப சாந்தமே நிலையாயின், சிவமாவது தான் யாதோ, என்ற ஐயம் நீங்க, அதனை இக் கவி கூறுகின்றது.

**சாந்தமே தற் சாட்சி, தற் சாட்சியே பிரமம்**
**போந்த பிரமமே, பூரணமாம் - ஆய்ந்து உணர்ந்த**
**சுத்த பரி பூரணமே தோன்றாச், சுவானுபவஞ்**
**சித்த நிலை தானே, சிவம்**

[இதன் பொருள்]

**சாந்தமே தற் சாட்சி தற் சாட்சியே பிரமம்**
**போந்த பிரமமே பூரணமாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர்க் கூறிய உபசாந்தம் என்பதே தற்சாட்சி என்பதும், தற்சாட்சி என்பதே பிரமம் என்பதும், அங்ஙனம் எழுந்த நிலையின தாகிய பிரமம் என்பதே பரிபூரண நிலை என்பதும்.

**ஆய்ந்து உணர்ந்த, சுத்த பரி பூரணமே தோன்றாச்**
**சுவானுபவஞ், சித்த நிலை தானே, சிவம்**

சுருதி, குரு, சுவானுபத்தால், ஆராய்ந்து தெளிந்த களங்கரகித மாகிய, அந்தப் பரிபூரணமாய் நின்ற நிலையே, மேலோன்றுந் தோன்றற்கரிய, சுவானுபவ நிலை என்பதும், அங்ஙனம் நிலைத்த திடசித்தம் என்பதே, சிவம் எனப்படும், நிலை என்பதுமாம்.

**(பத சாரம்)** சாந்தமே தற் சாட்சி எனல், வழக்கற நிற்றலே, மெய் உணர்ச்சியாம் என்கை. தற்சாட்சி எனல் எல்லா அவத்தைகள் மாறினும், மெய் உணர்ச்சி மாறாமல் நிற்கை. தற் சாட்சியயே பிரமம் எனல். அவ் அறிவே ஆனந்தமாய் நிற்கை. பிரமமே பூரணமாம் எனல். அவ்வானந்தம் பரிச்சேத தோடம் அமையாமல் எங்கும் வியாபித்து நிற்கை. சுத்த பரிபூரணமே தோன்றாச் சுவானுபவம் எனல். அங்ஙனமாய வியாபகஞ் சோர்வுறாது அதீதப்பட்டு நிற்கை. சித்த நிலை தானே சிவமெனல். அவ் அதீதம் போல்வது, ஒன்று, இன்றெனத் திடங் கொள்கை. அதீதத்தினும் மேலாயது, இன்றென்பது கருத்து. இக் கவியிலுள்ள நான்கு ஏகாரமுந் தேற்றம். (31)

**(அவ தாரிரகை)**

மாயை என்பதுஞ் சாயுச்சியம் என்பதும், இனைய எனலை இக் கவி கூறுகின்றது.

**சித்தம் பிறந்து செகம் பிறந்து, நான் என, ஓர்**
**கத்தன் பிறந்த வழி கண்டோமே - சித்தம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடங்காமையே, மாயை, அம் மாயை மாய்ப்பார்,**
**திடந் தானே, சாயுச் சியம்**

(இதன் பொருள்)

**சித்தம் பிறந்து செகம் பிறந்து, நான் என, ஓர்**
**கத்தன் பிறந்த வழி கண்டோமே**

என்றும் ஒரு தகைத்தாய்ப் பரிபூரணமாக விளங்கி நிற்குஞ் சைதன்னியத்திற் கயிற்றிற் பாம்பு போல் அவாந்தரமாக ஓர் நினைவு உதித்து, அந்த நினைவே சகத்தாகப் பரிணமித்து, அங்ஙனம் பரிணமித்தலால், யான் அல்லாததை யான் என்னும் ஓரகங்காரி கர்த்ருத்துவமுஞ் சேதனத்துவமும் உடையவன் போல் செனித்த வகையை இப்போது பிரத்தியட்சமாகத் தெரிந்தோம்.

**சித்தம் அடங்காமையே மாயை அம் மாயை**
**மாய்ப்பார் திடந் தானே சாயுச் சியம்**

இங்ஙனமாய காரணத்தை விசாரித்துத் தெளிந்தும், அங்ஙனஞ் சித்தத் திடம் உறாமையே, மாயை எனலும், அங்ஙனம் மாய பிராந்தியை, ஒருங்கே தொலைத்து நிற்கும் மகான்கள், சித்தக் கலக்கம் இன்மையே, சாயுச்சியம் எனலுமாம்.

**(பத சாரம்)** கண்டோமே என்பதில் உள்ள ஏகாரம் அசை நிலை. அடங்காமையே, திடந்தானே என்பவற்றில் உள்ள ஏகாரங்கள், வேறு அன்றெனக் காட்ட நிற்கையாற் பிரிவிலை எனினும் அமையும். நான் ஓர் கத்தன் என்பது, மலடி மைந்தன் என்றாற் போலும். திடந் தான் என்பது தேர்ச்சித் தெளிவு மிகுதலை. தினச் சுழுத்தி கலையுங் கால், இதனை, யாங்கு உற்று உணர்ந்து நோக்கிற், பகிர் முகத்தில் இங்ஙனமாவது நழுமாயின், அந்தர் முகத்தில் இங்ஙனம் நிகழ்வதைப் பிறர் உணர்த்த வேண்டுமோ? தானே அங்ஙனமாய நிலைக்கண் கண்டு கொள்ளலாம் என்க. தன்னைத் தான் மறந்த மறதியே, நினைவாக ஸ்புரித்து, அந்த ஸ்புரிப்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகத்தாகத் தடித்து அத் தடிப்பே ஏக தேசத்தில் அகம்பாவமாக நின்றது, என்று அறிக. இவ் உள அறியாதார் யாது கற்றுச் சாதிக்கினும், உத்திரவாதி ஆகார். மண் முதலிய ஐம்பூதங்களில் ஒவ்வொன்றையும் காரிய வகைகளிற் செல்லாது அவற்றைத் தத்தம் காரண வகையில் ஒடுக்கிக் கொண்டு செல்லச் செல்லத் திரிபுடி என்பதின்றி வறிது நிற்கும் அன்றோ? அவற்றை மாயை எனவும் அதனை ஐயந் திரிபின்றித் தெளிந்த விடமே சாயுச்சியம் எனவும் கொள்க. பொருளாற்றலாற் செல்லின், துக்க நிவிர்த்தியுந் தடையற்ற ஆனந்தமும், நேரே எய்தும் என்பது கருத்து. (32)

**(அவ தாரிகை)**

இவ் அனுபூதியிற் கலங்காது நிற்கின் சனன மரணத்தைப் பற்றி வரும் பய கம்பனாதிகள் எய்தா என்பதை இக் கவி கூறகின்றது.

**எல்லை அற்ற சென்மம், எடுத்தோம் இறந்தோம் என்று,**
**அல்லல் உற்ற பீதி, அழிந்தோமே - தொல் உலகம்**
**எல்லாம், கடு வெளியாய், என் வடிவாம், என்றன் வடிவு**
**அல்லாது, பொய் ஆதலால்.**

[இதன் பொருள்]

**எல்லை அற்ற சென்மம் எடுத்தோம், இறந்தோம் என்று,**
**அல்லல் உற்ற, பீதி அழிந்தோம்**

இதுகாறும் இது போன்ற நானாவிதமாய் உள்ள பிறவிகளைக், கணக்கின்றி எடுத்தோம் என்றும், எடுத்தவாறே, வயதுக்கு எல்லையின்றி இறந்தனம் என்றும், கொண்டதால், அல்லலே மயமாய் உள்ள, பயகம்பன் ஆதிகளால் அழிந்து விட்டோம்.

**தொல் உலகம் எல்லாம், கடு வெளியாய் என் வடிவாம்,**
**என்றன் வடிவு அல்லாது, பொய் ஆதலால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்க சொப்பனம் போலப், பொய்யாய், அனாதியாய் நின்றுள்ள, உலகங்கள் அனைத்தும், வெற்ற வெளியாகத் தோன்றும், எமது சுயம் பிரகாச வடிவமே நிலையினதாக விளங்கும். இங்ஙனமான எமது எதார்த்த வடிவத்தை அன்றி, வேறு கண்டிலோம். அனைத்தும் மித்தை ஆதலின்.

**(பத சாரம்)** சென்மம் எடுத்தலும், இறத்தலுஞ், சுக்கில சோணிதங், கருவில் தனுவாகத் தடித்த அவசரத்திலேனும், நாழிகைக் கணக்கு களிலேனும், தினக் கணக்குகளிலேனும், வாரக் கணக்குகளிலேனும், மாதக் கணக்குகளிலேனும், கருவை விட்டு அகன்ற அவசரத்தி லேனும், நாழிகை, தினம், வாரம், மாதம், வருடம், யுகம் இவற்றுள் ஒன்றிலேனும், எம் போன்ற உயிர்கள் மரித்தலைப் பிரத்தியட்ச மாகக் கண்டு வருகின்றோம். இங்ஙனம் பிறத்தலும், இறத்தலும் அளவை அடங்காமையால் 'எல்லையற்ற' என்றார். இங்ஙனமாதற்கு, இடமாய் நிற்பது உலகம் அன்றோ? அதுவும் பிரவிர்த்தியால் உண்டெனவும், நிவிர்த்தியால் இன்றெனவும் இயைதற்கு இடம் பெற ஏற்றலினாலும், இத்தனையுங் சைதன்யத்தில் என்று நிகழ்தலினானும் 'தொல்லுலகம் எல்லாங் கடு வெளியாய் என் வடிவாம், என்றன் வடிவல்லாது பொய்யாதலால்' எனக் கூறியவாறு காண்க. அனைத்துஞ் சைதன்யத்தை அன்றி இல்லை என்பது கருத்து. அழிந்தோமே என்பதில் உள்ள ஏகாரம் ஈற்றசை. என்றும் எனலை ஈரிடத்தும் ஒட்டுக. (33)

**(அவதாரிகை)**

விஸ்மரணையிற் செய்த கன்மம் அனைத்தும் தஸ்மரணையில் இன்று என்பதை இக்கவி கூறுகின்றது.

**காலங் கருதிக் கடவுளரைக் கை கூப்பிச்**
**சால விரதங்கள் எல்லாஞ் சாதித்தே - மேல் உணர்வால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈதெல்லாம் நாமல என்றெண்ணி, அனந்தானந்த**
**போத, நாமாகாத போது.**

[இதன் பொருள்]

**காலங் கருதிக் கடவுளரைக் கை கூப்பிச்**
**சால விரதங்கள் எல்லாஞ் சாதித்தோம்**

ஓர் விரதமாக உறதி கொண்டு பகலில் முக் காலத்தையும், இரவில் முக் காலத்தையும், விடாது கருதித் தத்தம் இஷ்ட தேவதைகளை, மிக்க அன்பு கொண்டு, கை குவித்து, நாங் கொண்ட விரதங்கள் அனைத்தையும், உடல் மெலிய சாதித்து வந்தோம்.

**மேல் உணர்வால், ஈதெல்லாம் நாமல, என்றெண்ணி**
**அனந்தானந்த போதம், நாமாகாத போது**

பின்னர் இவற்றில் எய்ப்பு வந்துழி, மெய் உணர்ச்சி என்னும் சுவயம் பிரகாசங் கொண்டு மேற் கூறிய கன்மங்கள் அனைத்தும், நாஞ் சிறிதும் அல்ல, அல்ல என்று, நியதி களைந்து, ஸ்திர உணர்வால் திடங் கொண்டு, சர்வ காமாப்திகம் என்னும், போத வடிவம் யாம், ஆகாத அவல காலத்தில்.

**(பத சாரம்)** கால மாறாவன: பகலில், காலை, மாலை, நடுப் பகல்களும், இரவில் முதல், இடை, கடை என்னும் நாமங்களுமாம். சாலச் சாதித்தோம் என முடித்துப் பொருள் கொள்க. சச்சிதானந்த இலக்கணத்தை இயையப் பெற்ற, உணர்வு எனல் யாதோ? அதனை மேல் உணர்வு எனவும் உபாதி சகிதமாக நின்று அனுபவிக்கும் எல்லாச் சுகங்களும், இவ் அனுபூதி நிலை உடையோனுக்கு வேறன்மையின் அனந்தானந்த போதம் எனவும் கோடற்கு ஏற்றமை காண்க. ஆகாதபோது, எனவே உடன்பாட்டிற் சாதிக்கேம் எனக் குறிப்பிக்க நின்றது. மெய் உணர்ந்தார் செய்யினுஞ் செய்திலர், என்பது கருத்து. (34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை)**

இவ் அனுபவம் வாய்ப்பது, நின் மல சித்தர்க்கு எனலை, இக் கவி கூறுகின்றது.

**நித்தியமாய் ஏகமா நின்(ர்) மலமாம் அப் பூரணமாய்**
**சத்தியமாய் நின்று ஒளிருந் தற் போதஞ்: - சுத்தராய்ச்**
**சித்த நிலை பெற்றவராய்த் தீர்ந்த செனனத்தவராய்**
**உத்தமராய் உள்ளார்க்கு உறும்**

[இதன் பொருள்]

**நித்தியமாய் ஏகமா நின்(ர்) மலமாம் அப் பூரணமாய்**
**சத்தியமாய் நின்று ஒளிருந் தற் போதம்**

நிரந்தரமாயும், துவிதம் அற்றதாயும், மலரகிதமாயும், பரிபூரண நிலையின தாயும், பூர்வ பட்ச மாக்கற்கு இயைந்தது, அன்மையாயும் நின்று விளங்குவது யாதோ, அந்தத், தானே தானாகின்ற தற் போதமானது.

**சுத்தராய்ச் சித்த நிலை பெற்றவராய்த் தீர்ந்த செனனத்தவராய்**
**உத்தமராய் உள்ளார்க்கு உறும்**

பிராந்தி அற்றவராயும் சித்தந் திடம் உற்றவராயும் இனிப் பிறவிக்கு இயையாத வராயும் சன்மார்க்கத்திற் சலியாதவராயும் நிற்பார், யாவரோ, அவர்க்கே, தப்பாமல் எய்தும்.

**(பத சாரம்)** என்றும் ஒரு தகைத்தாய் விளங்கலின், நித்தியமாய் எனவும், சலனம் அற்ற கண்ணுடையார்க்கு விளங்குவது, உண்மை வடிவம் ஆதலின், ஏகமாய் எனவும், சுசாதி முதலிய போதம் இன்மையின் நின்மலமாய் எனவும், கால பரிச்சேதங் கடந்தமை யின் பூரணமாய் எனவும், போலி அன்றாதலின் சத்தியமாய் நின்றொளிரும் எனவும், இனி எய்தும் ஆகாமியங்கள் அனைத்துஞ், சிங்கத்தின் முன் யானை போற் காண்டலின், தீர்ந்த செனனத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராய் எனவும், கூறினார் என்க. இழக்க வேண்டும் என்பார் கூறுந், தற்போதம் ஈதென்னற்க.

ஏன் எனின், உறுமென உடன் பாட்டிற்கு இயைவதாக முடிதலின், தானே தானாகிற போதம் என்றுரை கொண்டாம். இதனை மறுப்பார் தற் தெரிசனம் இல்லார் போலும்.சத்தியமாய் ஆனந்தத் தற்போதம் என்பாரும் உளர். இஃது ஏற்குமாறு கண்டு உரை கொள்க. ஏனையோர்க்கு இந் நிலை உறாது என்பது கருத்து. (35)

**(அவ தாரிகை)**

இக் கவி முதல், ஐந்து கவிகளானும், **மகான்களது நடை,** இங்ஙனம் எனக் கூறுகின்றது.

**வெட்டெனவும் பேசார், வெகுளார் முகங் கோணார்**
**இட்ட பதார்த்தம் பெரியோர்க்கு ஏற்று வைப்பார் - துட்டர்களைச்**
**சேரார், யாவர்க்குந் தீங்கு உரையார், கண் சிவந்து**
**பாரார், பிறவி தீர்ப்பார்.**

[இதன் பொருள்]

**வெட்டெனவும் பேசார், வெகுளார், முகங் கோணார்,**
**இட்ட பதார்த்தம் பெரியோர்க்கு, ஏற்று வைப்பார்**

உபசாந்த நிலை மேலிட்டு இருப்பதால், கடூரமாகவும் போசார், கோபியார், முகஞ் சுளியார், தமக்குப், பிறர் இட்ட பதார்த்தங் களைத் தம்மைப் போலுள்ள சத்துக்களுக்கும் ஏற்கும் படி செய்வர்.

**துட்டர்களைச் சேரார், யாவர்க்குந் தீங்கு உரையார்,**
**கண் சிவந்து பாரார், பிறவி தீர்ப்பார்**

தீய சேட்டை உள்ளவர்களை என்றும் அணுகார். ஒருவரையுங் கெடுக்க நினையார். மிக்க கோபத்தோடு, கண் சிவந்து பார்க்க மாட்டார்கள். யாரெனில், ஒருங்கே, பந்தம் அணுகாது ஒழிப்போர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(பத சாரம்)** வெளிப்படை (36)

**(அவ தாரிகை) இதுவுமது**

**பொன்றும் பொருளைப், பொருளாகவும் போற்றார்**
**என்று நலந், தீங்கு எடுத்து உரையார் - சென்ற சில**
**காரியத்தை நோக்கிக், கழியார், இழிவு செய்யார்**
**ஆரியரே, தாம் ஆகுவார்**

[இதன் பொருள்]

**பொன்றும் பொருளைப், பொருளாகவும் போற்றார்**
**என்று நலந் தீங்கு எடுத்து உரையார்**

நிலை அற்ற வஸ்துக்களை, யாதோர் இலக்காகவுங் கருதிக் காப்பாற்றார். எப்போதும் இது நன்மை எனவும், தீமை எனவும் எடுத்து ஒருவரோடுஞ் சொல்லார்.

**சென்ற சில காரியத்தை நோக்கிக் கழியார், இழிவு**
**செய்யார், ஆரியரே தாம் ஆகுவார்**

கழிந்த சில காரியங்களைக் கருதிக், காலங் கழியார். பகைவரை ஏனும் இழிவு படுத்தார். அவர்கள் யாரெனின், தன்னைத் தான் அளிக்கத்தகும் ஆசிரியர் எனப்படுபவர், இவர்களே அல்லாமல், வேறல்லர் என உலகுளார் கூறற்குத், தாமே பாத்திரமாக நிற்பவர்.

**(பத சாரம்)** நிலை உள்ளன போற் காணப் பட்டு அழிவனவற்றைப், பொன்றும் பொருளென்றாரே அன்றிக், குணி போற் காணப்பட்டுக் குணமாக நிற்பவற்றை அன்று, இது விவகார சத் தன்றாதலின், இவர்க்கு மூன்று சத்து உடன் பாடாம். அவை **வியாவகாரிக சத்து, பிரதிபாசிக சத்து, பாரமார்த்திக சத்து** என்பன. ஏனையோர்க்கு வியாவகாரிக சத்தொன்றுமே என்க. ''**திரி வித உலகத்து அரிதொரு ஞானி**'' என்பதைக் குறிப்பிக்க. '**ஆரியரே தாமாகுவார்**' என்றார். விவர்த்தமெனக் காட்டச் சென்ற சில காரியம் என்றார், என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாகவும் போற்றார் என்ற உம்மையால், பிராதி பாசிகத்தையும் பாரமார்த்திகத்தையும் வருவித்தாம். (37)

**(அவ தாரிகை) இதுவுமது**

**வேத விதியை, வெறுத்து உரையார், உள்ளளவும்**
**ஓதல் உருகல், ஒழிந்திரார் - சாதல்**
**மறவார், கருத்து இளகி, மண்ணுலகில் வாஞ்சை**
**பிறவார், பிறவாத பேர்**

[இதன் பொருள்]

**வேத விதியை வெறுத்து உரையார், உள்ளளவும்**
**ஓதல், உருகல், ஒழிந்திரார்**

**தம்மை இந் நிலைக்குக் கொண்டு வந்தது, வேத விதியாதலால், அதனை, என்றும் வெறுத்துத் தூஷியார். பிராரத்துவம் உள்ளளவும், தன்பால் உதிக்கும நவ நவமான அனுபூதி ரசங்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுதலிலும், அது காரணமாக் சிந்தை உருகுதலினுங் கண நேரமும் ஒழிந்து இருக்க மாட்டார்.**

**சாதல் மறவார், கருத்து இளகி, மண்ணுலகில்**
**வாஞ்சை பிறவார், பிறவாத பேர்**

தமக்கு எய்து மரண காலத்தைக் குறித்துக் கண நேரமேனும் மறவாது இருப்பர். மனம் இளகிப் பூவுலகில், கிஞ்சித்துந் தானே என்று, எவற்றிலும் ஆசை வையார். அவர்கள் யாரெனில் ஆகாமியந் தினைத்துணை ஏனுந் தலை எடுக்காது நசிக்கச் செய்யும் வல்லமை உடையவர்.

**(பத சாரம்)** தத்தம் வருணாச்சிரம ஒழுக்கத்தில், நிற்றல் கண்டபடி செல்லும், **மனத்தை அடக்கற்கு, இஃதோர் தந்திரமாதலின், 'வேத விதியை வெறுத்து உரையார்' எனவும், தமது ஆனந்தப் பெருக்கு, எவர்க்கும் எய்த வேண்டும் என்பது கருதி 'ஓதல் உருகல் ஒழிந்திரார்'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனவும், அறிவே வடிவாக விளங்கற்கு, இவ் உடம்பு சாதனக் கருவி அன்றோ? இஃது ஒழியின் அவலம் ஆகுதுமே என்ற, நடுக்கம் விடாமையினால், சாதல் மறவார் எனவும், அறிவுக்கு அணுவும் மயல் அல்லவாதலின், கருத்து இளகி மண் உலகில் வாஞ்சை பிறவார்'** எனவும் கூறியவாறு காண்க. 'கருத்து இளகி மண்ணுலகில் வாஞ்சை வைத்தல்: மண், பெண், பொன், மகன் என்பவற்றில் ஆழ்ந்த சிந்தை உடையோர் அவற்றிற்கு நாட்டம் எய்தியவழி அவர்கள் படும் வாதைக்கு இரங்கி **'வாஞ்சை பிறவார்'** எனினும் அமையும். மங்கையர் அவயவங்களில் ஒன்றை நோக்கி வாஞ்சை பிறவார் எனினும் அமையும். **ஓதல் உருகல் ஒழிந்திரார் எனற்குச் சான்றோர் இயற்றிய சுவானுபூதி நூலை வாசித்தலிலும், அது பற்றி உருகுதலிலும் ஒழிந்திரார் எனினும் அமையும்.** பிறக்கும் அவரெனின், இந் நான்கு வினை முற்றும், எதிர் மறையாகா என்க. (38)

**(அவ தாரிகை) இதுவுமது**

**சித்த சலனந் திடுக்கு எனவுஞ் சற்றும் உறார்**
**முத்தி வழி கேட்கவே மோகிப்பார் - புத்தி போய்**
**மாடு நம் வீடு மனை மக்கள் செல்வம் மாச்சரியம்**
**கூடி அழுந்தார் பக்குவர்**

[இதன் பொருள்]

**சித்த சலனந் திடுக்கு எனவுஞ் சற்றும் உறார்**
**முத்தி வழி கேட்கவே மோகிப்பார்**

தமது சித்தத்தின் கண் யாது அபாயம் நேரிடினும் கலங்குதலும் நடுங்குதலுஞ் சிறிதும் அடையார். ஐக்கிய நிலைக்கு இயைந்த விடுதியாகிய முத்திக்கே மிகவும் மோதித்து உழல்வார்.

**புத்தி போய், மாடு, நம் வீடு, மனை, மக்கள்**
**செல்வம், மாச்சரியம், கூடி அழுந்தார், பக்குவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது புத்தி மெல்லச் சென்று, நமது மாடெனவும், நமது வீடெனவும் நமது பெண் சாதி எனவும், நமது புத்திரர்கள் எனவும், நமது செல்வம் எனவும் அதிசயமாகக் கூடி அழுந்தினுந், தாங்கள் அழுந்தார். விடுதி நிலைக்கே இயைந்த பக்குவர்.

**(பத சாரம்)** கேட்கவே என்பதில், எகாரம் தேற்றம் மாடு, வீடு, மனை, மக்கள், செல்வம் என்பன பலவாதலின், நமது என்பதைத், தன்மைப் பன்மை ஆறாம் வேற்றுமை, ஆக்கினார். நமது வென்பது, இடை நிற்றல் தீவகமென்க. அழுந்தினாலும் என்பது, இசை யெச்சம். புத்தி போய்க் கூடி அழுந்தார் என்பதில், சினை வினை முதலொடு செறிந்தது. 'சினை வினை சினையொடு முதலொடுஞ் செறியும் என்றிலக்கணம் இருத்தலால் என்க. உறாரென்ற பய நிலைக்குச் செயப்படு பொருளாதலின், திடுக்கெனப் பாடம் ஓதி உரை கொண்டாம். (39)

**(அவதாரிகை) இதுவுமது**

**ஆர்க்கு வரு விருந்து என்றாவனவும் போவனவுந்**
**தீர்க்க நிலை அன்றித் தெளிவரே - பார்க்குங்காற்**
**சாந்தராய், நித்தியராயத், தத்துவ போதத்தவராய்த்**
**தீர்ந்த நிலை நின்றார், சிலர்**

**இதன் பொருள்**

**ஆர்க்கு வரு விருந்து என்றாவனவும் போவனவுந்**
**தீக்க நிலை அன்றித் தெளிவரே**

யாருக்கார் வருவிருந்தெனவும் யாருக்கெவை எற்கப் பாலவை எனவும், தள்ளற் பாலவை எனவும் முன்பு பின்புள்ள தமது தீர்க்க நிலையை அல்லாது, ஐயந்திரிபறத் தெளிவார்களே.

**பார்க்குங் காற் சாந்தராய், நித்தியராயத், தத்துவ**
**போதத்த வராய்த், தீர்ந்த நிலை நின்றார், சிலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றுணரும் இடத்து உபசாந்த நிலையினராகியும், போலியாகாது நித்தியத்துவம் உடையாராகியும் மெய் அறிவினை உடையவராகியும், இனி யாதொன்றாலேனும் பூர்வ பட்சமாக்கற்கும், அங்ஙனமாதற்கும் இயையாத தீர்ந்த நிலையில் நின்றவர்களிற் சிலர்.

**(பத சாரம்)** விருந்து இடுபவரும், அடைபவருஞ், சைதன்யமன்றி இன்மை யானும், அங்ஙனமாய இன்மையிற், கொள்ளப்படுவன, தள்ளப்படுவன, உளவோ இல்லையே, ஆதலினானும் ஆர்க்கு வருவிருந்து என்றாவனவும், போவனவும் என்றார். என்றெனலை, யாவனவும், போவனவும் என்பவற்றோடு ஓட்டுக. தெளிவரே என்பதில் உள்ள எகாரம் எதிர்மறைப் பொருளைத் தர நின்றதால் வினா. எனவே, தீர்க்க நிலை காரணமாகத் தெளிவர் என்பது பெற்றாம். சிலர் என்பதனால் தீர்ந்த நிலை என்றார் என்பதை ஏழாம் வேற்றுமை இடப் பொருள் ஆக்கினாம். பலர் என்னாதது கணிக்கற் பாலர் என்பது கருத்து. ஏதுகை, வழுவைக் கருதாது, ஏற்கவே எனப், பாடம் ஓதுவாரும் உளர். தத்துவம் என்பது பல பொருள் குறித்த, ஒரு சொல்லாதலின், உண்மை என்றாம். போலியாகாது நித்தியத்துவம் உடையராகியும் என்றுரை கூறியது, அபாவம் நான்கையும் ஏற்றிலர் எனற்கு. (40)

**(அவ தாரிகை)**

இக் கவி அபாவம் நான்கினுள் ஒன்றை ஏனும் மறந்துங் கருதார் என்பதைக் கூறுகின்றது.

**சங்கற்ப சாலச் சகத் தோற்றரவை எலா**
**இங் அற்பம் என்னாது இழிவரே - பங்கமற**
**இம்மை மறுமை இரண்டிடத்தும் அப்பாலுந்**
**தம்மை அன்றிக் காணாதவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இதன் பொருள்]

**சங்கற்ப சாலச் சகத் தோற்றரவை எலாம்**
**இங் அற்பம் என்னாது இழிவரே**

மனமே, சால வித்தை போற் தோன்றுகின்ற, சகத் தோற்றரவை அனைத்தையும், தமது அகண்ட பரிபூரண நிலையில், தினைத் துணையும் இல்லை, எனத் துணியாமல், மகத் எனக் கருதி, அதின் வயப்படுவரோ?

**பங்கமற, இம்மை, மறுமை, இரண்டிடத்தும்,**
**அப்பாலுந் தம்மை அன்றிக், காணாதவர்**

காமம், வெகுளி, மயக்கம் என்னுங் குற்றம் நீங்கப் பிறப்பு வீடென்னும் இருமைக் கண்ணும் அதற்கு அப்பாலாகிய, ஸ்திர ஞானத்தின் கண்ணுந், தற் தெரிசனத்தை அன்றி, வேறு காணாத சத்துக்கள்.

**(பத சாரம்)** காணாதவர் இழிவரே, என்பவற்றை எழுவாய் பயனிலை ஆக்குக. இழிவரை என்பவற்றில் உள்ள ஏகாரம் மறுத்தற் பொருளைத் தர நின்றதால் வினா. எங்கே மனமுளதோ, அங்கே நினைவாகின்ற புடைபெயர்ச்சி உளதாம். அஃது எங்குளதோ, அங்கே சகத்தாகின்ற பரிணமிப்புளதாம். இஃது எங்குளதோ, அங்கே திணை பால் இடக் கற்பிதமும் உள்ளதாம். இங்ஙனம் இருத்தலினாலும், பூதாகாயத்தை அன்றிச் சலனத்துவ மாகின்ற காற்றுளதேல், சிதாகாயத்தை அன்றி, ஸ்புரிப்பாகின்ற மனமெனல் உண்டாம். இங்ஙனம் இருத்தலினாலும், சங்கற்ப சாலச் சகத் தோற்ரவு எனற்கு யாது முரண்? தெரிந்தது போற் பிதற்றல், கர்த்தபம் போலும். தனது எதார்த்த வடிவினைக் கண்டு, நில்லாததால் என்க. இந் நிலை நிற்பார் ஆங்காங்கு இருத்தலின், தன்னை என்னாது, தம்மை என்றார். தத்தம் மனத்தை விசாரித்துத் தெளியாதார், அதன் பரிணமிப்பை எங்ஙனம் தெரியவல்லார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத் தேடி அறிய வல்லாதார், பரத்தைத் தேடி அறிய வல்லார் போலும் என்க. சால வித்தை போல் இருத்தலின் சகத்தைச் காலம் என்றார். முறையோ? வழுவோ? வழுவெனின் ஆதார ஆதேய அடுக்குகள் அற்றிருக்க வேண்டும். அங்ஙனம் இன்றேல், ஆதலின் முறை என்க. தம்மை அன்றிக் காணாதவர் என்பதனால், அபாவம் எனல் சற்றும் இவர்க்கில்லை என்பது கருத்து. (41)

**(அவ தாரிகை)**

சாஸ்திர வாசைன ஏனும் அறிவு அறியாமை வாசனை ஏனும், இவர்க்கு மறந்தும் வாராவோ எனற்கு இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**சத்தப் பிராந்தி, சத சத்தாம் பிராந்தி எலாஞ்,**
**சித்தப் பிராந்தி என்றே தேறுவார் -முத்தர் தாம்**
**ஆரோபமாகும், அத்தை தொறுந் தோற்றி அழியா**
**ஆரோபம் பொய், ஆதலால்**

[இதன் பொருள்]

**சத்தப் பிராந்தி, சத சத்தாம் பிராந்தி எலாஞ்,**
**சித்தப் பிராந்தி என்றே தேறுவார், முத்தர் தாம்**

முன் உணர்ந்த சாஸ்திர வாசனை ஏனும், முன்னர் நியதி களைந்த அறிவறியாமை வாசனையேனும் ஒருகால் வரின், இவை அனைத்தும் எமது சித்த விகற்பத்தால் எய்திய வாசனையாகும் என மயங்காது, தெளியா நிற்பர், சீவன் முத்தர் எனப்படுவோர்.

**ஆரோப மாகும் அத்தை தொறுந் தோற்றி அழியா**
**ஆரோபம் பொய், ஆதலால்**

மித்தை எனற்கு இயையும் புடை பெயர்ச்சியாகிய சாக்கிர முதலிய அவஸ்தைகள் அனைத்திலும் ஆங்காங்கு தோன்றி அழிகின்ற காட்சிகளும், அபிமானங்களும், இன்னும் இவை போல்வன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவும் பிரதி பிம்போபாதி ஆதலினாலும், மிகவும் மித்தையாம், ஆதலினாலும்.

**(பத சாரம்)** சத்தெனல் அறிவு., அசத் எனல் அறியாமை. இவை இரண்டிற்குந், தான் எனல், இயைப்பிக்குங் கர்த்தா ஆதலினானும், சித்தப் பிராந்தி சினை வினை ஆதலினாலும், இவை இரண்டுந் தேறுவார் என்னும் முதல் வினையோடு முடிந்தன. அறிவின் புடை பெயர்ச்சியை அன்றி எவ் வித அவத்தைகளும் இல்லாதிருக்கப் பரிணமிப்பையும் அவ்வவற்றின் நெகிழ்ச்சியையும் எங்ஙனம் மெய் என்று உரைக்குதும்? ஆதலின், ஆரோபமாகும் அவத்தை எனவும், ஆரோபம் பொய்யாதலால் எனவுங் கூறியவாறு காண்க. ஆரோபம் எனலையும், பொய் எனலையும், மீமிசை என்னற்க. வைப்புறுத்துவான் வேண்டியாதலின், என்றே என்பதில் ஏகாரந் தேற்றம். அவத்தைகளும் அவத்தைகளிற் தோன்றி அழிவனவும் மித்தை எனவோர் முடிவாய் முடிக்காது, மூன்றிடத்தும் அதனையே கூறியது, மறந்திடாததற்கு என்க. பிராந்தி எனல் மயக்கம். ஆன்மா வாகிய யாம், யாது பிராந்தியும் அல்லாமையின், தேறுவார் என்றார். அனைத்துஞ் சித்தப் பிராந்தி எனத் தேறுவரன்றி, மயங்கார் என்பது கருத்து. (42)

**(அவதாரிகை)**

ஆன்மாவாகின்ற சைதன்யத்தை அன்றிச், சக சீவ பரம் இன்றெனலை ஏற்கின், யாரை யார் பூசித்தல் எனற்கு, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**தேகா ஆலயத்திற், சிதாகாச தேவதையை,**
**ஆகாய சாந்தி மலாராலே - ஏகாந்த**
**மந்திரத்தாற், பூசை செயும் மாதவரை ஆதரித்துச்,**
**சந்ததம் வாழ் வாழ்வார்க்கு, ஆர் சரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இதன் பொருள்]

**தேகா ஆலயத்திற் சிதாகாச தேவதையை**
**ஆகாய சாந்தி மலாராலே**

தேகம் என்னும் ஆலயத்தின் கண் ஞானாகாயம் என்னுந் தேவதையை, அந்த ஞானாகாயத்தில் என்றும் இயல்பினதாகிய உப சாந்தி என்னும் மலர்களால்,

**ஏகாந்த மந்திரத்தாற் பூசை செயும் மாதவரை ஆதரித்துச்**
**சந்ததம் வாழ்வார்க்கு ஆர் சரி**

சகல கற்பனைகளும் இறந்து, தான் மாத்திரமாய் நிற்கும் ஏகாந்தம், என்னப்படும் மந்திரத்தினால் இரண்டறப் பூசை செய்கின்ற மகான்களை, மிக்க அன்பு கொண்டு, எப்போதும் நிரதிசயானந்த வடிவமாய் வாழ்கின்றவர்களுக்கு, ஆர் இணையாவர்?

**(பத சாரம்)** தேவாலயம், சிதாகாச தேவதை, சாந்தி மலர், ஏகாந்த மந்திரம், இவை உருவகம். இங்ஙனம் பூசித்தல் பேதமாகவோ? அபேதமாகவோ? பேதமாகவெனின், ஆலயம், தேவதை, சாந்தி, ஏகாந்தம் இவை அபேதமாக இயைவதற்கு ஏது என்னை, கொலோ? ஆதலின் வழு வழுவறக் கிரியா பூசையின் நிற்போரும், இவர் களுக்கு இணையல்ல எனக் குறிப்பிக்க, ஆர் சரி என்றார். தன்னைத் தானே பூசித்தல் என்பது, கருத்து. மலராலே என்பதில் உள்ள ஏகாரம், அசை. (43)

**(அவ தாரிகை)**

இக் கவியில், யாவரும் இங்ஙனம் இரண்டறப் பூசியாததற்கு, அது என்னை என்ற வினாவிற்கு, உத்தரங் கூறுகின்றது.

**முக் கனியும், பாற் சோறும், முன்பு இருக்க, நாய் அருந்திக்**
**கக்கிய சோற்றைக் கருதுவார் - எக் கலைக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எல்லாப் பொருட்கும் இரும் பொருள் யாம் என்னாமல்**
**வல்லார்க்கு அடிமை புகுவார்.**

[இதன் பொருள்]

**முக் கனியும், பாற் சோறும், முன்பு இருக்க, நாய் அருந்திக்**
**கக்கிய சோற்றைக் கருதுவார்**

வாழைக் கனி, பலாக் கனி, மாங் கனி என்னும் இம் மூன்றும் இனிய பாற் சோறும் எதிரில், வாழை இலையில் படைத்திருக்க, அதை அருந்தாமல் விட்டு விட்டு, நாய் தின்று, கக்கிய, அசுத்த மாகிய சோற்றைத் தின்னக் கருதுவார் போலும்.

**எக் கலைக்கும், எல்லாப் பொருட்கும், இரும் பொருள் யாம்**
**என்னாமல், வல்லார்க்கு அடிமை புகுவார்**

எவ் வகைப்பட்ட சுருதிகட்கும், அவற்றிற் கூறிய எவ் வகைப்பட்ட மேலாய பொருள்கட்கும் சிறந்த பொருள் யாதெனக் சுருதி, யுத்தி, அனுபவத்தாற் தெளியாமல், உடலாகிய மல மூட்டையை வளர்ப்பான் வேண்டிப், பொருட் செல்வத்தில் மிக்க வலி உளார்க்கே, அடிமையாக நின்று உழைப்பவர்.

**(பத சாரம்)** முக்கனி எனக் குறிப்பித்தது ''ஐவரொடு சினை ?'' என்றாற் போலும். பிராதி பாசிக சத்தும் பிரதிபிப்போ உபாதியும் இருப்பதைக் குறிப்பால் உணர்த்த இரும்பொருள் யாம் என்றார். எனவே யாம் அனைவரும் அற்ப போகத்திற்கே தனு கரண புவனம் பெற்று, என்றும் உழல்வம் என்பது பெற்றாம். வல்லார்க்கே என்பதில் ஏகாரம் எஞ்சியது. விசாரித்துத் தெளியாதது அறியாமையால் என்பது கருத்து. (44)

**(அவ தாரிகை)**

சத்துக்களை அவமதிப்பர் எங்ஙனம் ஆவரென்பதற்கு, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செம்மை அறியார், செகத் தோற்றரவு அறியார்,**
**தம்மை அறியார், விளையுந் தாழ்வு அறியார் - தம்மிலே**
**அந்தரராய், வீணே அவமதிப்பார் நல்லோரை,**
**எந்த வழி போவார், இவர்**

[இதன் பொருள்]

**செம்மை அறியார் செகத் தோற்றரவு அறியார்**
**தம்மை அறியார் விளையுந் தாழ்வு அறியார்**

துக்க நிவிர்த்திக்கு இயைந்த செம்மையான மார்க்கத்தையுங் கேட்டு அறியார். செகத்திற்கு முதற் காரணம் இனைய தென்றும் விசாரித்து அறியார். தமது எதார்த்த நிலை இனையது என்று துணிவு பெற்றிருக்கவும் அறியார். அங்ஙனம் விசாரியாததால் விளையும் ஈனத்தையும் சிந்தித்தும் அறியார்.

**தம்மிலே அந்தரராய், வீணே அவமதிப்பார், நல்லோரை,**
**எந்த வழி போவார் இவர்**

இங்ஙனமாய ஏதுக்களால், தமது அகத்தில் அஞ்ஞான அந்த காரத்தை உடையவராய், யாதோர் எதுவும் இன்றி, நல்லோர்களை அவமதித்துக் கொண்டே திரிவர். இவர்கள், எந்தப் பாதகத்திற்குப் போவார்களோ, யாமறியேம்.

**(பத சாரம்)** விசாரிப்புழிப் பாழாகவும் அஃதில்லாவுழி நாம ரூபமாகவுந் தோற்றுவது என்றும் இயல்பாக நிற்றலின், செகத் தோற்றரவு எனவும், புண்ணிய கன்மம் ஏனும், பிறவி நோயைத் தரற் பாலதாதலின் விளையுந் தாழ்வு எனவும், கூறியவாறு காண்க. செய்ய மார்க்கத்தைச் செம்மை என்றர் ஆகு பெயர். தீமைக்குப் பலன் வகுத்தல் அரிதாதலின் எந்த வழி போவார் இவர் என்றார். எனவே, நிரயம் பலவாறா நிற்றல் பெற்றாம். எந்த வழி போவாரோ என்பதில் ஓகாரம் எஞ்சியது நரகமே, தமது கதியாவார் என்பது கருத்து. (45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை)**

ஞான காண்டம் போற், கன்ம காண்டஞ் சிறப்புறாததற்கு ஏது என்னை எனற்கு, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**ஐங் கணையும் பூவாம், ஆறு காலளி நாணாம்,**
**மென் கரும்பாம் வில், அனங்கன் வீரனாம் - வன் காத**
**வேற்றுவனாம் எல்லாம் பொய், இப்படியே பாழ் உலகத்**
**தோற்றம் எலாம், மெய் தானா சொல்**

[இதன் பொருள்]

**ஐங் கணையும் பூவாம், ஆறு காலளி நாணாம்**
**மென் கரும்பாம் வில், அனங்கன் வீரனாம்**

மன்மதனுக்குப் பஞ்ச பாணங்களும் புஷ்பங்களாம். ஆறு கால்களை உடைய வண்டுகள், வில்லிற் கட்டும் கயிறாம். அவனுக்கு வில்லோக மிருதுவாகிய கரும்பாம், இந்தப் பாணங்களை எறியும் வீரனோ, வடிவம் இல்லாதவனாம்.

**வன் காத வேற்றுவனாம் எல்லாம் பொய் இப்படியே**
**பாழ் உலகத் தோற்றம் எலாம், மெய் தானா சொல்**

இவனோ யாரிடத்தும் மோகத்தை விளைவிப்பவனாம். இவை அனைத்தும் அந்தர் முகத்துக்கு இயையாமையின் சமஸ்தமும் பொய்யேயாம். இது போலவே, பாழாகிய உலகமும், சராசரத் தோற்றமும், அவற்றின் புடை பெயர்ச்சிகளும், அவற்றால் எய்தும் இன்ப துன்பங்களும், மெய்யாகுமா? இதனை, நீயே ஆராய்ந்து உணர்ந்து சொல்லு.

**(பத சாரம்)** ஐங் கணையாவது ''முல்லை அரும்பு, முழுலேஞ், சூதப்பூ, வல்லி, முளரியோடு. ஐந்து'' என்பதனாற் காணக. இவை அனைத்தும், ஒன்று ஒன்றாகக் கற்பிக்கப்படுவனவே அன்றி உண்மையாகுமா? வழு. அணுக்கள் சையோகத்தை அன்றிப்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதமென்பதும், பௌதிகம் என்பதும், அவற்றின் புடை பெயர்ச்சி களும் கண்டிலமே. காணாததால், இப்படியே 'பாழுலகத் தோற்றம் எலாம் மெய்தானா' என்றார். மெய்தானா என்பதினால் உள்ள ஆகாரம் எதிர்மறைப் பொருளைத் தர வந்த வினா. பூ, நாண், கரும்பு, வீரன் இவை உருவகம். சொல் என்பது நீ ஆராயாமல், யான் கூறுவதை நம்பற்க என்பதைக் குறிப்பிக்க நின்றது. பூவாம், நாணாம், கரும்பாம், வீரனாம், ஏற்றுவனாம். இந்த முடிபுகள் அனைத்தும் உல்லங்ஙனஞ் செய்வது போலும். பொய்யே, முழுதுங் கூறுவதனால் என்பது கருத்து. (46)

**(அவ தாரிகை)**

மகான்கள், இன்ப துன்பங்களை உத்தரிப்பது, யாதின் கண்ணே எனற்கு, உத்தரம் இக் கவி கூறுகின்றது.

**காலமோ, தேவதையோ, கன்மமோ, மாமாயைச்**
**சீலமோ, இம் மனத்தின் செய்கையோ - கோலிய நல்**
**உச்சாகமோ, நலந் தீங்கு உத்தரிப்பதே அதிலே**
**எச் சார்பும் இல்லா இவர்க்கு**

[இதன் பொருள்]

**காலமோ தேவதையோ, கன்மமோ, மாமாயைச்**
**சீலமோ, இம் மனத்தின் செய்கையோ**

காலத்திலோ, உபாசனா மூர்த்தத்திலோ, நாம் இயற்றுஞ் சற் கருமத்திலோ, சிற்சத்தி என்னும் நின் மனத்திலோ, சுத்தமான இம் மனத்தின் சேட்டையின் கண்ணோ.

**கோலிய நல் உச்சாகமோ, நலந் தீங்கு**
**உத்தரிப்பதே, அதிலே, எச் சார்பும் இல்லா இவர்க்கு**

நம்மால் இயற்றிய சன்மார்க்கத்தின் கண் விளையும் உச்சாகத் தினிடத்திலோ ஊழாற் தாமே விளையுஞ் சுக துக்க வயப்படாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரித்துக் கொண்டிருப்பது இவற்றுள் யாது? அந் நிலக்கண், எவ் வகைச் சார்பும் இல்லாமற், சதோதயமாக விளங்கிக் கொண்டிருக்கும், இந்தச் சீவன் முத்தர்களுக்கு.

**(பத சாரம்)** உத்தரித்தல், நிலை கலங்காது, சகித்திருத்தலை, இக் கவியிலுள்ள ஆறு ஓகாரமும், உறுதிப் பொருள் தராமையின் ஐயம். இங்கே ஏதென்பது அறிவறியாமைக் இடை நிற்றலை. இங்கே எச் சார்பு என்றது ஞானா அஞ்ஞானச் சார்பை. அப்பாற் கடந்து நிற்றலின் மாவெனவும், சீலமெனவுங், கூட்டிக் கூறியதால், மாமாயைச் சீலமோ என்பதற்றாச், சிற்சத்தி என்னும் நின் மலத்திலோ என்ற உரை கொண்டாம். வாளா கூறாது, இம் மனமெனச் சுட்டியதால், சுத்தமான இம் மனம் என்று, உரை கொண்டாம். எச்சார்பு என்பதில், உள்ள உம்மை முற்றும்மை. இவர்க்கு என்பது, அணிமைச் சுட்டதாலின், சீவன் முத்தர் என்றாம். ஞான அஞ்ஞானத் திடையில் என்பது கருத்து. (47)

**(அவ தாரிகை)**

(இந் நிலைக் கண் சற்றுந் திரும்பாதாரை நோக்கி விசன முறுதலை, இக் கவி கூறுகின்றது.

**தன்னைத் தான் தேடாச் சதிகாரர், ஏன் பிறந்தார்**
**அன்னத்தால் வந்த உடலார் தாமார் - முன்னம்**
**விடுத்த உடல் எத்தனையோ மீண்டு மீண்டின்பால்**
**எடுத்த உடன் நூறாயிரம்**

[இதன் பொருள்]

**தன்னைத் தான் தோடாச் சதிகாரர், ஏன் பிறந்தார்**
**அன்னத்தால் வந்த உடலார், தாமார்**

தானாவது, இனைய நிலை எனச் சுருதி, யுத்தி அனுபவத்தாற் தேடித் தன்னைக் காணாது, மிருகம் போல், உண்டு உறங்கி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவர்த்தத்தில் விவகரிக்கும், பண்டித பாமரர்களை நோக்கி, இந்தச் சதிகாரப் பாவிகள், ஏன் மானிடராய்ப் பிறந்தனர்? இவர்களுக்கு, அன்ன மயமாக வந்துள்ள தேகம் என்பது, யார்? இதனில், நின்று இயக்குந் தேகியாகிற, தாமார்?

**முன்னம் விடுத்த உடல் எத்தனையோ, மீண்டும்**
**மீண்டின்பால் எடுத்த உடல், நூறாயிரம்**

இவ் உடல் போல, முன்னர் விடுத்துள்ள உடல்கள், எத்தனை கோடிகளோ? அங்ஙனம் விடுத்த பின்னர், போகம் நுகர்வான் வேண்டி, இன்பமாகக் கருதி, மீண்டும், மீண்டெடுத்த உடல்கள், எத்தனை கோடிகளோ?

**(பத சாரம்)** பிறவாது இருக்கையே நன்றெனக் குறிப்பிக்க, ஏன் பிறந்தார் என்றார். விடுத்த உடல் எத்தனையோ என்பதனால், எடுத்த உடல் எத்தனையோ என்று, உரை கொண்டாம். எண்ணில் அடங்காமையின், ஒருவாறு நூறாயிரம் என்றார். எத்தனையோ என்பதில் உள்ள ஓகாரம், ஐயம். இங்ஙனம் விசாரித்துத் தெளியா வரையும், சனன மரணம் விடாதாதலின், விடுவிப்பான் வேண்டிக் காருண்யத்தாற் கூறியது என்பது கருத்து. துக்க நிவிர்த்தி, தடை அற்ற ஆனந்தம், தரற் பாலதாகிய நெறியை, எத்தனை வேத சாகைகளால் எடுத்துக் கூறினும், அவ் வழி நில்லாதார், மேலெழும் கோபத்தாலாதலின், சதிகாரர் என்றார். இரு திணைக் கண்ணும் வருதலின் உடலார் எனப்பட்டது. இந்தப் பிறவி நம்மை விட்டு அகலுமாதலின், முன்னம் என்பதற்கு இது போல் விடுத்த உடல் என்றாம். முன்னர் எடுத்த உடலும் பின்னர் எடுக்கும் உடலும், பிரத்தியக்ஷம் இல்லாமையின், இப்போது வந்த உடல் கொண்டு, குறிப்பாற் கணிக்கப் புகுந்தனர். இங்ஙனம் குறிப்பாற் கணிக்கத் தெளியப் புகுவது, கல்வித் தெளிவாலோ? மூடத்தாலோ? மூடத்தாலோ எனின், 'ஒன்றொழி பொதுச் சொல் விகாரந் தகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகு பெயரன் மொழிக் குறிப்பே' என்பது கொண்டு கணித்தற்கு இயையுமோ? கூடாதெனின், கல்வித் தெளிவால் என்க. (48)

**(அவ தாரிகை)**

யாவரும் ஆபாசரோ எனற்கு இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**பொய்யாக்கப் பொய்யைப், பொருளைப் பொருளாக்க**
**மெய்யாக்க குரு ஒருத்தன் வேண்டிற்றே - ஐயகோ**
**பூபாலராகிப், பொலிந்திடு சீவர்கள் எல்லாம்**
**ஆபாசர் என்பதுவே யாம்.**

[இதன் பொருள்]

**பொய்யாக்கப் பொய்யைப், பொருளைப் பொருளாக்க,**
**மெய்யாக்க குரு ஒருத்தன் வேண்டிற்றே**

அனைத்து மெய் போலத் தோற்றலின், பொய்யெனற்கு இயைந் தவைகளைப் பொய்யாக்கி, மெய் எனற்கு இயைந்ததை மெய்யாக்க, எவர்க்கும் முக்கியமாக, உண்மையான ஞானாசிரியன் ஒருவன் வேண்டுவது அன்றோ?

**ஐயகோ, பூபாலராகிப் பொலிந்திடு சீவன்கள் எல்லாம்**
**ஆபாசர் என்பதுவே யாம்**

ஐயையோ பூமிகளாகின்ற அண்டங்கள் தோறும், போக நிமித்தந் தனு கரணங்களை இடையூறு வாராது பாதுகாக்க, எங்கும் நிறைந்துள்ள சிதாபாசர் அனைவரும், தம்மை இழந்தவர் எனச் சுருதிகள் கூறுவது உண்மையே யாம்.

**(பத சாரம்)** பொய்யைப் பொய்யாக்கலும், பொருளைப் பொரு ளாக்கலும் மண்ணூல் நாட்டம் இன்றிக் கடபடத்தை மெய்யாகக் கொள்ளுமாறு போன்று, சைதன்ய நாட்டம் இன்றிப், பிருதிவி தத்துவ முதல் நாத தத்துவம் இறுதியாகக் கிடந்த, தத்துவக் குழாங்களைத் தனித் தனி மெய்யாகக் கொள்வது, உயிர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாதலின், அதனை விட்ட இலக்கணையால், அனைத்தும் பொய்யாக்கற்கு இயைதலினாலும், இவற்றை அறியும் அறிவு, எங்கும் நிற்றலின், ஏனைய இரண்டில், இலக்கணையால் மெய்யாக்கற்கு இயைதலினானும் உய்த்து உணர்ந்து தெளியா விடத்துப் பொருள் படா என்க. தன்னைத் தான் அறியாமையினால் யாவரும், ஆபாசரே என்பது கருத்து. தேகாதி தத்துவங்கள், தத்தங் காரணங்களுக்கு காரியமென அறியாது போதிக்கும் மெய்க் குருவாக் காண்டலின், அவர்களை ஒழிக்க, மெய்யாக் குரு ஒருத்தன் வேண்டிற்றே எனவும், இறக்கக் குறிப்பின் மேலீட்டைக் காட்ட, ஐயகோ எனவும் கூறியவாறு காண்க. சுருதி கூறியது உண்மையே எனக் காட்ட ஆபாசர் என்பதுவே, யாமெனப் பட்டது. ஆக்க ஆகுமாதலின் பொய்யாக்க எனவும், பொருதாக்க எனவும், பிறவினை தந்து கூறினார். (49)

**(அவ தாரிகை)**

இவர்கள் ஆபாசராயினும், சைதன்னியம் அவரவர்க்கு இயைந்த வண்ணம், காணப் படுவானேன் என்றதற்கு, உத்தரம் இக்கவியிற் கூறுகின்றது.

**ஒன்றிலே தோற்றும், உலகப் பிரதி விம்பம்**
**ஒன்று பொற் தோற்றாத உண்மை என்னோ - என்றும்**
**பொருளாகப் பாராத புன்மை அறிவோர்க்கே**
**மருளார் பொறி போலவாம்**

[இதன் பொருள்]

**ஒன்றிலே தோற்றும் உலகப் பிரதி விம்பம்**
**ஒன்று பொற் தோற்றாத உண்மை என்னோ**

ஏக சைதன்னியம் ஆகின்ற வியாபக விளக்கத்தில், ஆடியிற் சாயை போற் தோற்றும் உலகமாகின்ற பிரதி விம்பமானது, அதனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிம்பம் போல ஏகமாகத் தோன்றாது, பலவாகக் காண்டற்கு ஏது என்னை கொலோ? இவ்வளவு தெரிந்தருள வேண்டு மெனின்.

**என்றும் பொருளாகப் பாராத புன்மை அறிவோர்க்கே**
**மருளார் பொறி போல வாம்**

எப்போதும் பொருள் அல்லவற்றை விட்டுப், பொருளைப் பொருளாகப் பாராத அற்ப அறிவீனருக்கே, தெளிவின்றி விளங்கும் உணர்வு எங்ஙனமோ, அது போலப் பற் பல பேதங் களாகக் காணப்படும்.

**(பத சாரம்)** இட பேதத்தானும், விஷய பேதத்தானும், உணரும் பேதத்தானும் பற்பலவாகக் காணினும் உணரும் புடை பெயர்ச்சி அறிவினதன்றோ? அப்போது, வினை முதலறிவன்றோ? அவ் வினை, முதலை மாத்திரம் உற்று உணரும் இடத்துப், பலவாகக் காணுமோ? ஒன்றாகக் காணுமோ? பலவாக எனின், வினை முதல் நாட்டம் அன்றாக வேண்டும். ஆடி நாட்டத்தில் அது பற்பலவாறாகக் காணாவாறு போன்று அறிவு நாட்டத்தில் அது பற்பல வகைப் பேதமாயினும் அங்ஙனம் பற்பலவாகக் காணுமா? காணாதே. அங்ஙனங் காணுதல் பொருளைப் பொருளாகப் பாராதார்க்கு ஆதலின், மருளார் பொறி போலவாம் என்று, இவ் உவமை கூறினார் என்க. சூரியப் பிரதி பிம்பம் பலவாயினுஞ், சூரியனாகின்ற பிம்பம் விளங்கிய விடத்து, அவை அனைத்தும் பொய்ப் பட்டு, எங்ஙனம் ஏகமாக விளங்குமோ, அது போலச் சைதன்யப் பிரதி பிம்பச் சிதாபாசர்கள், பலவாயினுஞ், சைதன்ய மாகின்ற ஞான சூரியன் உள்ளவாறு விளங்கிய விடத்து, அவை அனைத்தும் பொய்ப் பட்டு, ஏகமாக விளங்கும் என்க. ஒன்றிலே என்பதினுள்ள ஏகாரம், ஏனையவற்றில் அன்றென விளக்க வந்த இடத்துப் பிரி நிலை எனவும், துணிவு பெறப் பொருள் தர வந்த இடத்துத் தேற்றம் எனவும், பெயர் பெறற்கு இயையும் கற்பித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு மெய் உணர்வு போற் காணினும் அஃது ஆராய்ந்தெட்ட அறியார், மருள் போலும் ஆகற்க என்பது கருத்து. என்னோ என்பதில் ஓகாரம் வினா. அறிவோர்க்கே என்பதில் ஏகாரம் தேற்றம். பழுதை பாம்பாகத் தோற்றிய இடத்து எய்திய பய கம்பனாதிகள், பழுதையாகக் கண்ட விடத்தன்றித் தொலையுமோ? அது போலச், சைதன்யம் சுசாதி விசாதியாகத் தோற்றிய இடத்து, எய்திய ஐயந் திரிபுகள் சைதன்யமாகக் கண்ட விடத்தன்றித் தொலையாவாம் என்க. விரிக்கிற் பெருகும். (50)

**(அவ தாரிகை)**

தானே அனைத்தும் எனக் காணத் தெரியாத, தன்னைத் தான் தேடப் புறப்படல் இது போலும் என்று இக் கவி கூறுகின்றது.

**தன்னை அறியாமற், தானே தனைத் தேடல்**
**என்ன புதுமை இதை என் சொல்வேன் - மன்னுலகில்**
**தண்ணீரின் நின்று கொண்டு, தாகந் தணியார் போல்**
**எண்ணீர் மற்றேது உரைப்போம் யாம்**

[இதன் பொருள்]

**தன்னை அறியாமற், தானே தனைத் தேடல்**
**என்ன புதுமை, இதை என் சொல்வேன்**

பிரத்தியக்ஷமாகத் தானிருக்கத், தன்னைத் தான் தேடப் பிரவே சித்தல் என்பன, ஆச்சரியம். நாணம் இன்றி, இதை எவர் பால் எடுத்து உரைப்பேன்.

**மன்னுலகில், தண்ணீரில் நின்று கொண்டு, தாகந் தணியார்**
**போல், எண்ணீர், மற்றேது உரைப்போம் யாம்**

தீர்ந்த சொப்பனம் போலென்றும் நிலை பெற்றுள்ள உலகத்தின் கண் பாற் கடலில் கழுத்தளவாய் நின்று கொண்டு, தமது தாகத்தைத் தணித்துக் கொள்ள வகை அறியார் எங்ஙனமோ, அது ஞானானந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமாக யான் இருந்து மன்னிய சுகத்திற்கே, நற்கதிகளின்றி அலைகின்றனமே? இதை ஏனுஞ் சற்று உணர வகை அறியீர் போலும். இதைவிட யாம் எடுத்துக் கூறுவது என்னை உளது. இல்லையே.

**(பத சாரம்)** தானல்லாத உடலைத், தானெனக் கருதில், அது தானாகுமா? அதனால் அயல் இன்பந் தனதாகுமா? அறிவே தானாகில், அயல் இன்பம் வேண்டா. இந்நிலை சற்றும் வாய்த் திலமே. பிறவி தோறும், இங்ஙனமாயின், எங்ஙனம் பிறவி நோயைத் தவிர்க்குதும்? அதனால் உபசாந்தி நிலை அடைகுதும், தானல்லாத உபாதியும் இல்லை. இன்பமும் இல்லை. அவற்றிற்கு நய நட்டம் நேரிடினும், தனக்கு இன்மையின், தான் அவையல்ல. தான் எனல் தனக்கு அன்னியம் அன்றாகலின், தன்னைத் தான் தேடுதலினும், மிக்க ஆச்சரியம் எங்கும் இன்மையின், தன்னை யறியாமற், தானே, தனைத் தேடல் என்ன புதுமை என்றார். இஃது உபசார வசனம் அன்றாதலின் இவ் உவமை பொருந்தும் என்க. அறிவின்மையால் என்பது கருத்து. (51)

**(அவ தாரிகை)**

இனிச் சும்மா இருப்பதற்கு, இயைந்த நெறியை இக் கவி கூறுகின்றது

**சாத்திரங்கள் கத்தித் தலை வீங்குவீர், குலமுங்**
**கோத்திரமுங் கொண்டு வீனை கூட்டுவீர் - சாத்திகராய்**
**உம்மாலே உம்மை உணர்ந்து, ஓயாத் தொழில் விட்டுச்,**
**சும்மா விருக்க ஒணாதோ.**

[இதன் பொருள்]

**சாத்திரங்கள் கத்தித், தலை வீங்குவீர் குலமுங்**
**கோத்திரமுங் கொண்டு, வீனை கூட்டுவீர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்தனம் விழைந்து, அலையும் மானிடர்களே! தமக்குப் பயன் ஒன்றும் இன்றி, இரு வகைச் சாத்திரங்களையுங் கதறிக் கற்று, அதனாற் தலை வீங்கி, வியாதியால் மெலிவீர்கள். இங்ஙனமாய நெறியால் வருந்திப் பொருள் ஈட்டியதனாற் குலமுங் கோத்திரமும் மிகச் செய்து, அதனாற் பிறவி நோய்க்கு, இயைந்த வினைகளைச் சம்பாதிப்பீர்கள்.

**சாத்திகராய், உம்மாலே உம்மை உணர்ந்து**
**ஓயாத் தொழில் விட்டுச், சும்மா விருக்க ஒணாதோ**

சாதகராகப் பல்லூழி காலம் நின்று, முயன்று, பின்னர்ச் சாத்திகராய், அந்தர் முக திருஷ்டியால் உம்மைக் கொண்டு, உமது உண்மை நிலையை உணர்ந்து, மித்தியாத்தியாசம் எனப்படும். அகப் புறச் சேட்டைகள் அனைத்தையும் ஒருங்கே ஒழித்து, நின்மின். அங்ஙனம் ஒழித்ததனால் எய்தும் அறிவு அறியாமை நடுவிற் சும்மா இருக்கச் செய்யும். அங்ஙனஞ் செய்த வண்ணம் நீங்கள் இருக்க ஒண்ணாதோ? இதனினும் மேலாய நிலை யாது? ஏன் வியர்த்தத்தில் அலைகின்றீர்கள்?

**(பத சாரம்)** இரு வகைச் **சாத்திரமாவன: பிரபல சுருதி, அற்ப சுருதி** என்பன. சாத்திகராம் என்பதனாற் சாதக திசையை வருவித்தாம். பிறர் உணர்த்துகினுந், தன்னாலே தன்னை உணர்ந்த பதின்மனைப் போலவும், உம்மாலே உம்மை உணர வேண்டு மாகலின், உம்மாலே உம்மை உணர்த்தி என்றார். **கிருத கிர்த்தியராதல்**, ஆங்கியல்பாதலின், **'ஓயாத் தொழில் விட்டுச் சும்மா விருக்க ஒணாதோ'** எனப்பட்டது. உம்மாலே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலை எனினுந் தேற்றமெனினும் பொருந்தும். இருக்கலாம் என்னும் பொருளைத் தருதலால், இருக்க ஒணாதோ என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறை எனினும், வினா எனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தும். தலை வீங்குதல் கத்துவதாலாதலின் கற்று என்னாது கத்தி என்றார். (52)

**(அவ தாரிகை)**

தெய்வம் எனல் யாதோ என்ற ஐயத்தை இக் கவி விளக்குகின்றது.

**ஆசித்துத், தெய்வத்து அடையாளமுங் கொளுத்தி,**
**புசித்து, கை கூப்பிப் போற்றுவார் - நேசிக்குந்,**
**தானோ, அதுவோ, சதிரான தெய்வம் எனல்,**
**ஊனோடு உழல்வார் உறார்**

[இதன் பொருள்]

**ஆசித்துத், தெய்வத்து அடையாளமுங் கொளுத்தி,**
**புசித்து, கை கூப்பிப் போற்றுவார்**

யாவரும் மிக்க அன்பு கொண்டு தாங்கள் வந்திங்குந் தேவதைகளுக்கு உரிய ஆலயம் முதலியவைகளையும் இன்னும் இவை போல்வன பிறவற்றையும் கொண்டு அல்லாமலும் கற்பூரம், தீபம், குங்கிலியம், சாம்பிராணி வத்தி முதலியவற்றையும் கொளுத்தி, இவை துணக் காரணமாக ஆராதித்து இரண்டு கைகளையும் கூப்பி அஞ்சலி செய்து வழுத்துவார்கள்.

**நேசிக்குந் தானோ அதுவோ சதிரான தெய்வம் எனல்**
**ஊனோடு உழல்வார் உறார்**

இங்ஙனம் மிக்க அன்பு கொண்டு பூசிக்குந் தான் எனப்படுவதோ, வேறு உண்டாயது எனப்படுவதோ, உண்மையான தெய்வம் எனப்படுவது? இவ் வையங் கடந்த உறுதி நிலையினை உடலளவு தானாகக் கண்டு உழல்பவர்கள் எங்ஙனம் அடைவார்கள்? ஒரு போதும் அடைய மாட்டார்கள்.

**(பத சாரம்)** தானெனல், அது அது ஆகாரமாகா விடத்து ஒன்றுங் காணப்படாது. காணப்படுதலின் நேசிக்க தானோ எனவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு அறியாதார் தான் எனலன்று. வேறு என்பாராதலின் அதுவோ எனவும், இங்ஙனம் கணித்தற்கு இயைவது தெய்வம் ஆதலின், சதிரான தெய்வம் எனவுங் கூறியவாறு காண்ப. இவ் வையங் கடந்த நிலையை ஊனோடு உழல்வார் உறார். எனவே, ஞானமே வடிவாயினார் உறார் என்பது பெற்றாம். ஆசித்து, கொளுத்தி, பூசித்து, கூப்பிப் போற்றுவார் என முடிக்க, தானோ, அதுவோ என்பவற்றில் உள்ள ஓகாரங்கள் ஐயம். தெய்வம் எனற்கு வஸ்து சித்தாந்தம். எவர் எவர் யாது யாது கூறினுஞ் சுசாதியாதி பேதமற்ற மெய் உணர்வாதற்கு இயைய வேண்டும். அன்றேல் துக்க நிவிர்த்தி, தடை அற்ற ஆனந்தம், வாய்த்தற்கு இடம்பெறாது என்க. வாளா தெய்வம் என்னாது, சதிராது என்று அடை கொடுத்ததால், மெய் உணர்வு என்றாம். ஞானாகாரமாய் நிற்றலே தெய்வம் என்பது கருத்து. (53)

**(அவ தாரிகை)**

ஆயின், ஆலயமும் உற்சவமும் யாவை? யான் கருதி ஏற்படுத்தப் பட்டனவோ என்ற ஐயம் அற்ற இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**தேரைத், திரு நாளைச் சேவிப்பார் தம்மை விட்டங்கு,**
**ஆரைத் தொழப் போறார், ஐயகோ - தேரிடையே**
**பார்க்கின்ற தெய்வம் பரிபூரணம் அலவோ**
**யார்க்குந் தெரியாததோ (54)**

[இதன் பொருள்]

**தேரைத், திரு நாளைச் சேவிப்பார் தம்மை விட்டங்கு**
**ஆரைத் தொழப் போறார் ஐயகோ**

தேரென்றும், திருவிழா என்றும் எங்கெங்கோ வழங்கப்படு வனவோ அங்கங்கே அவ் அவற்றிற்கு உரியார் சென்று சேவிக்கப் புகுவார்கள். இவர்கள் தத்தம் எதார்த்த நிலையைக் காண வகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாது, தம்மை விட்டு விட்டு அங்கு ஆரைத் தொழப் போகின்றனரோ? இஃதென்ன மடமை?

**ஐயகோ தேரிடையே பார்க்கின்ற தெய்வம் பரிபூரணம் அலவோ, யார்க்குந் தெரியாததோ**

தம்மைத் தாம் உணராமற் போயிடினும், இரதத்தின் மேல் எழுந்தருளிச் செய்ததாகக் கேள்வி உற்று, நாம் பார்க்கப் போன தெய்வமும் பரிபூரணமான நிலையினதன்றோ? இம் மகிமை யாவருக்குந் தெரியாதோ? இதனை ஏனும் உணராதது, என்னை கொலோ?

**(பத சாரம்)** ஒன்றின முடித்தல், தன்னின முடித்தல் என்னும் உத்தியால், தேர் திருவிழா என்பவற்றிற்கு இனமாய் உள்ளவை பல உள. அவற்றிற் சில வருமாறு: அருவத் தியானம், மானத பூசை, ஆறாதாரம், தெய்வ உருத் தியானித்தல், அரு உருவைத் தியானித்தல், இவ் இரண்டும் இன்றித் தியானித்தல், மெய் உணர்வு தானாகத் தியானித்தல், இவை போல்வன பிறவுமாம் என்க. சேவிப்பார் தொழப் போறாரென முடிக்க, ஐயகோ என்பது இரக்கக் குறிப்பு. போகிறார் என்பது போறார் என்றாயது இடைக்குறை. தேரிடையே என்பதில் எகாரம் அசை. பரிபூரணமலவோ, தெரியாதோ என்பவற்றில் உள்ள ஓகாரங்கள், வினா. தெய்வம் எனலுந் தான் எனலும் மெய் உணர்வை இன்றி இன்மையின். இவற்றுள் ஒன்றைத் தெளியினும் போதும் என்பது கருத்து. தெய்வம் எனற்கு அருத்தம் ஏக தேசம் எனப் பாமரருங் கொள்ளு வரோ என்பதைக் குறிப்பிக்க, யார்க்குந் தெரியாததோ என்றார். தன்னைத் தான் காண, முக்கியமாக ஏற்படுத்தப்பட்டது என்று கொள்ளினும் அமையும். புறம்பிற் காட்டிப் பின்னர் அகத்திற் காட்ட வேண்டும் என்பதோர் தந்திரம் ஆதலின் என்க. யார்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதிலுள்ள உம்மை முற்றும்மை. அல்லவோ என்பது அலவோ என்றாயது. விகாரம். (54)

**(அவ தாரிகை)**

**கிரியா யோகம், ஞான யோகம் என்பவற்றுள், ஞான யோகமே சிறந்தது என, இக் கவி கூறுகின்றது.**

**மூலைக்கு உள்ளே இருந்து, மூச்சு அடக்கிப், பேச்சு அடக்கிச்**
**சாலக்கன யோகஞ் சாதிப்பார் - மேலுணர்வு**
**கண்டு இருக்கச் சாதனை ஏன்? காயத்தையே வலித்து இங்கு**
**உண்டிருக்க எண்ணுகிறாரோ**

[இதன் பொருள்]

**மூலைக்கு உள்ளே இருந்து, மூச்சு அடக்கிப், பேச்சு அடக்கிச், சாலக்கன யோகஞ் சாதிப்பார்**

சித்தம் பேதியாது இருக்க வேண்டி, மூலை வீட்டு அறைக்குள்ளே இருந்து, பிராண வாயுவைப் பந்தனம் பண்ணி, மௌனமாக நின்று, மிகவும் பெரிதான கிரியா யோகத்தைப், பல்லூழி காலம் நின்று சாதிப்பார்கள்.

**மேலுணர்வு கண்டு இருக்க்ச சாதனை ஏன்? காயத்தையே வலித்து இங்கு உண்டிருக்க எண்ணுகிறாரோ:**

எவற்றிற்கும் மேலாய மெய் உணர்வு யாதோ? அதனை உள்ளவாறு கண்டு அஃது இருந்த வண்ணம் இருத்தற்குச் சாதனை செய்தல் எற்றிற்கு? இதனை விட்டு, மணி மந்திர அவிழ்தங்களாற், காய சித்தி ஒன்றையே உறுதியாகப் பெற்று, இவ் உலகின் கண் பல்லூழி காலஞ் செவ்வையாக, உண்டிருக்கும் படி, எண்ணங் கொள்ளு கிறார்களோ?

**(பத சாரம்)** பூமிக்கு உள்ளும், பாழ் அறைக்கு உள்ளும் அன்றி, மூச்சு அடக்கலும், பேச்சு அடக்கலும் கூடாமையின், சாலக் கன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகஞ் சாதிப்பார் எனவும், எவற்றிலும் கூடியுங் கூடாது இருக்குஞ் சிதாகாயத்தைக் கண்டு, அஃது இருந்த வண்ணம், சலட்சண விலட்சணமாய் நிற்றற்குச் சாதனம் வேண்டுவதே இல்லை, என்பார் 'மேலுணர்வு கண்டிருக்கச் சாதனை யேன்' எனவும், காய சித்தி பெறல் தேக போக அவாவிற்கே என்பார். 'காயத்தையே வலித்து இங்கண் உண்டிருக்க எண்ணுகிறாரோ' எனவும் கூறியவாறு காண்க. சிதாகாயத்தை அன்றிச் சிதாபாசன் எங்ஙனம் இல்லையோ, அது போலப் பஞ்ச பூதத்தை அன்றி, இத் தூல தேகமாகிற பௌதிகம் எங்ஙனம் இருக்கும் என்பதனாலும், இக் காய சித்தியால் பயன் இன்றென்க குறிக்க எண்ணகிறாரோ என உல்லங்ஙனஞ் செய்ததாகக் கண்டாம். ஆதி மத்தியாந்த ரகிதமாய துய சிதாகாயமே அன்றி ஏனையவற்றிற்கு, அந்த யோக்கியதை சற்றும் இன்மையின், ஞான யோகமே சிறப்புற்றது என்பது கருத்து. காயத்தையே என்பதில் ஏகாரந் தேற்றம். எண்ணுகிறாரோ என்பதிலுள்ள ஓகாரம் எண்ணாது இருத்தலே, மிக்க நலம் எனக், குறித்தலின் எதிர்மறை. (55)

**(அவ தாரிகை)**

இவற்றுள் ஒன்றை எய்தற்குத், துறவு தக்கது அன்றோ என்ற வினாவிற்கு, விடை இக் கவியில் கூறுகின்றது.

**கட்டப் படாமற் கரபாத்திரந் தரிப்பார்**
**மட்டித்து ஒரு கோவணர் ஆவார் - சிட்டர் போற்**
**தூங்காமற் தூங்குஞ் சுகமும் பெறுவாரே**
**ஆங்காரம் நீங்குவரானால்**

[இதன் பொருள்]

**கட்டப் படாமற் கரபாத்திரந் தரிப்பார்**
**மட்டித்து ஒரு கோவணர் ஆவார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டி மாட்டைக் கட்ட வகை அறியார் போல், மனதை அடக்க வகை அறியாது, பிச்சை எடுத்து உண்பான் வேண்டிக், கல பாத்திரத்தைக் கையில் ஏற்றுத் திரிவார்கள். மட்டித் தனமான ஒரு கோவணத்தை தரித்துக் கொண்டிருப்பார்கள்.

**சிட்டர் போற் தூங்காமற் தூங்குஞ் சுகமும் பெறுவாரே**
**ஆங்காரம் நீங்குவரானால்**

எவர்க்கும் இனியராக இருக்கின்ற மகான்களைப் போல, நனவிற் கழுத்தி நிலை பெற்றுத், தான் அலாததைத், தான் எனக் கொள்ளும் அகங்காரமும், நீங்கப் பெறுவாராயின், தப்பாமற் போரின்ப நிலையையும் அடைவார்கள்.

**(பத சாரம்)** தனது பரிபூரண நிலை, சலனம் உறுவுது போலக் காண்டலே, மனம் எனக் கணிக்க வகை அறியாதார். இவை அனைத்துஞ் செய்தும் யாது பயன்? இவற்றோடு, யான், எனது என்னுஞ் செருக்கு அறுக்கில், நனவிற் சுழுத்தி நிலையும், பேரின்ப வாழ்வுந், தடை இன்றி எய்தும் என்பது கருத்து. தக்கது ஆயினும், அவ்வளவில் நிற்பார் போல் நில்லாது, தமது உண்மை நிலை பெறுவதே சிறப்பு என்க. சுகமும் என்பதில் உம்மை இறந்தது தழீ இய எச்சம் பெறுவாறே என்பதில் ஏகாரம் ஈற்றகை. (56)

**(அவ தாரிகை)**

அனுபவத்தைக் காட்டினுஞ், சாத்திரமுஞ் சாதனமுஞ் சிறந்தது அன்று, எனலை இக் கவி கூறுகின்றது.

**எச் சாத்திரம் வேண்டும், எச் சாதனை வேண்டும்**
**பிச்சாட்டல்லோ கெடுவாய் பேதையர்க்குப் - புச்சாண்டி**
**காட்டுவார் போல வெறுங் கற்பனையே காட்டி உலகு**
**ஆட்டுவார் தம்மைக் காணார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இதன் பொருள்]

**எச் சாத்திரம் வேண்டும், எச்சாதனை வேண்டும், பிச்சாட்டல்லோ கெடுவாய்**

தம்மைத் தாம் உள்ளவாறு காண முயல்வார்க்கு யாது சாத்திரம் வேண்டுவது? யாது சாதனம் வேண்டுவது? இவை அனைத்தையும் கருதி முயல்வது. பயித்திய மேலீட்டால் அன்றோ? மாணாக்கனே! இதனைச் செய்யற்க. செய்யிற் கெடுவை.

**பேதையர்க்குப் புச்சாண்டி காட்டுவார் போல, வெறுங் கற்பனையே காட்டி, உலகு ஆட்டுவார், தம்மைக் காணார்**

அறிவீனச் சிறுவர்க்கு, அவர் நடுங்கப் பூச்சாண்டி காட்டுவார் எங்ஙனமோ, அது போல விவர்த்தமான கன்ம காண்டம், பத்தி காண்டம் என்னும் கற்பனைக் கதைகளையே மெய் என்று, அபிநயித்துக் காட்டி, உலகின் கண், மக்கள் உயிரைத் தமது வயப்படுத்தி, ஆட்டுவார்கள். இவர்கள் யாரெனில், தம்மைத் தாம் உள்ளவாறு காண, வகை அறியாத பேதையர்கள்.

**(பத சாரம்)** பிச்சாட்டல் அல்லவோ என்பதிலுள்ள ஓகாரம் வினா. பூச்சாண்டி காட்டல் சிறுவர் நடுங்கற்கு. அன்றேல் சமய போதகர், தம் போல்பவர்க்குப் போதித்தல், நடுங்கற் கன்றாம். சாதாரண தர்மம் அமைந்திருத்தலின் இவ் உவமானம் பொருந்தும். புண்ணில் ஈ மொய்க்குமாறு போன்று, வெறுங் கதையில் புல்லியர் வீழ்வார் கள். இவர்கள், இருப்பது பற்றிப் போதிக்கப் புகுந்தனர். வாங்குவார் இன்றேல், புலால் விற்கப் புகுவது யாதிற்கு? இவை அனைத்தும், தன்னைத் தானாக்குமா? ஆகா இடத்து, அயலை இன்பம் எனக் கருதலைப் போக்குமா? தேக முதலிய தத்துவங்கள் தேகியாகுமா? தேகி எனக் கருதார் யார்? இல்லையே. வெறுங் கற்பனையே என்பதற்கு வழுவு என்னை? ஆதலின் இங்ஙனம் கூறினார் என்க. அல்லவோ எனற் பாலது. அல்லோ என்றாயது விகாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனையே என்பதில், ஏகாரம் தேற்றம். இனித் தன்னைத் தான் காட்ட வல்ல ஆசிரியனைத் தேடுக என்பது கருத்து. (57)

**(அவ தாரிகை)**

உள்ளது ஒன்றோ, பலவோ, எனத் தோன்றும், ஐயமறுக்க, இக் கவியில் உறுதி கூறுகின்றது.

**ஆண் பெண் அலி என்ற, அனேக விதமாகக்**
**காண்பனவும், ஒன்றாகக் காண்பதுவும் - மாண்புடைய**
**சித்தினது தோற்றம் அலால் உண்டோ இவை தெளியார்**
**எத்தனை சாதித்தாலும் என்**

[இதன் பொருள்]

**ஆண் பெண் அலி என்ற அனேக விதமாகக்**
**காண்பனவும், ஒன்றாகக் காண்பதுவும்**

எவர்க்கும், ஆண் எனவும் பெண் எனவும், இவ்விரண்டும் அல்லாத பேடி எனவும் இன்னும் இவை போன்ற அனேக விதமாகக் காணப் படுவனவும், இங்ஙனம் ஆகாது ஒன்றாகக் காணப்படுவதும் வேறல்ல.

**மாண்புடைய சித்தினது தோற்றம் அலால் உண்டோ**
**இவை தெளியார், எத்தனை சாதித்தாலும் என்**

மிகவுஞ் சிறந்துள்ள மெய் உணர்வும் அன்று, அஃது இங்ஙனமாகத் தோற்றுந் தோற்றமே அன்றி அதனை அன்றி இவை வேறுளவோ? உளவாக, இவற்றைக் கண்டு தெளியாதார், எத்தனை விதங்களாலே, ஒன்றெனப், பல எனப், பல்லூழி காலஞ் சாதிக்கினும், யாது பயன்? இல்லை.

**(பத சாரம்)** இங்ஙனங் கணிப்பானைக் கண்டு, கணிக்கத் தெரியாத இடத்து, ஒன்று எனலும் பல எனலும் வியர்த்தம் என்பது கருத்து. தான் அஞ்ஞானமாய் நின்றுழிப், பல எனவும், தான் மெய்யுணர்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றுழி, ஏகம் எனவும், கோடற்கு இயையும். அன்றி இவ் இரண்டு இடத்துந், தான் என இருத்தலின், இவ் இரண்டு கொள்கையும், தான் அல்ல என்ப, அருத்தாபத்தியாற் பெற்றாம். ஒவ்வொரு தோற்றமும், பற் பல விகற்ப ரூபமாகத் தோற்றலின், சகலம் போல், அனேக விதமாகக் காண்பனவும், கேவலம் போல் ஒன்றாகக் காண்பதுவும், என்றார். மாண்பு உடைய என்று, அடை கொடுத்தது. அறிவறியாமை அடுக்குகட்கு, இயையாமை பற்றி என்க. பொருள் படற்கு இயையாமையின், சித்தினது தோற்றம் எனப்பட்டது. உண்டோ என்பதில், உள்ள ஓகாரம் இல்லை என்னும் பொருள் தரலால், எதிர் மறை. எத்தனை சாதித்தாலும் என் என்றது. எவற்றிற்கும் வினை முதலாய் நிற்பது யாதோ, அதனைக் கண்டு சாதி எனக் குறிப்பித்தற்கு. (58)

**(அவ தாரிகை)**

இங்ஙனம் இவ்வாறு விசாரித்துத் தெளியினும், அவ்வாறு நிற்க வேண்டும் என்பதை, இக் கவி கூறுகின்றது.

**எவ்வாறு எவர் இருந்து என்னே, எவ்வாறு எவர் போய் என்னே,**
**எவ்வாற் கூட்டிற் தனிமை ஒத்ததே - எவ்விதமும்,**
**நீங்குவார் நீங்கா நிலையில், அனுபுதி கண்டு**
**தூங்குவார்க்கு அன்றோ, சுகம்**

[இதன் பொருள்]

**எவ்வாறு எவர் இருந்து என், எவ்வாறு எவர் போய் என்**
**எவ்வாற் கூட்டிற் தனிமை ஒத்ததே**

எவ் வண்ணம் எவர் இருக்கினும், எவ் வண்ணம் எவர் மாறினும், அதனை விசாரிப்பதால் எமக்கு யாது பயன் உளது ? வெளவால் பறவையானது, தனது கூட்டில் யாதோர் சார்பின்றித் தனித்து இருந்தல் எங்ஙனமோ, அதனை ஒக்கும் எனக் கூறுவார் போன்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எவ்விதமும் நீங்குவார், நீங்கா நிலையில்**
**அனுபுதி கண்டு, தூங்குவார்க்கு அன்றோ சுகம்**

**எவ் விதச் சார்புகளின் நின்றும், தமக்கின்றி ஒருங்கு ஒழித்தவராய், இடையின் நீங்காத நடு நிலையின் கண் விளையும் அனுபூதி ரசங்களைக் கண்டு, தூங்காமற் தூங்குபவர், அவர்களுக்கு அன்றோ சுகம் எனப்படுவது?**

**(பத சாரம்)** எவரைக் குறித்து, யாது விசாரிக்கினுந் தன்னிலையில் இருந்து, தானே தீர வேண்டியது. அப்போது அன்றோ சுகம் எனப்படுவது, தயவின தன்றெனக் கணித்தற்கு இயையும்? வினை முற்றே வினை எச்சமாகும். என்றதனால் நீங்குவார் என்பதனை, வினை எச்சம் ஆக்கினாம். ஒவ்வா என்பதிக் காலத்தில், வெளவால் என்றாயது. ''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' என்னும் இனலக்கணத்தால் என்க. யாதோர் விசாரணையும் இன்றித் தனித்திருத்தல் பற்றி வெளவாலை உவமை ஆக்கியது என்க. எவ் விதமும் என்பதில் உள்ள உம்மை முற்றும் உம்மை. தூங்குவார்க்கு அன்றோ என்பதில், ஓகாரம் ஏனையர்க்கு அன்றெனக் குறித்தலால் எதிர்மறை. தனதுண்மை நிலையில் நிற்பவர்க்கு அல்லவோ சுகம் எனப் படுவது, என்பது கருத்து. (59)

**(அவ தாரிகை)**

**துவிதம், அத்துவிதம் என்பவற்றின் உண்மை நிலை** இஃதென இக் கவி கூறுகின்றது.

**விண்ணுருவ ஈசன் என்பர், வேற்று உருவஞ் சீவன் என்பார்,**
**கண்ணும் இரவியும் போற் காண் என்பார் - திண்ணம் அதாய்**
**அத்துவிதம் ஆகாது, அவை இரண்டும் ஆகாத,**
**சித்து உருவந் தானே சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இதன் பொருள்]

**விண்ணுருவு ஈசன் என்பர், வேற்று உருவஞ் சீவன் என்பார், கண்ணும் இரவியும் போற் காண் என்பார்**

சமட்டி வடிவம் ஈஃதெனவும், வியட்டி வடிவம் ஈஃதெனவும் குறிப்பிக்க, **விண்ணுருவம் போல்வது ஈசன் எனவும், அணு வடிவம் போல்வது சீவன் எனவும்** பேத வாதிகள் கூறா நிற்பர். இஃது அன்றியும் கிஞ்சிக்ஞத்துவம் இனையது எனவுஞ், சர்வக்ஞத்துவம் இனையது எனவுங் காட்டக் கண்ணொழி போலவுஞ், சூரிய ஒளி போலவும் நிற்கும், என்றவர்களே, வாதியா நிற்பர்.

**திண்ணம் அதாய், அத்துவிதம் ஆகாது, அவை இரண்டும் ஆகாத, சித்து உருவந் தானே சிவம்**

இங்ஙனம் வாதிப்பன அனைத்தும், அத்துவிதம் எனற்கு முரணாகவே நிற்கும். அவர்களால் வாதிக்கப்படும் உபாதி பேதங்களும், குண பேதங்களும், ஆகிய இவை இரண்டும் ஆகாது. ஆங்காங்கே விளங்கி நிற்கும் மெய்யுணர்வு எனப்படுவது யாதோ, அதுவே தானாக நிலைத்து நிற்றலே, சிவம் எனப்படுவதாம்.

**(பத சாரம்)** போல் என்பதனை உபாதிக்குங் கூட்டுக. அளவு படாமையும் அளவு படுவதும் பற்றித் தாஷ்டாந்தம் இருத்தலின், இந் நான்கையும் திருஷ்டாந்தமாகக் கூறினார். சாதாரண தர்மம் இருத்தலின் என்க. இத் துவித வாதம், பூர்வ பட்ச மாதற்கே முழுதும் இயைந்து நிற்றலை அறியாதார்க்கு, இது சத்தியம் போற் காண்டலின், திண்ணம் அதாய், துவிதம் அது என்றார். எனவே, அந்தர் முக நாட்டத்தார்க்கு ஆகும் என ஆயிற்று. ஆகவே பிம்பப் பிரதி பிம்போபாதி இலக்கணத்தால், காண்பான் யாது யாதா நிற்கின்றானோ, அது அதுவாக அவனுக்குக் காண்டல் நூதனம் அன்றாமையானும், தன்னைத் தவிர, இவை சற்றும் இன்றாமை யானும், இவ் இரண்டிடத்தும் நிற்கும் அறிவு, இத் தகையது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலினாலும், அவை இரண்டும் ஆகாத சித்துருவம் எனக் கூறிய தாகக் கண்டாம், சீவன் எனலும், ஈசன் எனலும் அறிவன்றோ? அன்றேல், உபாதி குணந் தொழில் ஆகட்டும். ஆகும் எனில், தன்னைத் தான் அறிதற் பாலவாக வேண்டும். முரணும் எனின், அறிவெனலையே ஏற்க வேண்டும். உபாதி குணந் தொழில், சிறுமை பெருமை பற்றி அவற்றிற்கு அதிஷ்டானமா நிற்கும் அறிவும் சிறுமை பெருமை எனற்கு இயையுமா? சலம் சிறுமை பெருமைக்கு இயையா. ஆதலின் அது போலச் சிற்றறிவு பேரறிவு என்னற்க. என்னின், சிற்றின்பம் பேரின்பம் என வரும். வரின், சட சித்து பேதம் முன் போல அகலாது நிற்கும். நிற்கின், சுக துக்க பேதமும், ஜனன மரண வாதனையும், தன்னை விட்டு அகலாமலே நிற்கும் என்று, உணர்க. ஆதலின், அத்துவிதமே சிறந்தது என்பது கருத்து. தானே தானாதற்கு இயைதலின் என்க. (60)

**(அவ தாரிகை)**

அனைத்து மாயா மயம் எனக் கண்டு, ஒழிப்பு புரிவது யாதென்றதற்கு விடை, இக் கவியில் கூறுகின்றது.

> ***சத்த சடமான சுக்கிலங் கெர்ப்பீகரித்துச்***
> ***சித்தத்துவங் கலந்து, சீவித்துச், சத்தியம் போல்***
> ***வந்த பொழுது, தீதெல்லாம் மாயை என்றே, தற் சொருபஞ்***
> ***சிந்தை செய்வார் அன்றோ, சிவம்***

[இதன் பொருள்]

> ***சத்த சடமான சுக்கிலங் கெர்ப்பீகரித்துச்***
> ***சித்தத்துவங் கலந்து சீவித்து***

தன்னையேனும் அயலையேனும் அறிதலில் சுத்த சடமாய் நின்றுள்ள சுக்கில சோணிதமே கருவாகப் பரிணமித்து அறிவின் ஸ்புரிப்பு எண்ணிறந்தவைகளுள் சிதாபாசத்துவமாகிய சித்தத்துவச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயை அதிற் பட்டதாகக் கலந்து, இவ் இரண்டின் ஒற்றுமை நயத்தால், ஒன்று போற் சீவித்து.

**சத்தியம் போல் வந்த பொழுது, தீதெல்லாம் மாயை**
**என்றே, தற் சொருபஞ் சிந்தை செய்வார் அன்றோ, சிவம்**

இவ் உலகின் கண் வந்து உதித்துச் சற்று விவேகம் எய்திய இடத்து, முன்னர் சத்தியம் போல் காணப்பட்ட இப் பூத பௌதிகம் அனைத்துந், தனது பிராந்தி ரூபமதாகக் காணப்படுதலின், மாயா வடிவம் என்றே துணிந்து, இங்ஙனம் கணித்த தனது சொரூப மாவது யாதோ எனச், சிரவண மனனாதிகளால் ஐயந் திரிபறத் தெளிந்து, அதுவாயினால் யாவரோ, அவரே, சிவம் எனப்படுவர்.

**(பத சாரம்)** இங்ஙனம் கணிக்க வலி உளது மானிடப் பிறவி அன்றி, ஏனையவை, மிசிர கன்மம் அன்றாமையானும், மிசிர கன்மம் ஆயினும், சாத்வீக குணம் மேலிட்டால் அன்றி, இந் நிலை எய்தற்கு இயைந்த பருவமணிமைத்து ஆகா, ஆதலினானும் இவ்வாறு உரை கொள்ள இக்கவி எமக்கு இயைந்தது என்க. மிசிர கன்ம மானிடருக்கு எனவே, புண்ணிய கன்மந் தேவர்க்கும் பாவ கன்மம் ஏனைய உயிர்களுக்கும் என உரை கொளக் கிடந்தமை காண்க. வாளா சடம் என்னாமையால், தன்னையும் அயலையும் அறிய வல்லது அன்றென உரை கொண்டாம். தானே தானாதற்கு முயல வேண்டும் என்பது கருத்து. சுக்கிலம், கெர்ப்பீகரித்து, சீவித்து வந்த பொழுது என முடிக்க. சிந்தை செய்வார் சிவம் எனலை, எழுவாய் பயனிலை ஆக்குக. சுக்கிலம், அசர்த்தத்துவம், அசேதனத்துவம் ஆதலின் கெர்ப்பீகரித்தலும், சீவித்தலும், பூமியில் உதித்தலும் ஏலாதே எனக் சங்கை கொண்டு, அவலமாப் போவதை விட்டு, இருப்பது அறியும் உலகமும் ஆதலின், இவற்றைத் தீர விசாரித்து, ஐயந் திரிபறத் தெளியின், அக் கணமே, துக்க நிவிர்த்தியும் தடையற்ற ஆனந்தமும், இம்மையிற் தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரத்தியட்சமாக எய்தும் என்பது துணிபெனக் கொள்க. அவலமாப் போவதாவது: நிமித்த காரணன் ஒருவன் உளனாகத் தேடப் புகின், தேடுவானை அன்றி, இன்மையின் முன்னிலையும் படர்க்கையும் அநர்த்த ரூபமாக அமைகலை என்க. திரிசய ரூபம் அனைத்தும் மாயை. எனவே அதனை அறியும் ஆத்ம ஸ்வரூபந் தன்னை விட வேறின்மையின், தானே உண்மை வடிவம் எனப் பெற்றாம். மாயை என்றே என்பதில், ஏகாரம் தேற்றம். சிந்தை செய்வார் அன்றோ என்பதில், ஓகாரம். ஏனையர் ஆகரெனக் குறிக்க நிற்றலின் எதிர் மறை. (61)

**(அவ தாரிகை)**

திரி கால ஞானம் மெய் உணர்வு எனப் படாதோ எனற்கு, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**நேற்று இன்று நாளை, என நிச்சயித்த, ராப் பகலை**
**மாற்றிச், சுயஞ் சோதி வடிவாகி - ஏற்றபடி,**
**என்றும் ஒரு நாளாய் இருக்குந் திரு நாளைச்,**
**சென்று தொழுவாரே சிவம்**

[இதன் பொருள்]

**நேற்று இன்று நாளை, என நிச்சயித்த, ராப் பகலை**
**மாற்றிச் சுயஞ் சோதி வடிவாகி**

நேற்று எனவும், இன்று எனவும், நாளை எனவும் நிச்சயித்திற் கியைந்த இரவையும் பகலையும், அறிவை அன்றி, இவை ஓர் முதலாகா எனக் கழற்றி, அறிவாகிற நாட்டம் பெற்றதனை ஞானாசிரியரினாற் சுயஞ் சோதியாகக் கண்டது தானாகப், பல்லூழி காலம் பயின்று அங்ஙனமாகச் சாத்திய திசை அடைந்து.

**ஏற்றபடி என்றும் ஒரு நாளாய் இருக்குந்**
**திரு நாளைச் சென்று தொழுவாரே சிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்ஙனம் இயைந்த வண்ணம், எப்போதும் ஒரு நாளாக இருக்கத் தகுவது, எந்த நாளோ, அதுவே திரு நாளாகக் கருதி, அதனை அப்பாலுக்கு அப்பாலாகச் சென்று, தொழுபவர் யாவரோ, அவரே சிவம் எனப்படுவராவர்.

**(பத சாரம்)** தனது அறிவே, இராப் பகலாகப் பிரதிபலித்துக் காண்டலே, அன்றித் தனக் கன்னியம் அன்றென, அகமுகப் படுத்துவான் வேண்டிப், புறம்பாகக் கூறியதை மறுத்து, இராப் பகலை மாற்றி, சுயஞ் சோதி வடிவாகி என்றார். சுயஞ் சோதி நிலையைத், தனக்கு இயல்பாக உடையது அறிவாகலின், மீண்டுஞ் சுயஞ் சோதி வடிவாகி என்றார். ஆங்கு இராப் பகல் இன்மையின், என்றும் ஒரு நாளா இருக்குந், திரு நாளெனப் பட்டது. ஏற்ற படி என்ற மிகையால் அஃது இருந்த வண்ணம் எனப்பட்டது. மாற்றி வடிவாகி, தொழுவார் என முடிக்க. தொழுவாரே என்பதில் உள்ள ஏகாரந் தேற்றம். இராப் பகல் எனின், தளை தட்டுமாதலின் ஆரிய மொழிப் படியே ராப் பகல் என்றார். தன்னைத் தான் உணரற் பாலதன்றாகலின் அதுவுந் திரிசியம் என்பதே கருத்து. (62)

**(அவ தாரிகை)**

தானே தானாதற்கு இயைந்ததை, முயலா இடத்து, யாதும் பயன் இன்றென்பதை, இக் கவி கூறுகின்றது.

**ஞான நூல் கற்றாலும், நற் துறவு பூண்டாலும்,**<br>
**மோன சமாதி முயன்றாலும் - தானாகி,**<br>
**எல்லாக் கவலையும் அற்று, இன்புற்று இருப்பதுவே,**<br>
**சொல்லாரும், முத்தி சுகம்**

[இதன் பொருள்]

**ஞான நூல் கற்றாலும், நற் துறவு பூண்டாலும்,**<br>
**மோன சமாதி முயன்றாலும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல சுருதியாகிய ஞான நூல் அனைத்தையும் ஒருங்கே தீரக் கற்கினும். அரிய கடுந் துறவைப் பெறினும், மௌனமாதற்கு இயைந்த சாதி யாதோ, அதனை முயன்று நிற்கினும்.

**தானாகி, எல்லாக் கவலையும் அற்று இன்புற்று இருப்பதுவே, சொல்லாரும் முத்தி சுகம்**

இவற்றால் யாது பயனும் இன்மையின், சமஸ்தமுந் தனது சிற்பிரகாச வடிவ மாகியதனால், எல்லாக் கவலைகளையும் ஒழித்து, சுகபோத வடிவமாய் நிற்றலே முடிவாகக் கூறும் சொல்லிற்கு இயைந்த, முத்திச் சுகம் எனப்படுவதாம்.

**(பத சாரம்)** சமஸ்தமுந் தானாகி இருத்தல், இப்போது மாத்திரம் அன்று, எப்போதும் எனலை அறிய வேண்டின், இப்போது உதயமான ஞானப் பிரகாசம், எப்போதும் விளங்கி நிற்கின் எப்போதுந் தெரியலாம். அஃது எங்ஙனம் எனின், தன்னை அன்றி, அறிவும், அறிவை அன்றி, அறியாமையும், அறியாமையை அன்றி, மூலப் பிரகிருதி, மக தத்துவம், அகங்கார தத்துவம், பஞ்ச தன் மாத்திரை, சூக்கும தனு, தூல பூதம், தூல தனு இவைகளும், இருக்க வேண்டும். இருக்கின், தத்துவங்களை ஒன்றில் ஒன்று ஒடுக்கிச், செல்லுங் கால் தானே தானாக முடியாது இருக்க வேண்டும். அங்ஙனம் இன்றே. அனைத்தும் தனது விரிவும், குவிவுமாய் முடிதலின் என்க. யாம் முற்றும் உணராத குற்றம் அன்றி, வேறில்லை என்க. இவை அனைத்தையும் புரிய வேண்டாம் என்பதன்று. முடிபு காண்டற்கு ஆதலின், அஃது இன்றிய இடத்துப், பயனின்று என்பது கருத்து. இருப்பதுவே என்பதில், ஏகாரம் தேற்றம். கற்றாலும் பூண்டாலும் முயன்றாலும் என்பவற்றில் உள்ள, உம்மை பயனின்று என்பதைக் குறிக்க வந்த எண்ணும்மை யாம். (63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை) (இதுவு மது)**

**மா கேள்வி பெற்றாலும் மா யோகம் உற்றாலும்**
**தேகேந்திரியந் திரிந்தாலும் மா கருணைச்**
**சேரா ரூப சாந்தி தேறார் பெறார் பேறு**
**சோராத முத்திச் சுகம்**

[இதன் பொருள்]

**மா கேள்வி பெற்றாலும், மா யோகம் உற்றாலும்,**
**தேகேந்திரியந் திரிந்தாலும்,**

யுத்திக்கு முரணாத சுருதி, கேள்வி நன்கமையப் பெறினும், மகத்தாய கிரியா யோகம் வழுவின்றித் தீர முற்றப் பெறினும் தேகமும் அகக் கரண, புறக் கரணங்களும், முன் போலத் தமது இஷ்டப்படி செல்லாது, அக முகமாகத் திரிந்து நிற்கினும் மெய் உணர்வை உள்ளவாறு பெறா இடத்து.

**மா கருணைச் சேரா, ரூப சாந்தி தேறார்**
**பெறார் பேறு, சோராத முத்திச் சுகம்**

மகத்தான கிருபா வெள்ளத்தில் எங்ஙனஞ் சேர்வர்? சேராவிடத்து உப சாந்த நிலையில் அழுந்தி எங்ஙனந் தேறுவர்? தேறா விடத்து, ஒன்றாலுஞ் சோர்வு உறாது, நின்றுள்ள முத்திச் சுகமாகிற பேற்றை எங்ஙனம் பெறுவர்?

**(பத சாரம்)** சேரார், தேறார், பெறார் என்பன, உயர்திணைப் பலர் பால், படர்க்கை எதிர் மறை வினை முற்றுகள். இவற்றினும் மிக்கது இன்றெனக் காட்ட, மா எனலை மூன்று இடத்துந் தந்தனர். அக முகத்திற்கும் பகிர் முகத்திற்கும் இயைதலின், திரிந்தாலும் எனப் பொதுப்படக் கூறினார். கருத்து வெளிப்படை. (64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை)**

சித்தங் கலங்காது நிற்கும் முறைமையினை இக் கவி கூறுகின்றது.

**இச்சை, அநிச்சை, பர இச்சை ஓடு, உழலுங்,**
**கொச்சைப் பிராரத்வக் கூழர்காள் - பிச்சை முதல்**
**ஏற்றார் இடுவார் இவர் என்று உணர்ந்தீரேற்**
**காற்றாடிக் கால் ஆகலாம்**

[இதன் பொருள்]

**இச்சை, அநிச்சை, பர இச்சை ஓடு, உழலுங்**
**கொச்சைப், பிராரத்வக் கூழர்காள்**

இச்சை எனவும் அநிச்சை எனவும் பரவிச்சை எனவும் கூறப்படும். இவற்றுள் ஒன்றோடேனும் கூட்டிக் கணமும் நில்லாது, உழன்று திரியும் அற்பமான பிராரத்வ வயப்பட்ட அறிவீனர்களே.

**பிச்சை முதல், ஏற்றார், இடுவார் இவர் என்று உணர்ந்தீரேற்,**
**காற்றாடிக், காலா ஆகலாம்**

பிச்சை முதலியவற்றை ஏற்றற் பாலாரும், இடுதற் பாலாரும் உளர் அன்றோ? அவர்கள் இனையர் என்பது கற்பனைகளா நின்ற வற்றை, அல்ல அல்ல எனக் கழற்றி, மெய் உணர்வு காணப் பெறுவரேல், காற்றாடி ஆகாது. அவற்றை நின்று இயக்கும் வாயுப் போல, நாம் ஆகலாம்.

(பத சாரம்) எவரும் பிராரத்வ வயதினர் ஆயினும், அது வயப்படாது, அதனை உணரும் அறிவு யாதோ, அதனது உண்மை நிலையிற் பிறழாது நிற்க வேண்டும். நில்லா இடத்து முன்னர்க் கடந்து உள்ள பிறவிகள் போல் இஃது ஆகுமன்றோ. ஆயின், இனி வரும் பிறவிகள் தோறும், ஆகும் அன்றோ. அங்ஙனம் ஆயின், யாம் உய்வது தான் எங்ஙனம்? முடிவின்றாதலின், இங்ஙனங் கூறினார் என்க. ஆட்டப்படுதலுக்கன்றி, ஆட்டுவிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்குச் சலனம் இன்மையின் 'காற்றாடிக் கால் ஆகலாம்' என்றார். ஓடென்பதனை ஏனைய இரண்டிடத்து மொட்டுக. முதல் என்றதனால், ஏனைய வழிகளில் இடுதல் ஏற்றல் பலவாறுள. அவற்றையுந் தழுவிக் கூறினார் என்பது பெற்றாம். கால் ஆகுதலே முறைமையாம் என்பது கருத்து. கூழாகாளென்பது விளி. கால் ஆகா விடத்துக் காற்றாடி ஆகலாம் எனக் குறிப்பித்தலின் மயக்க நிவிர்த்தி அணி. (65)

**(அவ தாரிகை)**

பகிர் முகம் ஆகாதார்க்கு, இவ் அனுபவம் எளிதில் எய்தும் என்பதை, இக் கவி கூறுகின்றது.

**என்னை, நான் கண்ட படி, இப் புவியில் எல்லோருந்**
**தன்னையே, காணத் தகுங் காணுஞ் - சொன்னேன்**
**ஒளி நாட்டம், ஓடு மனம் உண்ணா நாட்டம் பெற்று**
**வெளி நாட்டம் ஆகா விடின்**

[இதன் பொருள்]

**என்னை, நான் கண்ட படி, இப் புவியில் எல்லோருந்**
**தன்னையே, காணத் தகுங் காணும்**

எவற்றையும் நன்கு உணர்ந்து உத்தியாற் தெறிந்துழிச், சக சீவ பரம் அறிவன்றி இல்லை எனத் துணிந்து கூறலால், யானெனலும் அறிவாக வேண்டும். என்னை யான் சுருதி, யுக்தி அனுபவத்தாற் தெளிந்த இடத்துச், சொப் பிரகாசமாக விளங்கலாம் என்னை. யான் கண்ட வண்ணம், இவ் உலகின் கண் யாவரும் தன்னைத் தான் காணப்படும் என்பது திண்ணம்.

**சொன்னேன், ஒளி நாட்டம், ஓடு மனம் உண்ணா**
**நாட்டம் பெற்று, வெளி நாட்டம் ஆகா விடின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மை அறிவே வடிவா, நாங் கண்டோம் என முன்னரே கூறி இருக்கின்றனன். இப்போது தன்னைத் தான் காணும் முறைமை யாவது, சற் குருவினால் அகத்தில் விளக்கிக் கொண்ட சிற் பிரகாச நாட்டத்தோடு, மனத்தை அந்தர் முக நாட்டத்திற்கு இயையச் செய்து, சற்றும் பகிர் முக நாட்டத்திற் செல்லாது இருக்கப் பெறின்.

(பத சாரம்) காணும் அசை நிலை. தன்னையே என்பதில் ஏகாரம் தேற்றம். உள் நாட்டம் பெற்று வெளி நாட்டம் ஆகாவிடின், தன்னையே காணத்தகும் என முடிக்க. இங்ஙனஞ் செய்யாவிடின் தன்னைத் தான் காணத்தகாது என்பது கருத்து. **ஒளி நாட்டம் பெறா விடத்து, ஞான யோகம் யாது செய்யினும், பயன் இன்று என்பது தொனிக்கின்றது.** இங்கே ஒளி நாட்டம் எனல் கண்ணொளி அன்று. தேகத்தில் அவயவக் குறியாதலினானும் அஃது அழியினுந் தான் அழியாதிருத்தலினானும் என்க. (66)

**(அவ தாரிகை)**

கன்ம விதி மாறாமற் செய்தாற் பயனின்றோ எனற்கு, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**கன்மந் தவறாமற், காலம் தவறாமற்**
**சென்மந் தவறாமற், செய்வரோ - கன்ம விதி**
**செய்வான், செயல் இரண்டுஞ், சித்தத்தே கண்டு தெளிந்து**
**உய்வார், பொருளாகுவார்**

[இதன் பொருள்]

**கன்மந் தவறாமற், காலம் தவறாமற்**
**சென்மந் தவறாமற், செய்வரோ**

சன் மார்க்கத்தில் நிற்போர், நித்திய கன்மந் தவறாமலும், ஆறு காலந் தவறாமலும், பிறவிகள் தவறாமலும் வழுவாது செய்து நிற்பரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கன்ம விதி செய்வான் செயல் இரண்டுஞ், சித்தத்தே**
**கண்டு தெளிந்து உய்வார், பொருளாகுவார்**

இதனால் பிறவி கடந்து உய்தற்கு இடம் இன்மையின், கன்ம விதியை விடாது செய்பவன் யாவனோ அவனையும், அவன் இயற்றுஞ் செயலினையும் விடாது, தமது சித்தத்தே ஞான ஒளியாற் கண்டு தெளிந்து உய்பவர் யாவரோ, அவர்களே பொருள் பொருளாக விளங்குபவர்.

**(பத சாரம்)** ஓர் பிறவிக் கண் செய்தற்கு இயையினுஞ் சென்மந் தோறுஞ் செய்தற்கு இயையாது இயையினுஞ், செய்வானையுஞ் செயலையுங் கண்டு தெளிவது எங்ஙனம்? இன்மையின் இவற்றால் பயன் இன்று என்பது கருத்து. மேல் தாவாமையின் இவற்றால் பயன் இன்று எனினும், இப் பயன் உறுவது இவற்றால் அன்றோ? இவற்றைச் செய்தே முடிக்க வேண்டும் என்பது பெற்றாம். தத்துவக் கூட்டங்களைச் செய்வான் எனக் காணின் செயலும், பொருள் பொருளாதலும் முடியா எனக் காண்க. (67)

**(அவ தாரிகை)**

மகான்கள், இந் நிலை அல்லாதோர் யாது சிறப்புறினும், அவர்கள் வியக்க மகிழ்வதை அன்றி வெறுக்கார் எனலை, இக் கவி கூறுகின்றது.

**உள்ள படி கண்டு களித்து, உற்று உருக மாட்டாத**
**கள்ளரையுங் கண்டு களிப்பரே - கொள்ளையாய்**
**இந்திர சாலக் கமலம் எத்தனை புட்பித்தாலுஞ்**
**சந்திரனுக்கு உண்டோ சலம்**

[இதன் பொருள்]

**உள்ள படி கண்டு களித்து உற்று உருக மாட்டாத**
**கள்ளரையுங் கண்டு களிப்பரே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் தங்கள் உண்மை வடிவம் யாதோ அதனை உள்ளவாறு தரிசித்துத், தன்னையும் உலகையும் உற்றுப் பார்த்து மனஞ் சிதானந்த வடிவமாக உருகுவதற்கு வகை தெரியாது, வேடத்தாலும் அபிநயிப்பாலும் மெய்ஞ்ஞானிகள் போலத், தம்மைக் காட்டிப் பிறர் மனைவியரை வஞ்சிக்கும், வஞ்சகர்களையுஞ் சத்துக்கள், கண்டு களிப்பார்கள். இது யாது போலும் எனின்,

**கொள்ளையாய் இந்திர சாலக் கமலம் எத்தனை**
**புட்பித்தாலுஞ் சந்திரனுக்கு உண்டோ சலம்**

கொள்ளை கொள்ளையாக இந்திரசால வித்தையில் மெய் போலக் காணுந் தாமரை அரும் பூக்கள் கணக்கின்றி எவ்வளவு புஷ்பித் தாலும், அதனாற் சந்திரனுக்கு மன வருத்தம் உண்டாகுமோ? உண்டாகாது.

**(பத சாரம்)** மெய்யான தாமரை மலராயின், சூரியனுக்கு மகிழ்ச்சி யுஞ், சந்திரனுக்கு மனோ வாதையும் உண்டாகும். அல்லவே, விருப்பு வெறுப்பு உடையது போலக், கொள்ள வந்ததே அன்றி வேறல்ல. அது போல மகான்களும் என்று அறிக. அவர்களது ஞானானந்தக் களிப்பே இங்ஙனமாகக் காணும் என்க. உள்ளபடி என்ற இலேசான சுருதி வாசனையாற் கண்டு களிப்பர் என்று ஆயிற்று. கள்ளர் அல்லாரைக் கண்டு களிப்பது அன்றி, எனப் பொருள் தரலால் கள்ளரையும் என்றதில், உம்மை இறந்தது. தழீஇய எச்சம். களப்பரே என்பதில் ஏகாரம் அசை நிலை. கொள்ளையா என்னும் வினை எச்சத்தைப் புட்பித்தாலும் என்ற வினையோடு கூட்டி முடிக்க. அதனால் என்பது இவை எச்சம். உண்டோ என்பதில் எகாரம் இல்லை எனப் பொருள் தர நிற்றலால் எதிர் மறை. இங்கே சலம் என்பது வருத்தத்தை. புட்பித்தாலும் என்றதில் உம்மை முற்று உம்மை. அவர்கள் உள்ளக் களிப்பே மகிழ்வதாகக் கருதிக் கூறியது என்பது, கருத்து. (68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை)**

உண்மை உள்ள மகான் வாய்ப்பது அரிது என்பதை, இக் கவி கூறுகின்றது.

**தீங்கு கடர்ந்து, மேன் மேற் செனித்த கருவேல் அடியின்**
**மாங்கனி வந்துற்ற, ஒப்ப வாய்த்ததே - ஆங்காங்கும்**
**எல்லாருந் தேடு பொருள், யாமாகவே அருள**
**வல்லான், திருத் தாள் மலர்**

[இதன் பொருள்]

**தீங்கு கடர்ந்து, மேன் மேற் செனித்த கருவேல் அடியின்,**
**மாங்கனி வந்துற்ற, ஒப்ப வாய்த்ததே**

தீமையே பெரும்பாலும் அடர்ந்து, மேலும் மேலும் ஆகாயம் ஆளாவ உதித்து, எங்கணுந் தன் மயமாகக் காட்டுங், கருவேலங் காட்டு இடையில், அபூர்வமாக அரிய ஓர் மாங்கனி ஒருவனுக்குக் கிடைத்தால் எங்ஙனமோ, அது போல் எனக்கு அருமையாகக் கிடைத்ததே.

**ஆங்காங்கும், எல்லாருந் தேடு பொருள்,**
**யாமாகவே அருள வல்லான், திருத் தாள் மலர்**

சுவர்க்க மத்திய பாதாளம் என்னும் யாதிடத்தும் அறிஞர் எனப் படுவோரும், அவரொழிந்த ஏனையோருஞ் சுருதி யுக்திகளால் இன்னும் தேடிக் கொண்டிருக்கும், மெய்ப் பொருள் யாதோ, அது தான் யாமெனப் படுவது என்று ஐயந்திரிபறக் காட்டி, அதனை எமக்கு அருள வல்லான் யாவனோ, அவனது அழகிய பாதம் என்னுந் தாமரை மலர்.

**(பத சாரம்)** கருவேல் எனற்கு, யோனியாகிய கரவேலங் காடெனினும் அமையும். இவ்வாறு கூறில் உருவகமாம். திருத் தாள் மலர் வாய்த்ததே எனலை, எழுவாய் பயனிலை ஆக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்த்ததே என்பதில் ஏகாரம் அசைநிலை. யாமாகவே என்பதில் ஏகாரம் தேற்றம். வல்லான் என்பது குறிப்பு வினையால் அணையும் பெயர். அருளை என்னும் வினை எச்சம் வல்லான் என்னுங் குறிப்பு வினைப் பகுதியோடு முடிந்தது. திருத் தாள் மலர் எனல் உருவகம். கருவேலங் காட்டிற் அமைந்தது போலக் கருவிற்கும் அமைதலின் அதற்கு இயைந்தவாறு தீங்கு கடந்து மேன் மேற் செனித்த எனற்குப் பொருள் கொள்க. கனிக்கு ஆதாரமாம் மரம். அஃதின் றேற் கனி வாய்த்தல் அருமை எனக் கூற வேண்டுமோ? அது போல அயலை நுகர்தற்கு உரிய போக பூமியிற் தன்னைத் தான் நுகர எய்தியது அருமையில் அருமையாதலின் இங்ஙனங் கூறினார் என்பது கருத்து. (69)

**(அவ தாரிகை)**

அதீதத்தில் யாதோர் கற்பனையும் இன்று எனலை இக் கவி கூறுகின்றது.

**நான் இருந்தது எங்கே, நான் அபிமானித்தது எங்கே,**
**வானாள மண்ணாள வாஞ்சை எங்கே - ஞான குரு**
**தேசிகனார் எங்கே, சிவ சிவா முத்தி எங்கே,**
**பேசிட வாய் எங்கே, பிளாய்**

[இதன் பொருள்]

**நான் இருந்து எங்கே நான் அபிமானித்தது எங்கே**
**வானாள மண்ணாள வாஞ்சை எங்கே**

ஞானப் பிரகாச மேலீட்டில், நானா இருந்த தென்பது எங்கே? யான் அபிமானித்து நின்றவைகள் எங்கே? திரிலோகத்தையும் ஒருங்கே ஆள வேண்டுமென்ற அவா வென்பது எங்கே?

**ஞான குரு தேசிகனார் எங்கே சிவ சிவா முத்தி எங்கே**
**பேசிட வாய் எங்கே பிளாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யைத் தெரிவிக்க வந்த உண்மையான ஞானாசிரியர் எங்கே? சிவ சிவா முத்தி எனக் கூறுவது எங்கே? இதை எடுத்துச் சொல்ல வாய்தானும் எங்கே? ஒன்றும் அறிகிலமே சற் புத்திரா!

**(பத சாரம்)** சுத்த சாக்கிரமான ஸ்வயம் பிரகாச வியாபகத்தில் இங்ஙனமாய விகற்பங்கள் சற்றுங் காணாது இருக்குமாயின், சுத்த கேவலமான நனவிற் சுழுத்தியின் கண், எங்ஙனங் கூறற்கு இயையும்? கூடாமையால் 'பேசிட வாய் எங்கே பிளாய்' என்றார். எனவே, இவை அனைத்துஞ் சொன் மாத்திரமுந் தோற்றன் மாத்திரமுமாக அமையப் பெறும் என்பதாயிற்று. இது போன்ற வியப்பு நிலை எங்கணும் இல்லை என்பது கருத்து 'ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்' என்னும் உத்தியாற் பாதாளத் தையும் வருவித்தாம். இக் கவியிலுள்ள, எங்கே எனும் மொழிகள் ஆறும் அறிகிலம் என்னும் பொருள் தர நின்றன. பிளாய் என்பது இடைக்குறை. வானாளும் மண்ணாளும் வாஞ்சை எனினும் அமையும். (70)

**(அவ தாரிகை)**

அரிய தவங்களாலுஞ் சிரவணாதிகளாலும் அடைந்த பேறு இனைய தென இக்கவி கூறுகின்றது.

**என்னையே அல்லாமல், யான் பெற்றது ஏதுமிலை**
**என்னை யான் பெற்று இருந்தது, எப்போதும் என்னை அன்றிப்**
**பந்தமிலை, வீடுமிலை, பார்க்கில், இவை யாராயுஞ்**
**சிந்தனையும் இல்லாததே.**

[இதன் பொருள்]

**என்னையே அல்லாமல், யான் பெற்றது ஏதுமிலை**
**என்னை யான் பெற்று இருந்தது எப்போதும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயம் பிரகாச வடிவமாகிய என்னையே அன்றி, யாது உழைப் பினானும் யான் அடைந்த பேறு யாதுமிலை. என்னை யான் அடைந்த பேறு, இப்போது தானா எனில், எப்போதும் ஆதலின்.

**என்னை அன்றிப் பந்தமிலை, வீடுமிலை, பார்க்கில்**
**இவை யாராயுஞ் சிந்தனையும் இல்லாததே**

அறிவு அறியாமைக்கு நடு நிலையாகிய என்னைத் தவிரப், பந்தம் எனலுமில்லை. முத்தி எனலும் இல்லை. இவற்றை நன்கு உணரும் இடத்து இவற்றை ஐயந்திரிபற நன்கு, ஆராய்தற்கு இயைந்த ஆபவாத சிந்தனையும், சற்றும் இல்லாமற் போயது.

**(பத சாரம்)** ஏ - அசை. இலை என்ற மூன்றும் இடைக் குறை. என்னையே என்பதில் ஏகாரம் தேற்றம். எனவே, சொப் பிரகாச வடிவமாதலின், என்னிடத்தில் எவற்றையும், எவற்றிலும் என்னை யும் பிரத்தியட்சமாகக் கண்டதால், பந்தம் எனலும், வீடு எனலும், சிந்தனை எனலும் இல்லை எனக் கூறியது, திண்ணம் எனப் பெற்றாம். ஆயா விடத்து, உண்டாய கற்பிதங்கள் ஆய்ந்த விடத்து இல்லை என்பது கருத்து. (71)

**(அவ தாரிகை)**

யாது மயமாக நின்று, யாதைத் துதிக்க வேண்டும் எனற்கு, இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**செப்படி போற் காட்டி, அருள் தேசிகனையோ, அனைத்தும்**
**இப்படி சோதித்து உணர்ந்த என்னையோ, மைப்படியுஞ்**
**சென்ம முடிவாக, வந்த தேகாலயத்தினையோ**
**என் மயமாப் போற்றுவேன், யான்**

[இதன் பொருள்]

**செப்படி போற் காட்டி, அருள் தேசிகனையோ, அனைத்தும்**
**இப்படி சோதித்து உணர்ந்த என்னையோ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்படி வித்தை எனல் எங்ஙனமோ அது போல பொய்யையும் மெய்யையும் ஐயந்திரிபுறக் காட்டி அருளிய ஞானாசிரியனையோ? அனைத்தையும் இப்படியாகச் சோதித்து உணர்ந்த எனது எதார்த்த நிலையினையோ?

**மைப்படியுஞ் சென்ம முடிவாக வந்த, தேகாலயத்தினையோ**
**என் மயமாப் போற்றுவேன், யான்**

பிராந்தியே சகசமாகப் படிந்துள்ள சகல சன்மங்களுக்கும் முடிவாக வந்தது யதோ, அந்தத் தேகாலயத்தினையோ? இவற்றுள் யாதாகாரமாக நின்று எதனைத் துதிப்பேன் யான்?

**(பத சாரம்)** செப்படியாவது, கைப் புரட்டு வித்தை. அதாவது பொய்யை மெய்யாக்கி, மீண்டும் பொய்யைப் பொய்யாக்கலை. அது போலப் பகிர் முகத்தால் உலகை மெய்யாக்கி, மீண்டும் அந்தர் முகத்தாற் பொய் ஆக்குதலாம். போற்றுவே என்னும் வினை முற்றிற்கு யானெனல் எழுவாய். தேசிகனை, என்னை, தேகாலயத்தினை என்னும் இம் மூன்றுஞ் செயப்படு பொருள். இக்கவியிலுள்ள மூன்று ஓகாரமும் துணிபை விளக்காமையின் ஐய வினா. யாதாக நின்று யாது யாதைப் போற்றவது என்பது கருத்து. சொப் பிரகாசத்திற்கு அயலின்மையின் ஏனைய பிறவி களைத் துதியாதது கருவறுக்க வந்ததினால் என்க. (72)

**(அவ தாரிகை)**

முடிவாக வந்த தூல தேகத்தை நோக்கி வழுத்தலை இக் கவி கூறுகின்றது.

**அன்ன மய கோசமாம், ஆகமே உள்ளளவுஞ்**
**சொன்படி கேட்கிற் சுகம் அடைவாய், எந்நாளுங்**
**கெட்ட பாழ் வாசனையைக் கிட்டாதே, யாதேனும்**
**இட்டபடி கண்டே இரு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இதன் பொருள்]

**அன்ன மய கோசமாம் ஆகமே உள்ளளவுஞ்**
**சொன் படி கேட்கிற் சுகம் அடைவாய்**

அன்னமய கோசமாய் நின்றுள்ள தேகமே, நீ இருப்பனவும், யான் சொன்னபடி கேட்டு நிற்கில், சுக துக்கம் அற்ற பேரின்ப வாழ்வை அடைவை.

**எந்நாளுங் கெட்ட பாழ் வாசனையைக் கிட்டாதே,**
**யாதேனும் இட்டபடி கண்டே இரு**

எக் காலத்திலும் கேட்டையே தரற்கு இயல்பாயுள்ள, பாழையுஞ் சகத் பிராந்தியையும் நினையாது, மறந்துவிடு. உணவில், யாதேனும் ஆருனக்கு இட்டார்களோ, அங்ஙனமாகப் புசித்திருக்கக் கடவை.

**(பத சாரம்)** ஆகமே என்பது விளி உருபு. காற்றேனும் புசித்து நிற்கினும், அன்ன மயமாதலால், அன்ன மய கோசம் ஆகமாம் என்றார். நீ சட்பாவ விகாரமாதலின் நீ ஓர் முதல் எனக் கருதற்க. பாவிப்பானை அன்றிப் பாவலமும் பாவ விகாரமும் வேறன்மை யின் என்க. சொன்ன படி கேட்டலாவது: இங்ஙனங் கூறிய படி கேட்டலை. எந்நாளும் என்பது இன எதுகை. வாசைன என்னாது, கெட்ட பாழ் என்று அடை கொடுத்தது, பிறவியின் கண்ணே செலுத்துதல் இயல்பாதல் பற்றி. ஆதலின் எங்கே எங்கே யாது யாது கிடைப்பதோ, அதனை உருசி கருதாது, எங்ஙனம் இட்டார்களோ, அந்தப் படிப் புசித்துக் கொண்டிருத்தல், மெய்த் துறவாதலின், யாதேனும் இட்டபடி கண்டே இரு என்றார் ஆகமே சுகம் அடைவாய், கிட்டாதே, இரு என முடிக்க, கோசமாமாக எனல் இரு பெயர் ஒட்டுப் பண்பு. இங்ஙனம் இருக்கின், சுகம் அடைவாய் எனத் துதித்தார் என்பது. கிட்டாதே என்பதில் உள்ள ஏகாரமும், கண்டே என்பதிலுள்ள ஏகாரமும் தேற்றம். (73)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை)**

பொறிகளை நோக்கிப் புகழ்தலை இக் கவி கூறுகின்றது.

**பொறிகாள் எனை நெடு நாட் போற்றி வளர்த்தீரே,**
**அறிவானந்தப் பொருணான் நானேன் - பிறிவாகும்**
**உங்களையும், நானா உணர்ந்து கொண்டேன், நீங்கள் இனி**
**இங்கு அழியாது ஒன்றாய், ஈரீர் (74)**

[இதன் பொருள்]

**பொறிகாள், எனை நெடு நாட் போற்றி வளர்த்தீரே,**
**அறிவானந்தப் பொருணான் நானேன்**

ஐம் பொறிகளாய் நின்று உள்ளவர்களே, என்னை நெடு நாளாகக் காத்து வளர்த்தீர்களே. அதனால், யான் அறிவானந்தப் பொருளாக விளங்குகின்றேன்.

**பிறிவாகும் உங்களையும், நானா உணர்ந்து கொண்டேன்,**
**நீங்கள் இனி, இங்கு அழியாது, ஒன்றாய், ஈரீர்**

பற்பல பேதமாய் உள்ள உங்கள் அனைவரையம் எனது எதார்த்த வடிவமாகக் கண்டு தெளிந்து கொண்டேன். அது போல நீங்களும் முன் போற் பற்பல தேகமாக நின்று அழியாமல் இனியேனும் என் போல் ஒன்றாக நிற்கின் சுகம் அடைவீர்கள். அங்ஙனம் நிற்றல், உங்களுக்கு இயல்பு. நிலை அன்றாகலின் ஒரு காலும் நில்லீர்.

**(பத சாரம்)** பொறிகாள் எனல் விளி உருபு. பல சன்மங்கள் தோறும் எனலை, நெடு நாள் என்றார். வளர்த்தீரே என்றதில் ஏகாரம் வினா. ஒன்றின் விடயத்தை மற்றோர் பொறி அறியாதாதலின் பிறிவாகும் எனப்பட்டது. அறிதற் சேட்டை பலவாயினும், அறியும் வினை முதல் அறிவாதலின், நானா உணர்ந்து கொண்டேன் எனப்பட்டது. கருத்து வெளிப்படை. (74)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை )**

ஆசையை நோக்கிப் புகழ்தலை இக் கவி கூறுகின்றது.

**ஆசையே உன்னால் அலைந்து விட்டேன், என்றாலும்**
**நீ செய் உபகாரத்தில் நின்றேனே - தேசிகனை**
**உன்னால் அடைந்தேன், உனைக் கூடி, முத்தியிலும்**
**என் ஆணை, நான் ஆயினேன்**

[இதன் பொருள்]

**ஆசையே, உன்னால் அலைந்து விட்டேன், என்றாலும்**
**நீ செய் உபகாரத்தில் நின்றேனே**

பிறவி தோறும், என்னை விட்டு அகலாது நின்ற எனது ஆசையே! இது காறும் உன்னால் இன்ப துன்பம் என்னும் அலைகளால் மொத்துண்டு அலைந்து விட்டேன். அங்ஙனம் இருக்கினும், இப்போது நீ எனக்கு அடிமையாகச், செய்த உபகாரத்தின் வயத்தில், அலையாது நின்று விட்டேன்.

**தேசிகனை, உன்னால் அடைந்தேன், உனைக்**
**கூடி முத்தியிலும், என் ஆணை, நான் ஆயினேன்**

எங்கணுந் தேடியுங் கிடைத்தற்கு அரிய ஞானாசிரியனைக் கண்டு அவனைச் சரணாகதி என்று உன்னால் அடைந்தனன். இஃது அன்றியும், மேலாய நிலைக்கு நீ ஆப்தனாய் இருப்பதால் உன்னை விட்டு அகலாது, உன்னோடு கூடி நிரதிசயானந்தம் ஆகிய முத்தி யின் கண்ணும், எங்கப்பானை அயலாகாது, நானே, நானாயினேன்.

**(பத சாரம்)** விஷய வாசனையால் அலைந்து விட்டேன் எனவும், உப சாந்தி ஆசையால், நீ செய் உபகாரத்தில் நின்றேன் எனவும், தேசிகளை அடைந்தேன் எனவும், நான் ஆனேன் எனவும் கூறியவாறு காண்க. ஆசையே என்பதில் உள்ள ஏகாரம் விளி உருபு. நின்றேனே என்பதிலுள்ள ஏகாரம் அசை நிலை. முத்தியினும் என்றதின் கண் உம்மை விடயத்தில், அது நாமாவிருந்ததன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பொருள் தரலால், இறந்தது தழீஇய எச்சம். என்னாணை எனக் கூறியது, யான் அடைந்த பேறு. அசத்தியம் அன்று என ஸ்திரப்படுத்துவான் வேண்டி என்க. அலைந்தேன் என்னாது விட்டேன் என மிகைபடக் கூறியது. அலைந்தலை ஸ்திரப்படுத்துவான் வேண்டி என்க. என்றாலும் என்றதின் கண்ணுள்ள உம்மை விடயத்தைச் சிறப்பித்தலால் இழிவு சிறப்பு. இங்ஙனம் இருப்பது பற்றி ஆசையைப் புகழ்ந்தார் என்பது கருத்து. (75)

**(அவ தாரிகை)**

கோபத்தை நோக்கி வேண்டிக் கோடலை இக் கவி கூறுகின்றது.

**கோபமே, உன்னால் குறை தீர்ந்தேன், நீ எழும்பித்**
**தாபமே செய்யுஞ் சலிப்பாலே - ஆபத்து**
**நீங்கி, உப சாந்தியிலே நின்றேன், கனவிலும்**
**ஏங்கி, எழும்பாதே, இரு**

[இதன் பொருள்]

**கோபமே உன்னால் குறை தீர்ந்தேன், நீ எழும்பித்**
**தாபமே செய்யுஞ் சலிப்பாலே**

சதா காலமும், என்னை விட்டு அகலாத கோபமே! இதுகாறுந் தீராத குறைகளை உன்னால் இப்பொழுது தீர்ந்து விட்டேன். நீ என்னை எழும்பி, விடாப் பகையை விளைவிக்க, அதனால் விளையுஞ் சலிப்பினால்.

**ஆபத்து நீங்கி, உப சாந்தியிலே நின்றேன்,**
**கனவிலும், ஏங்கி எழும்பாதே, இரு**

இஃது அன்றியும், நேரிட்ட ஆபத்தின் நின்று நீங்கி, உப சாந்த வாழ்விலே, நிலை பெற்றேன். இவ்வளவு உதவி செய்த நீ, மறந்து, உனது விசுவரூபங் கொண்டு, எழும்பாமல் எனக்குத் துணையாய் இரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(பத சாரம்)** இங்கே தாபம் எனல், விடாப் பகையை. ஆபத்து எனல் பிறரால் வருந் தண்டனைகளை. உப சாந்தி எனல் சனன மரணத்தில் திரிதலை. எனவே, கோபம் எனல். பகிர் முகத்தில் விடாத திகிலையும் அந்தர் முகத்தில் அதன் நீக்கத்தையும், தருதற்கு இயைந்தது என்பது பெற்றாம். உப சாந்த நிலையில், என்னை விடுத்தபடி என்றும் இருப்பாய் என வேண்டிக் கொண்டது என்பது கருத்து. (76)

**(அவ தாரிகை)**

உலோபத்தை நோக்கிப் புகழ்தலை இக் கவி கூறுகின்றது.

**லோபமே, உன்னை உறவு கொண்டேன், நின்னாகிற்**
**பாவமே என்பர், உண்மை பற்றுவார் - நீ பெருக**
**ஆர்ச்சிக்கவே படுவாயா, ஆகாகா, உன்னாலே**
**ஆர்ச்சிக்கப் பட்டேன், அமைவு**

[இதன் பொருள்]

**லோபமே உன்னை உறவு கொண்டேன், நின்னாகிற்**
**பாவமே என்பர், உண்மை பற்றுவார்**

என்றும் உன்னை விட்டகலாது நின்ற உலோபத்துவமே! எப்போதும் உன்னை உறவு கொண்டனன். உனது வயப்படிற் தீவினைக்கே இடமாதலிற், பாவமே விளையும் எனச் சத்துக்கள் கூறுவர்.

**நீ பெருக ஆர்ச்சிக்கவே படுவாயா, ஆகாகா உன்னாலே**
**ஆர்ச்சிக்கப் பட்டேன், அமைவு**

நீ யாவராலும் என்றும் பழிக்கப்பட்டே நிற்பை. இப்படிப்பட்ட உன்னால் உபசாந்த நிலைக்கு இடமானேன். இஃது என்ன ஆச்சரியம்.

**(பத சாரம்)** இங்கே உலோபத்துவம் எனல், தன்னைக் கொடுத்துத், தன்னை வாங்காமையை. இதனால் சிறுமையும் இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானாசிரியன் பால் தன்னைக் கொடுத்துத், தன்னை வாங்கினதால் பெருமையும், வரக் கிடந்தமை காண்க. இங்கே உண்மை எனல், ஞான அஞ்ஞானங்கட்கு இடை நிலை ஆகி, அஸ்திர ஞானத்தை இருமையினும், ஆர்ச்சிக்கப்படல் எனல், புகழப் படுதலை. அது பிறவிக்கு இயைதல், இது விடுதிக்கு இயைதல். ஆஆஆ எனல் ஆகாகா என்றாயது விசாரத்தால் என்க. ஆர்ச்சிக்கப்பட்டாய், அமைவும் எனப் பாட மோதி உரை கூறுவாரும் உளர். பாவமே என்பதில், உள்ள எகாரமும், ஆர்ச்சிக்கவே படுவாய், என்பதிலுள்ள ஏகாரமும் தேற்றம். உன்னாலே என்பதின்கண் உள்ள ஏகாரம் அசை நிலை. இதனால் தொனிப்பது இழிவைக் காட்டினும் பெருமையே சிறந்தது, என்பது கருத்து. (77)

**(அவ தாரிகை)**

மனத்தை நோக்கிப் புகழ்தலை இக் கவி கூறுகின்றது.

**நெஞ்சகமே, நானே நீ, நீயே நான் என்றிருந்தும்**
**வஞ்சகமாய், என்னை மறந்தனையே - தஞ்சம்**
**உனக்கு, நான் என்பதுவும் உண்மையே, உண்மை**
**எனக்கு, நீ வேறாய் இராய்.**

[இதன் பொருள்]

**நெஞ்சகமே நானே நீ, நீயே நான் என்றிருந்தும்**
**வஞ்சகமாய் என்னை மறந்தனையே**

எனக்கு உளவா நின்று, எப்போதும் என்னை விட்டகலாத மனமே, இது காறும், நானே நீ எனவும், நீயே நான் எனவும், அபேதமாக எண்ணி இருந்தனம். அங்ஙனம் இருந்தும் என்னை வஞ்சிப்பான் வேண்டி, இப்போது என்னை மறந்தனை.

**தஞ்சம் உனக்கு நான் என்பதுவும் உண்மையே**
**உண்மை எனக்கு நீ வேறாய் இராய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு நான் ஆதரவு என்பது எங்ஙனம் உண்மையோ, அது போலவே எனக்கு, நீ ஆதாரம் என்பது உண்மை அன்றோ? அங்ஙனம் இருக்க, இனி ஏனும் எனக்கு நீ வேறாகாது நில்.

**(பத சாரம்)** நானே, நீயே, உண்மையே என்பவற்றில் உள்ள ஏகாரங்கள் தேற்றம். மறந்தனையே என்பதில் ஏகாரம் அசை நிலை.. இராய் என்பது எதிர் மறை. முன்னிலை வினைமுற்று. என்றிருந்து என்பதின் கண்ணுள்ள உம்மை இழிவு சிறப்பு. பகிர் முகத்தில் அபேதமாக நின்றவாறு போல விட்ட போது, அந்தர் முகத்தில் நில்லாததால் 'வஞ்சகமாய் என்னை மறந்தனையே' என்றார். தனது இட்டத்திற்கு முரண் வந்தமையின், தஞ்சம் எனற்கு ஆதரவு அடைக் கலம் எனப் பொருள் கொள்ளினும் அமையும். உனக்கு நான் என்பதுவும் என்றதனால், எனக்கு நீ என்பதுவும் என்றிருக்க வேண்டும். ஆதலால், அம் மொழி எஞ்சி நிற்பது இசை எச்சம். எண்ணும் உண்மையாதல் பற்றி என்க. இரு வகையினும், விவேகத்திற்கும் துணை மனத்தை அன்றி வேறில்லை என்பது கருத்து. (78)

**(அவ தாரிகை) இதுவுமது**

***ஓடித் திரிந்தாய், உழைத்தாய், பிழைக்கும் வழி***
***தேடிப், பல் கலையுஞ் சிந்தித்தாய் - நாடி ஒரு***
***சற்குருவைத் தந்தாய் என சிந்தாய், தயவு செய்த***
***நிற்கு, உதவி என் செய்தேனே.***

[இதன் பொருள்]

***ஓடித் திரிந்தாய், உழைத்தாய், பிழைக்கும் வழி***
***தேடிப், பல் கலையுஞ் சிந்தித்தாய்***

கட்டுக்கு அடங்காது இதுகாறும் ஓடித் திரிந்தனை. அவலமாக ஊருக்கே உழைத்தனை. இனிச் சனன மரணத்தை விட்டுத்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பித்துக் கொள்ளும் வழி தேடி, மகான்களால் இயற்றிய ஞான நூல் பலவற்றையும் கேட்டுச் சிந்தித்தனை.

**நாடி, ஒரு சற்குருவைத் தந்தாய், என சிந்தாய்**
**தயவு செய்த நிற்கு, உதவி என் செய்தேனே**

குறி குணங் காரணமாக நாடி, ஒரு சற் குருவை எனக்குத் தந்தனை. என் மனமே! இங்ஙன மாய சிறந்த உபகாரத்தைச் செய்த உனக்கு, யாது பிரதி உபகாரம், யான் செய்தனன்.

**(பத சாரம்)** ஏகாரம் அசை. பிழைக்கும் வழி தேடி என்றதனால் பலகலையும் எனற்கு மகான்களால் இயற்றிய ஞான நூலென்று உரை கொண்டாம். இங்கே தயவெனல் உபகாரம். பகிர் முகத்ததாய வழி, அசுத்த மனம் எனவும், அந்தர் முகத்ததாய வழிச் சுத்தமனம் எனவும், பெயர் கொளற்கு இயைந்ததை, அருத்தா பத்தியாற் காண்க. (கருத்து வெளிப்படை) (79)

**(அவ தாரிகை)**

**உன் உன்னுருவாய், நான் இருந்த உண்மை போல், என் மனமே**
**என் உருவாய் நீ வந்து இசைந்தனையே - செய்ந் நன்றி**
**பாராட்டுவார் உனைப் போல் உண்டோ, பரம பதச்**
**சீராட்டின், மாறாது இரு**

[இதன் பொருள்]

**உன் உன்னுருவாய், நான் இருந்த உண்மை போல், என் மனமே**
**என் உருவாய் நீ வந்து இசைந்தனையே**

இதுகாறும் நினது கொள்கைக்கு இசைந்த வண்ணம், உனது சொரூப மாகவே யான் இருந்தனன். யானிருந்த எதார்த்தம் எங்ஙனமோ, அதுபோல என்னை விட்டகலாத மனமே! என் சிந்தைக்கு இசைந் தவாறு, எனது உண்மை வடிவமாக, நீயும் வந்து இசைந்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்ந் நன்றி பாராட்டு வார் உனைப் போல்**
**உண்டோ, பரம பதச் சீராட்டின் மாறாது இரு**

பிறர் செய்த நன்றியை மறவாது பாதுகாப்பவர்கள். உன்னைப் போல் ஒருவர் உளரோ! இல்லையே. ஆதலின், இப்போது அரிதிற் கிடைத்த பரம பதமாகிற பேரின்ப வாழ்வில் மாறாது என்றும் ஒரு தகைத்தாய் நில்.

**(பத சாரம்)** செய்ந் நன்றி என்பதில் யகர ஒற்று ஆசெதுகை. உன்னுரு எனல் கற்பனா வடிவை, என்னுரு எனல் கற்பனா ரகித வடிவை. பாராட்டல், மறவாது காத்தல், சீராட்டல் செல்வப் பெருக்கை. கருத்து வெளிப்படை. (80)

**(அவ தாரிகை) இதுவுமது.**

**ஆசை வர்க்கம் எல்லாம், அற்றிப் பொறை முதலாந்**
**தாச வர்க்கஞ் செய்ய நலம் தந்தனையே - நேசத்தால்,**
**ஆதி காலந் தொடுத்து, என் அன்பு விடா நெஞ்சே, நன்**
**நீதியால் என் போல நில்**

[இதன் பொருள்]

**ஆசை வர்க்கம் எல்லாம், அற்றிப் பொறை முதலாந்**
**தாச வர்க்கஞ் செய்ய நலம் தந்தனையே**

ஆசை போல் அதற்கு இனமாயுள்ளவை எவையோ, அவை அனைத்தையும் ஒருங்கே ஒழித்துப் பொறுமை முதலாகிய தாச வர்க்கத்திற்கு இயைந்தவை களைச் செய்ய ஊர்த்த முகமாய நன்மையை எனக்குத் தந்தனையே.

**நேசத்தால், ஆதி காலந் தொடுத்து, என் அன்பு**
**விடா நெஞ்சே, நன் நீதியால், என் போல நில்**

உனக்கும் எனக்கு மிகுந்த நேசத்தினால் உலகந் தோன்றிய காலம் முதல் இது காறும் என்னிடத்தில் வைத்த அன்பு விடாமல் நிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமே! ஒழுங்கு அகலா மார்க்கம் எங்ஙனமோ, அவ்வண்ணம் என்னை ஒத்து நடு நிலையில் நில்.

**(பத சாரம்)** ஆசை வர்ககம் என்பன: இராக துவேஷம் முதலிய தீய குணங்களை. பொறை முதலாந் தாச வர்க்கம் என்பன: பொறுமை, அடக்கம், பிறர் பொருள் நயவாமை, சினமடக்கல், நடுநிலையில் நிற்றல், வஞ்சியாமை முதலிய நற்குணங்களை. தந்தனையே என்பதில் ஏகாரம் அசை. பகிர் முகத்ததாகச் சேரல் நினக்கு இயல்பாயினும் ஆங்காங்கே தீய நெறிக்கு இயைந் தவைகளை யான் மறுக்கினுஞ் சிற்சில காலத்தில் ஏற்றுக்கொண்டு நடந்தமை பற்றி 'என் அன்பு விடாநெஞ்சே' என்றார். நன் நீதியாவது இனிப் பிறவிக்கு இயையாத நெறி. வர்க்கம் எனல் கூட்டம். ஆதி காலம் எனல் பிரகிருதி தத்துவம் முதலாயவற்றை. கருத்து வெளிப்படை. (81)

**(அவ தாரிகை)**

ஊர்த்த முகம், அதோ முகம் என்னும் இரண்டு திசைக் கண்ணும் என் மனம் ஒத்து யானும் இருந்தேன் எனலை இக் கவி கூறுகின்றது.

**என் நெஞ்சம் ஊருலவ, யானும் அது போல் இருந்தே**
**இன்னஞ் சமம் ஆகா விட்டேனே - என் நெஞ்சே**
**என் போல் அசையாது இருக்க, அது போல் யானும்**
**பொன் போல் இருந்தேன் பொலிந்து**

[இதன் பொருள்]

**என் நெஞ்சம் ஊருலவ, யானும் அது போல் இருந்தே**
**இன்னஞ் சமம் ஆகா விட்டேனே**

தீர்க்க சொப்பன சகந் தோன்றியது முதல், இது காறும் என் மனம், ஊரில் உலாவ, யானும் அதன் இஷ்டப்படி இருந்து இன்னமும் சமத்துவ நிலையாகாது, அழிந்து விட்டனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் நெஞ்சே என் போல் அசையாது இருக்க அதுபோல்**
**யானும் பொன் போல் இருந்தேன் பொலிந்து**

இப்போது என் மனம், என்னைப் போல யானும் மாற்றுயர்ந்த பொன் எங்ஙனமோ, அது போல் இடைவிடாது பிரகாசித்து இருந்தனன்.

**(பத சாரம்)** யானும் அது போல் என்பதில், உள்ள உம்மை இழிவு சிறப்பு, யானும் பொன் போல் என்பதில், கண் உள்ள உம்மை உயர்வு சிறப்பு. விட்டேன் என்பதில் எகாரம் அவை. பரிபூரணமாக விளங்கல் விவேகத்தின் நிலைமை. அதற்குச் சலனத்துவம் உண்டாவதாகக் காண்டன். மனத்தின் நிலைமை. சலமும் அதன் அசைவும் போல் இருத்தலின், பேதம் எனக் கண்டாம். இங்ஙனமாய நிலையை, நீ இருந்து காண் என்பது கருத்து. (82)

**(அவ தாரிகை)**

உயர்வு, தாழ்வு என்னை அன்றி இன்மை எனலை இக் கவி கூறுகின்றது.

**எது வர வேண்டும், அது வருக, என்னை விடுத்தே**
**அது அகல வேண்டும், அஃது அகல்க - கோ தென்று**
**பிச்சையும் தள்ளேன், பிரம பதமும் வேண்டேன்,**
**எச் செயலும், நான் ஆனேன்**

[இதன் பொருள்]

**எது வர வேண்டும் அது வருக, என்னை விடுத்தே**
**அது அகல வேண்டும், அஃது அகல்க**

எனக்கு இம்மையிலே யாது வர வேண்டியதோ, அது வரக் கடவது. என்னை விட்டு எது, போகத் தகுந்ததோ, அது போகக் கடவது.

**கோ தென்று பிச்சையும் தள்ளேன், பிரம பதமும்**
**வேண்டேன், எச் செயலும், நான் ஆனேன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈனம் உடையது என்று பிச்சை எடுத்தலையும் தள்ள மாட்டேன். கெம்பீரம் உடையது என்று பிரம பதத்தையும் வேண்ட மாட்டேன். ஏனெனில் யாது கிர்த்தியமும், நான் ஆகியதால்.

**(பத சாரம்)** இன்பத் துன்பம் எனக் காட்ட இருவயினும் ஏது என்றார். பிச்சையும் பிரம பதமும் என்பவற்றில் உள்ளவை எண்ணும்மைகள். எச் செயலும் என்பதில் உள்ளது முற்றும்மை. ''அற்றால் அறவு அறிந்து உண்க. அஃது உடம்பு பெற்றன் நெடிதுய்க்குமாறு'' என்பதில் அஃது உடம்பு என்னும் பதத்தில் ஆய்தம் அலகு பெற்றாற் போல, இக் கவியிலும் அஃது அகல என்னும் பதத்தில் உள்ள ஆய்தம் அலகு பெறும் எனக் கருதி இங்ஙனம் கூறினார் என்க. எப் பொருளும் யானாய விடத்து அவ் அவற்றின் புடை பெயர்ச்சியும், யானாதற்கு ஐயம் உளதோ? இன்றாதலின் ஏற்கப் பாற்று. சகல உபாதிகளுஞ் சகல சேட்டை களும் என்னை அன்றி, இன்று என்பது கருத்து. (83)

**(அவ தாரிகை)**

அஞ்ஞான காலத்திலும், ஞான காலத்திலும், போகிப்பானும் போகிக்கப் படுபவனும், ஆராதிப்பானும் ஆராதிக்கப்படுபவனும், இவ் அனுபவிக்கும் இவனை அன்றி, வேறு இன்றெனலை இக் கவி கூறுகின்றது.

**எங்கே நான் போற்றுவது, என்னையே தேவதை என்**
**எங்கே தொழுவது, நான் என்னையே - எங்கே**
**இருந்து, கிடந்து, ஓடுவது, என்னிடத்தே நானே**
**அருந்துவதும், கொள்வானும் ஆம்.**

[இதன் பொருள்]

**எங்கே நான் போற்றுவது, என்னையே தேவதை என்**
**எங்கே தொழுவது, நான் என்னையே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதிடத்தில் இதை யான் தெய்வம் எனப் போற்றுவது எனின், என்னிடத்தில் என்னை எனவும், யாதிடத்தில் யாதை யான் தெய்வம் எனத் தொழுது, எனன் என்னிடத்தில், என்னை எனவும்.

**எங்கே இருந்து கிடந்து ஓடுவது, என்னிடத்தே, நானே**
**அருந்துவதும், கொள்வானும் ஆம்**

யாதிடத்தில், யான் நிற்றலும் கிடத்தலும் ஒடுதலும் எனின், என்னிடத்தில் எனவும், யாதிடத்தில் யான் சுகித்தலும் சுகிக்கப் படுவதும் எனின், என்னிடத்தில், யானே எனவுமாம்.

**(பத சாரம்)** போற்றல், துதித்தல், தொழுதல், வணங்கல், இருத்தல், நிற்றல், கிடத்தல், படுத்தல், அருந்துதலும் கொள்வானும் எனல், சகல புடை பெயர்ச்சியும் அவற்றின் செயற்படு பொருளும் யானே எனலை, ஸ்வயம் பிரகாச நாட்டம் அகலா இடத்து, இவ் வருத்தம் அனைத்தும் முரணாது அமையும். அந் நாட்டம் இழந்தார் எங்ஙனம் ஏற்பர். உடல் நாட்டத்தில் ஏலாமையும், உணர்வு நாட்டத்தில் ஏற்பதுவுமாய் இருத்தலின், இதனை வழுவெனத் தள்ளற்க. இவனே இத்தனையும் என்பது கருத்து. (84)

**(அவ தாரிகை)**

மகான்கள் தமது அனுபூதியில் பொருள், இடம், காலங்கட்கு இடம், தாமே எனவும், தம்மை இன்றி இல்லை எனவும் கொள்ளும் நிலையினை இக் கவி கூறுகின்றது.

**தன்னிடத்திலே தோற்றித் தன்னிடத்திலே இருந்து**
**தன்னிடத்தே கூடுஞ் சகத் எல்லாம் - தன்னை விட**
**வேறு அன்றனெக் காண்பர் அல்லால், இவ் வீடு பெற்றோர்**
**மாறென்று காண்பரோ மற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இதன் பொருள்]

**தன்னிடத்திலே தோற்றித், தன்னிடத்திலே இருந்து,**
**தன்னிடத்தே, கூடுஞ் சகத் எல்லாம்**

மகான்கள் தானாகிய சிதாகாயத்தினிடத்திற் தோற்றித், தன்னிடத்திலே இருந்து, தன்னிடத்திலே எகமாகக் கூடுஞ், சகத் அனைத்தும்.

**தன்னை விட, வேறு அன்றெனக் காண்பர் அல்லால்,**
**இவ் வீடு பெற்றோர், மாறென்று காண்பரோ மற்று**

தன்னைத் தவிர வேறல்ல எனக் காண்பார்களே அன்றி இங்ஙனமாய முத்தி நிலை அடைந்தவர்கள், பெயர்த்தும் தனக்கு வேறெனக் காண்பர்களோ! ஒரு போதும் காணார்.

**(பத சாரம்) பகிர் முகம், அந்தர் முகம் என இரண்டாம். பகிர் முகத்தது உலகம், அந்தர் முகத்தது அறிவு. அறிவும் உலகமும், சலமும் அலையும் போல்வது.** சல நாட்டம் உள்ளவிடத்து, அலை வேறாகக் காணுமா? அது போல அறிவு நாட்டம் உள்ள இடத்துச், சகத்து வேறாகக் காணுமா? காணாது ஆதலால், இவ் அனுபவம் பற்றி இங்ஙனம் கூறினார் என்க. இங்கே மற்றென்பது பின்னரும் எப்பொருள் தர நின்றது. என்னை? ''வினை மாற்றசை நிலை பிரிதெ மற்றே'' என்னும் இலக்கணத்தால் என்க. இக் கவியிலுள்ள ஏகாரம் மூன்றுந் தேற்றம். காண்பரோ என்பதில் ஓகாரங் காணான் என்னும் பொருள் தரலால், எதிர் மறை. சிதாகாயம் எனப் பொருள் கொள்ளா விடத்துத், தன்னிடத்திலே என்பன மூன்றும், மருளுக்கே இடமாதலால், மயக்கணி. சிதாகாயத்தை அனறித் திரிசியம் வேறின்று என்பது கருத்து. (85)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை)**

இவர்கள் யாதர்க்குங் கலங்கார் எனலை இக் கவி கூறுகின்றது.

**ஏதுக்கு ஆசைப் படுவார், எதுக்கு அகங்கரிப்பார்,**
**ஏதுக்கு மாச்சரியம் எய்துவார், எதுக்கும்**
**தாமே சராசரம் தாணுவா ஏழ்புவிக்கும்**
**மாமேரு ஒத்து வாழ்வார்**

[இதன் பொருள்]

**ஏதுக்கு ஆசைப் படுவார், எதுக்கு அகங்கரிப்பார்,**
**ஏதுக்கு மாச்சரியம் எய்துவார்**

இந்த மகான்கள், சிதாகாசமாகிற தன்னைத் தவிர, தினைத்துணையும் மாறாக வேறின்மையின் இவர்கள் எதற்காக ஆசைப்படுவார்கள்? எதற்காக அகங்கரிப்பார்கள்? எதற்காக கம்பீரமடைவார்கள்? ஏனெனில்,

**எதுக்கும் தாமே சராசரம் தாணுவா ஏழ் புவிக்கும்**
**மாமேரு ஒத்து வாழ்வார்**

சமஸ்கிருதத்திற்குந் தாமே சராசரமாகியும், இரு வகையா நின்றுள்ள சத்த பூமிகட்குந் தாமே ஆதாரமாகியும் நிற்றலால், எவற்றிற்கும் மேலாய மகா மேருவை ஒத்து, வாழ்வார் எனற்கு யாது முரண் இல்லை.

**(பத சாரம்)** சராசரம் என்பது: இயங்கு திணை நிலைத் திணையை. இரு வகை ஏழ் புவியாவன: அஞ்ஞான பூமி ஏழும், ஞான பூமி ஏழும் என்பவற்றை ''குணம் என்னுங் குன்றேறி நின்றார்'' என்று இருத்தலின், மாமேரு ஒத்து வாழ்வார் எனக் கூறினார். ஒத்து வாழ்வார் என்னும் பொருள் நோக்கால், சீர் பிரிக்கின் தளை கட்டும் ஆதலின், ஓசை நோக்கால் வாழ்வார் என்பதில், வார் எனப் பிரித்துச் சீர் கொள்க. அது வகை உளி செய்தல் என்னும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணத்தால் என்க. சுசாதிக முதலிய மூன்றும் கழன்றன என்பது கருத்து. (86)

**(அவ தாரிகை)**

யாது யாதாக மாறினும், தமக்குச் சலனம் இன்று என்பதை, இக் கவி கூறுகின்றது.

**மாதிக்கு மாறி, மதி கருகித், தீக் குளிர்ந்து இவ்**
**வாதித்தன், தெற்கு வடக்கு ஆனாலும் - சோதித்து**
**முன்னிலைமை ஆராய்ந்த முத்தலே, எஞ்ஞான்றும்**
**தன்னிலைமை குன்றாதவர்**

[இதன் பொருள்]

**மாதிக்கு மாறி, மதி கருகித், தீக் குளிர்ந்து, இவ்**
**(ஆ) வாதித்தன், தெற்கு வடக்கு ஆனாலும்**

ஓர் திக்கு இருக்கும் இடத்து, மற்றோர் திக்கு வந்து, மாறிச் சந்திரன் உட்டணத்தால் கருகி அக்கினி சீதள தர்மத்தை அடைந்து, இந்தச் சூரியன் கிழக்கு மேற்கு விட்டுத், தெற்கு வடக்காக உதய அத்தமனமாகி நிற்கினும்,

**சோதித்து, முன்னிலைமை ஆராய்ந்த, முத்தலே**
**எஞ்ஞான்றும், தன்னிலைமை குன்றாதவர்**

சுருதி யுக்திகளால் ஆராய்ச்சி செய்து, பூருவமாய் இருந்த, தமது நிலையினை அனுபவத்தால் ஆராய்ந்து தெளிந்த சீவன் முத்தர் எனப் படுபவரே, எந்தக் காலத்துந், தன்னிலைமையின் நின்று மாறாதவர்கள்.

**(பத சாரம்)** மாறும் தன்மையது கூறியதால், மாறாத் தன்மை அதையும் கூறினார் என்க. யாது மாறினும் சிதாகாயத்திற்கு இன்மையின், சீவன் முத்தரைச் சிதாகாயம் எனக் கொள்க. பூதாகாயத்திற்கு முன் பின் இடை எக்காலமும் எனக் கற்பித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினும், அஃது ஏற்கில், சிதாகாயமும் ஏற்கும் என்பம். அங்ஙனம் இன்றே. ஆதலின் இவ் உவமை பொருந்தும் என்க. ஓராகாயமே சடத் தன்மையாய் இடத்துப் பூதாகாயம் எனவும், சித்துத் தன்மையாய விடத்துச் சிதாகாயம் எனவுங், கோடற்கு இயையினுந் தான் அவை இரண்டும், அன்மையின் இது போல்வாரைக் குன்றாதவர் என்றார். சதாகாயமாய நிற்றலின் இவர்கட்குச் சலனம் இன்றென்பது கருத்து. (87)

**(அவ தாரிகை) இதுவுமது**

**பிச்சை முதலாப் பிரம பதம் ஈறாக**
**இச்சை வரினும் அசைந்தாலும் - சொச்ச**
**நலங்காதார், தாம் அதுவா நாடாதார், சித்தம்**
**கலங்காதாரே ஞானி காண்**

[இதன் பொருள்]

**பிச்சை முதலாப் பிரமபதம் ஈறாக**
**இச்சை வரினும் அசைந்தாலும்**

பிச்சை எடுத்ததன் முதற் பிரமபதம் எய்தல் இறுதியாய் இவற்றில் இச்சை வரினும் வந்த வண்ணம் கைகூடினும்.

**சொச்ச நலங்காதார், தாம் அதுவா நாடாதார்**
**சித்தம் கலங்காதாரே, ஞானி காண்**

தமது ஸ்வயம்பான் நிலையில் உறுதி கெடாதவர்கள், தாம் அது அதுவாக ஆகாதவர்கள், சித்தம் சிறிதும் பேதியாதவர்கள் யாவரோ, அவர்களே ஞானிகள் எனப்படுபவர்கள்.

**(பத சாரம்)** காண் அசை. சிறுமை பெருமையேனும் அதததற்குரிய பலப் பிராப்தியேனும் இனையதென அறியாதவர்கள் ஆதலின், இவர்களை ஞானிகள் என்றார். இவர்களுக்கு மேலும் கீழுமாய நிலை. சூரியப் பிரதி பிம்பம் அலைகளான் மேலும் கீழுமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டல் போலும். வரினும், இசைந்தாலும் என்பவற்றிலுள்ள உம்மை ஐயத்திற் கியைந்த எண்ணும்மை கலங்காதாரே என்ப திலுள்ள ஏகாரம், மற்றைய நல்லரெனக் காட்ட நிற்றலின், பிரிநிலை எனினும் அமையும். (88)

**(அவ தாரிகை) இதுவுமது**

**வந்தித்து உரைப்பார் வழிபடினும், வன் கணார்**
**நிந்தித்து உரைத்தாலும், நெஞ்சுறார் - சிந்தையற்று**
**மேகாடவி வரினும் வெய்யோனும் உதித்தாலும்**
**ஆகாயம் போல்வார் அவர்**

**[இதன் பொருள்]**

**வந்தித்து உரைப்பார் வழிபடினும், வன் கணார்**
**நிந்தித்து உரைத்தாலும் நெஞ்சுறார்**

மிகுந்த வணக்கத்தோடு துதிப்பவர்கள் தொண்டு செய்யினுங், கொடூரமான பாவிகள் மிகவும் நிந்தனையாகக் தூஷிக்கினும், சற்றும் மனத்தில் வையார்.

**சிந்தையற்று மேகாடவி வரினும் வெய்யோனும்**
**உதித்தாலும் ஆகாயம் போல்வார் அவர்**

சிந்தை என்பது சிறிதும் இன்றிச், சத்த மேகங்களும் ஒருங்கே ஆரணியம் போல் வரினும், சூரியர்கள் ஆரணியம் போல் ஒருங்கே உதிக்கினும், மகத்தான ஆகாயம் போலப் பேதியாது நிற்பவர்கள், யாவரோ, அவர்களே ஞானவான்கள்.

**(பத சாரம்)** இக் கவியிலுள்ள நான்கு உம்மைகளும் எண்ணும்மைகள். யாது பற்றினுந் தனக்கு இன்மையின், ஆகாயம் போல்வார். அவர் என்றார். சிந்தை அற்று, ஆகாயம் போல்வாரென முடிக்க. கருத்து வெளிப்படை. (89)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை) இதுவுமது**

**எந்தெந்த அப் போகம் எதிராகும், அவ்வளவுக்கு**
**அந்தந்தப் போகம் அனுசரிப்பார் - பந்தம் அற்று**
**நீதித் தனி நிலையே நிற்பர், கிரணம் பரவு**
**ஆதித்தன் போலே அவர்**

[இதன் பொருள்]

**எந்தெந்த அப் போகம் எதிராகும் அவ்வளவுக்கு**
**அந்தந்தப் போகம் அனுசரிப்பார்**

எந்தெந்தப் போகந் தாம் அனுபவிக்க நேரிட்டதோ, அந்த அந்த அளவிற்கு, அந்த அந்தப் போகத்தை நுகர எண்ணுவார்கள்.

**பந்தம் அற்று, நீதித் தனி நிலையே நிற்பர்**
**கிரணம் பரவு ஆதித்தன் போலே, அவர்**

இரு வகைப் பற்றையும் ஒருங்கே அகற்றி நெறிப்படித் தானே தானாகிற நிலையில், கலக்கம் இன்றி நிற்பார்கள். தனது கிரணங் களால் வியாபித்து நிற்கும் சூரியன் எங்ஙனமோ, அது போல அந்த சீவன் முத்தர்கள்

சவுங் குறையவும், போகா எனற்கு அவ்வளவுக்கு எனவும், வலிந்து செல்லார் எனற்கு, எதிராகும் எனலும், ஊழால் எனற்கு, எந்தெந்தப் போகம் எனவும், அறிவு, அறியாமைக்கு இடை நிலை ஏகாந்தம் எனற்குத் தனி நிலையே எனவும், அதனைச் செல்லுமாறு அறிந்து செல்ல வேண்டும், ஆதலின் நீதி எனவும், தமது அனுபவமாய நிலைகள் நவநவமாகப் பற்பல ஆயினுந், தனது கிரணங்கள் பல திசைக் கண்ணும் பலவாறாக நின்று வீசினுந், தான் அவை ஆகாத சூரியனைப் போல், அதன் கிரணம் பரவும் ஆதித்தன் போலே, எனவுங் கூறியவாறு காண்க. பொதுமையின் நிற்றலின், எந்தெந்தப் போகம் அந்தந்தப் போகம் என வினாவுஞ் சுட்டும் அவ்வாறாக வந்தமை காண்க. இங்கே போகம் எனல் சுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கங்களை தனி நிலையே என்பதில், ஏகாரம் தேற்றம். போலே என்பதில்? ஏகாரம் அசை நிலை. கருத்து வெளிப்படை. (90)

**(அவ தாரிகை)**

காமக் குரோதாதிகள், கணப் போதாயினும், இவர்கள் சித்தத்தைக் கலக்குமோ எனற்கு இக் கவியில் உத்தரங் கூறுகின்றது.

**சித்து உருவமாகிச் செக சாட்சி தாமான**
**முத்தரைக் காமாதி முனியாவே - சித்தத்தில்**
**இலிங்கற்ப வாசனைகள் எல்லாம், எடுத்து அருந்திச்**
**சங்கற்பம் இல்லாத தால்**

[இதன் பொருள்]

**சித்து உருவமாகிச் செக சாட்சி தாமான**
**முத்தரைக் காமாதி முனியாவே**

சிற் பிரகாச வடிவமே தாமாகியும், சகத்திற்குச் சாட்சி தாமாகியும் விளங்குகின்ற, சீவன் முத்தர்களைக், காமக் குரோதாதிகள் வதைக்காவாம். ஏனெனில்,

**சித்தத்தில், இலிங்கற்ப வாசனைகள் எல்லாம்**
**எடுத்து அருந்திச், சங்கற்பம் இல்லாத தால்**

இவர்கள் தமது சித்தத்திற் பிறவி தரற்கு இயைந்த வாசனைகள் எத்தனை கோடிகளோ அவை அனைத்தையும் ஒருங்கே எடுத்து உண்டு, தான் மாத்திரமாய் நிற்கும் இடத்துச், சங்கற்பம் எனல் அவர்கட்கு அது, சிறிதும் இல்லாததால்.

**(பத சாரம்)** அயலாகாது, உலகந் தாமாக விளங்கலின், நனவு, நினைவு, கனவு, சுழுத்தி, துரியம், துரியாதீதம், மூர்ச்சை, மரண முதலிய அவத்தைகளும், அவ் அவற்றிற்கு உரிய காட்சிகளும், அபிமானங்களும் இவர்களுக்கு, எங்ஙனம் உண்டாம்? இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிச் சங்கற்பம் இல்லாததார் என்றார். முனியாவே என்பதில், ஏகாரம் அவை. அருந்தி எனல் இலக்கணை. சங்கற்ப நாசம் எய்தியதால் என்பது கருத்து. (91)

**(அவ தாரிகை) இதுவுமது**

**எங்கும் பொதுவாய் இருக்கும், ஒரு சீவன் முத்தர்**
**தங்கும் இடந் தானே, தல வாசம், அங்கு அவர்கள்**
**பார்வையே தீர்த்தம், அவர் பாதார விந்த மலர்ச்**
**சேவையே, சாயுச் சியம்**

[இதன் பொருள்]

**எங்கும் பொதுவாய் இருக்கும், ஒரு சீவன் முத்தர்**
**தங்கும் இடந் தானே, தல வாசம்**

எங்கணும், யாவர்க்கும் பொதுவாக இருக்கின்ற ஒப்பற்ற சீவன் முத்தர்கள், இருக்கும் இடம் யாதோ, அதுவே தலவாசம் எனப்படுவதாம்.

**அங்கு அவர்கள் பார்வையே தீர்த்தம், அவர் பாதார**
**விந்த மலர்ச் சேவையே சாயுச் சியம்**

அங்ஙனமா நின்றுள்ள, அந்த மகான்களது திருஷ்டியே தீர்த்தமாம். அவர்களது திருவடிகளாகிற தாமரைப் புஷ்பங்களைச் சேவிக்குஞ் சேவையே, சாயுச்சிய பலனாம்.

**(பத சாரம்)** இடம் தல வாசம், பார்வை தீர்த்தம், பாத சேவை சாயுச்சியம். இவை மூன்றும் உருவகம். இடந் தானே, பார்வையே, சேவையே என்பதிலுள்ள ஏகாரங்கள் தேற்றம். தலவாசம், தீர்த்தம், சாயுச்சியம் என்பன மகான்களைப் பற்றி எய்தும் என்பது கருத்து. (92)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அவ தாரிகை)

ஞானிகள் செயல் இஃது என இக் கவி கூறுகின்றது.

**மெத்தென்ற சொல்லும், விருப்பம் அற்ற நோக்கும், எலாஞ்**
**சத் தென்ற, நெஞ்சுந் தளர் நடையும் - சித்தத்து**
**அடங்கா மகிழ்வு, மன வரதம் பெற்ற**
**திடந் தானே, ஞானி செயல்.**

[இதன் பொருள்]

**மெத்தென்ற சொல்லும், விருப்பம் அற்ற நோக்கும், எலாஞ்**
**சத் தென்ற நெஞ்சுந், தளர் நடையும்**

கடினமில்லாத சொல்லும், விருப்பம் இல்லாத பார்வையும், சமஸ்தத்தையும், உண்மை வடிவமாகக் கருதும் மனமும், சோர்வுற்ற நடையும்.

**சித்தத்து அடங்கா மகிழ்வு, மன வரதம் பெற்ற**
**திடந் தானே, ஞானி செயல்**

அடக்க அடங்காத உள்ளக் களிப்புஞ் சதா காலமும் ஐயந் திரிபின்றிப் பெற்ற கலங்காத நிலையே ஞானிகள் இயற்றுஞ் செயல்.

**(பத சாரம்)** சிதாகாயத்தை அன்றி, வேறு இன்மையின் விருப்பம் அற்ற நோக்கு எனவும், ரூபா ரூபங்களைக் கரைத்து, அனைத்தை யுஞ் சிற் பிரகாசமாகக் காண்டலின், எல்லாஞ் சத்தென்ற நெஞ்சு எனவும் யாது சார்பு இன்மையின், தளர் நடை எனவும், சுருதி யுக்தியால் அல்லாமல் ஆசிரியன் அருணோகல் எய்தலின், சித்தத் அடங்கா மகிழ்வு எனவும், அறிவு அறியாமை இடை நிற்கும், திர ஞானமே தீர்வெனக் காண்டலின், அன வரதம் பெற்ற திடந்தால் எனவும், கூறியவாறு காண்க. கருத்து வெளிப்படை (93)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை)**

மகான்களது சிந்தை இனையதென இக் கவி கூறுகின்றது.

**எல்லா இடத்து எமைக் கண்டோம், எம் இடத்தில்**
**எல்லாமுங் கண்டோம் என்று, ஏகமாக் - கல்லாமை**
**கற்ற அனுபூதி கைகண்டார், மற்றேது**
**மற்றார் சீவன் முத்தராம்**

[இதன் பொருள்]

**எல்லா இடத்து எமைக் கண்டோம், எம் இடத்தில்**
**எல்லாமுங் கண்டோம் என்று**

சிதாகாசமே, யாமாதலின் எல்லா உலகின் கண்ணும், எமது எதார்த்த வடிவினைக் கண்டனம். அங்ஙனம் கண்டபடி, எம் இடத்திலுஞ் சமஸ்த உலகங்களையும் கண்டனம் என்று, ஐய மறத் தெளிந்து.

**ஏகமாக் - கல்லாமை கற்ற, அனுபூதி கைகண்டார்**
**மற்றேது மற்றார், சீவன் முத்தராம்**

அபேதமாகப் படியாது, படித்த அனுபூதி நிலையை உள்ளங்கை நெல்லிக்கனி போற் பிரத்தியட்சமாகக் கண்ட மகான்கள் யாவரோ, அவரே சொல்லில் அடங்காத பந்தங்கள், சிறிதும் இன்றிக் கழன்றவராகிய, சீவன் முத்தர் எனற்கு, இயைந்தவராவர்.

**(பத சாரம்)** சிதாகாசமே, சக சீவ பரமாகப் பரிணமித்து எனற்குப், பிரத்தியட்சா அனுபவம் இல்லா இடத்து முரண் எய்தும் ஆதலின், அனுபூதி கைக் கண்டார் என்றார். கல்லாமை கற்றல் ஞானாசிரியரது கடை நோக்குக்கு, எதிர் காத்தலை. அனுபூதி கண்டார் என்னாது, கை கண்டார் என, மிகைபடக் கூறலால், ஞான கதப் பிரத்தியட்சம் என்றாம். ஏகமாதல், ஞெப்தியே பிரியமாதலை. எல்லா இடத்தும், எம்மைக் காண்டல், பார்ப்பானைப் பார்த்தலும், எம் இடத்தில், எல்லாமும் காண்டல் அங்ஙனம் பார்ப்பானை அன்றித், தினைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையும் வேறு இல்லாமையாம். இங்ஙனமாய சிந்தை என்பது கருத்து. எல்லா இடத்தும், எல்லாமும் என்பவற்றின், உம்மை முற்றும்மை. (94)

(அவ தாரிகை)

இவர்கட்கு விதி விலக்கு இனையவென, இக் கவி கூறுகின்றது.

**தான் எனாகி, உப சாந்தனாய், நின் மலனாய்**
**வானே முதற் தன் வடிவாகும் - ஞானி**
**விடுத்த தொழில் எல்லாம், விலக்காகும், அன்னோன்**
**அடுத்த தொழில், ஆசார மாம்.**

[இதன் பொருள்]

**தான் எனாகி, உப சாந்தனாய், நின் மலனாய்,**
**வானே முதற், தன் வடிவாகும்**

தான் இரண்டு படாமல் ஏகமாகியும், அந் நிலையில் நிற்றலால், உப சாந்தனாகியும், அந் நிலைக்கு மாறாகத், தான் மல ரகிதனாகியும், ஆகாயத்தையே முதற் காரணமாய் உள்ள, ஏனைய நான்கு பூத வடிவமாகியும், விளங்குபவன் யாவனோ.

**ஞானி விடுத்த தொழில் எல்லாம், விலக்காகும்**
**அன்னோன் அடுத்த தொழில், ஆசார மாம்**

அவனே ஞானி எனப்படுபவன். அங்ஙனமாய மகான் அவனாற் களையப்பட்ட சேட்டைகள் அனைத்தும் விலக்கு மார்க்கமாம். அவன் அங்கீகரித்த தொழில் அனைத்தும் ஆசார நிலைக்கு எய்தலின் விதி மார்க்கமாம்.

**(பத சாரம்)** அறிவை அன்றி, அறியாமை வேறின்மையின், தானே சகத் எனக் காட்டத், தான் ஏகனாகி எனவும் ஏகமாய வித் எய்துவது, கலக நிவிர்த்தி. ஆதலால் உப சாந்தனா எனவும், கலகம் அற்ற விடத்துக், காம வெகுளி மயக்கம் இன்மையின், நின்மலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், பூத பௌதிகங்கள் அறியாமையை அன்றி இன்மை யினாலும், அவ் அறியாமை, அறிவை அன்றி இன்மையினானும், அவ் அறிவு, தான் எனலை அன்றி, இன்மையினானும், வானே முதற் தன் வடிவாகும் எனவும், காமக் குரோதாதிகள், இயங்கும் புடை பெயர்ச்சிக்கு இவன் மறாதலின், விலக்காகும் எனவும் அவற்றிற்கு எதிருத்தமான பொறுமை, அடக்கம், நடுநிலை நிற்றல், சினம் அடங்கல், பிறர் பொருள் நயவாமை முதலிய நெறிகட்கு இயைந்த, புடை பெயர்ச்சிக் கண் சேறலின், இவர்களது ஆசாரத்தை, விதியாம் எனவும் கொள்ளக் கிடந்தமை காண்க. விதி மார்க்கம், விலக்கு மார்க்கம் இங்ஙனமாயது என, வெளிப்படுத்தியது என்பது கருத்து. வானே முதல் என்றதனால், ஏனைய பூதங்களுக்குத், தான் முதற் காரணம் எனவும், வானாதியாகவெனவும் பொருள் படுமாறு காண்க. அஞ்ஞான காலத்தில் இயைதலின் தன் வடிவாகும் என்றார். விடுத்த தொழில் விலக்கு, அடுத்த தொழில் ஆசாரம் ஆதலின், இருவயினும் ஆக்க வினை கொடுத்து முடித்தார். அன்னோன என்பது முற்கூறிய குணத்தைக் காட்டச் சுட்டி நிற்றலின் சுட்டுப் பெயர் என்க. (95)

**(அவ தாரிகை)**

ஞானிக்கு நீராடலும், சதாசாரமும் பூசையும் சுத்த சமாதியும் இனைய என இக் கவி கூறுகின்றது.

**ஞான அனு சந்தான ஞானிக்கு, நீராடல்**
**தான் உகந்த கோலஞ், சதா ஆசாரம் - மானமற**
**வாங்கிப் புசிப்பதுவே மா பூசை, சஞ்சாரம்**
**தீங்கற்ற சுத்தமா தீ**

[இதன் பொருள்]

**ஞான அனு சந்தான ஞானிக்கு நீராடல்**
**தான், உகந்த கோலஞ் சதா ஆசாரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானானுட்டானத்தில் நிற்றலே, ஞானிக்கு நீராடலும், தன் எண்ணத்தின்படி விரும்பிய வேடம் ஆதலே, நித்தியாசாரமும்.

**மானமற வாங்கிப் புசிப்பதுவே, மா**
**பூசை, சஞ்சாரம் தீங்கற்ற சுத்தமா தீ**

பிச்சை இடுவதை மானம் இன்றி வாங்கிப் புசிப்பதுவே, மகா பூசையும், ஓர் கணமும் ஓரிடத்தில் நில்லாமல், தேச சஞ்சாரம் செய்வதே, குற்றமற்ற சுத்த சமாதியுமாம்.

**(பத சாரம்)** ஞானானு சந்தானமாவது, அயலாகக் காண்பவற்றை எல்லாம், தனது ஞானாக்கினியால் எரித்து, நீறாக்குதல் எனவும், தான் உகந்த கோலமாவது, பிறவி தோறும் ஊடல் வெவ்வேறாகத், தான் அதுவாகி மயங்கி நின்றதைச் சோதிக்கும் படி, பலவித விகற்ப வடிவ பேதமாகி, அது அதுவாக மயங்கி, நிற்றல் போற் காண்டல் எனவும், மானமின்றி வாங்கிப் புசித்தலாவது, எப் பிறவியின் கண்ணும், ஆன்மாவிற்கு உணவு பிறவி பற்றி, நியமம் அன்றாகலின், யாது கிடைக்கினும் வாங்கிப் புசித்தல் எனவும், சஞ்சாரமாவது யாதோர் காலமும் தேசமும் வஸ்துவுங், கண்ணாடியின் சாயை போல், ஆன்மாவிற்கு இயல்பன்று ஆகலின், அதனைச் சோதிக்க வேண்டித் திரிதல் எனவும், பொருள் கொள்க. ஞானானு சந்தானம் நீராடல் எனவும், தான் உகந்த கோலம் சதா ஆசாரம் எனவும், வாங்கிப் புசித்தல் மா பூசை எனவும், சஞ்சாரம் சுத்த சமாதி எனவும் கூறியது உருவக அலங்காரம். புசிப்பதுவே என்பதிலுள்ள ஏகாரத்தை, அனுசந்தான முதலியவற்றிற்குங் கொள்க. அது தேற்றம் ஆதலின், அவை இவை எனக் கூறியது, என்பது கருத்து. (96)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(அவ தாரிகை)**

தன்னை அன்றிக், கொள்ளுவதும் தள்ளுவதும் இன்றெனலை, இக் கவி கூறுகின்றது.

**அண்டம் எலாந் தானாய், அறிவு வடிவாகக்**
**கண்ட பரானந்த சிவா காரருக்குத் - தண்டித்துத்**
**தள்ளும் பொருள் ஏது, தள்ளா விதி வழியே**
**கொள்ளும் பொருள், இதுவாகும்.**

[இதன் பொருள்]

**அண்டம் எலாந் தானாய், அறிவு வடிவாகக்**
**கண்ட, பரானந்த சிவா காரருக்கு**

சகல அண்டங்களுந் தானாகவும், ஞானப் பிரகாசமாகவும் பிரத்தியட்சமாகக் கண்ட ஞானாந்தங் கடந்துள்ள சிவமே தானாக நின்று விளங்கும் மகான்களுக்கு.

**தண்டித்துத், தள்ளும் பொருள் ஏது, தள்ளா,**
**விதி வழியே கொள்ளும் பொருள் இதுவாகும்**

கலா சோதனைகளால், இது தானல்ல என்று தீர்ப்புச் செய்து, தள்ளத் தக்க பொருள் யாது? அங்ஙனமாய சோதனையாற் தள்ளப்படாமல், நெறி முறையே நின்று, கொள்ளத் தக்க பொருள் யாது? இருந்தால் அன்றோ அஃது, இஃது எனச் சொல்லத் தகுவதாகும்?

**(பத சாரம்)** சகல அண்ட பிண்டங்களும், பூதாகாயத்தை அன்றி இருக்கின், அப் பூதாகாயமுஞ், சிதாகாயத்தை அன்றி இருக்கலாம். இல்லாது இருக்கத், தண்டித்துத் தள்ளும் பொருளுந், தள்ளா விதி வழியே கொள்ளும் பொருளும், யாதென அறிஞனாற் கணிக்கப் படக் கூடாமையின் இங்ஙனம் கூறினார் என்பது கருத்து. பல ஆனந்தம் பரானந்த மென்றாயதும், சிவ ஆகாரம் சிவாகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாயதுந் தீர்க்க சந்தியால் என்க. அவற்றிற்கு வேறன்றாகலின் பிண்டம் எலாம் எனலைக் கூறாது ஒழிந்தனர். (97)

**(அவ தாரிகை)**

**மகான்களைத் தூஷிப்பவர்க் கெய்துங் கதி**, இனையது என இக்கவி கூறுகின்றது.

**பெற்ற பேர், இன்பப் பெரியோர் சரித்திரத்தைக்,**
**குற்றம் என நாடுங் கொடியோர்கள் - பற்றாக்**
**கோசாகாரப் புழுப் போற், கோடானு கோடி சென்ம,**
**மா சார்வ ரென்றே மதி**

[இதன் பொருள்]

**பெற்ற பேர், இன்பப் பெரியோர் சரித்திரத்தைக்,**
**குற்றம் என நாடுங் கொடியோர்கள்**

தாம் அரிதில் அடைந்த பேரின்ப வடிவா நின்றுள்ள மகான்களது சரித்திரத்தைக் குற்றம் என்று நாடுகின்ற கொடிய பாதகர்கள்.

**பற்றாக் கோசாகாரப் புழுப் போற், கோடானு**
**கோடி சென்ம மா சார்வ ரென்றே மதி**

தினைத் துணையேனும் பந்தம் நீங்காத கோசாகாரப் புழு எங்ஙனம் வதையுமோ, அது போல கோடானு கோடி சென்மமாக நின்று, மாபூதி நரகத்தையே சார்வார்கள் என்று, நீ துணிந்து அச் சேட்டை களை விட்டு விடு.

**(பத சாரம்)** வெயிற் காலத்தில், அழல் போல் எரிக்கும் மணலின் கண் அகப் பட்டு, வதைந்து நெளிவது புழு ஆதலால், அது போல மாபூதி நரகத்தில், வதை வார்கள் என்பது கருத்து. கால வரையறை இன்மையின், ஒரு சார் கோடானு கோடி என்றார். சென்மமா என்றது, அளவில்லாத சென்மம் எடுத்தெடுத்து எனலை. என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில், எகாரம் தேற்றம் எனினும் அமையும். மாபூதி நரகம் எனல், இசை எச்சம் குற்றம் என நாடுதல் அறியாமையினால் ஏனும், பொறமையினால் ஏனும், எனக் கொள்க. (98)

**(அவ தாரிகை)**

மகான்களைப் போல, ஆகுந் திறத்தினர்க்கு இணையர் என இக்கவி கூறுகின்றது.

**நித்த நிரகார, நின்மல ஆனந்த மய**
**சுத்த பரி பூரண சொரூப - அத்துவிதம்**
**எல்லாமுந் தாமாய் இருப்பார், கருணை பெற**
**வல்லார், அவராகு வார்**

[இதன் பொருள்]

**நித்த நிரகார, நின்மல ஆனந்த மய**
**சுத்த பரி பூரண சொரூப - அத்துவிதம்**
**எல்லாமுந் தாமாய் இருப்பார்**

பூரண சொரூபமாகியும், அத்துவிதமாகியும், சமஸ்தமும் தாமாகியும் இருக்கின்ற மகான்களுடைய

**கருணை பெற வல்லார், அவராகுவார்**

கிருபா நோக்கத்தைப் பெறும்படி பரிபாகம் உடையவர், யாவரோ அவர்களே, அந்தச் சீவன் முக்தர்கள்.

**(பத சாரம்) அழிவின்றி என்றும், ஒரு தகைத்தாகி நிற்றலின் நித்தியம் எனவும், அத்துவாகாரம் ஆகாமையின் நிராகாரம் எனவும், மல ரகிதமாதலின் நின்மலம் எனவும், துக்க மயமின்மை யின் ஆனந்த மயம் எனவும், ஆகாயம் போற் களங்க ரகிதமாதலின் சுத்தம் எனவும் அபரிச் சின்னமாதலின் பரிபூரணம் எனவும், அறிவறியாமை என, இரண்டற்று விளங்கலின் அத்துவிதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், சமஸ்தமுந் தன்மயமாக விளங்கலின், எல்லாமுந் தாமாய் எனவும் கூறியவாறு காண்க. மகான்களது கருணை இயைந் தவர்கள், சிவன் முத்தராவர்கள் என்பது கருத்து. வல்லார் என்பது, குறிப்பு வினையாலணையும் பெயர். எல்லாமும் என்பதில் உம்மை முற்றும்மை. (99)

(அவ தாரிகை)

மகான்கள் ஞானாஞ்ஞானத் தடை அற்றனர் எனலை, இக் கவி கூறுகின்றது.

**உள்ளம் அற்றார், உள்ளத்து உறு பொருளற்றார், உள்ளக்**
**கள்ளம் அற்றார், ஞானக் கரை அற்றார் - தென் அமுதச்**
**சிற்பரமும் அற்றார், சிவானுபவந் தானும் அறார்**
**கற்பனையும் அற்றார்கள் காண்.**

[இதன் பொருள்]

**உள்ளம் அற்றார், உள்ளத்து உறு பொருளற்றார், உள்ளக்**
**கள்ளம் அற்றார், ஞானக் கரை அற்றார்**

உள்ளம் என்பதே சிறிதும் இன்றிக் கழன்றனர். அந்த உள்ளத்திற் தங்கிய யாது பொருளையும் கழன்றனர். அந்த உள்ளத்தின் கண், முன்னர் வாசனையாய் உள்ள, கள்ள நேயமுங் கழன்றனர். ஞானத்திற்குக் கரையாயுள்ள, அதீதத்தையும் கழன்றனர்.

**தென் அமுதச் சிற்பரமும் அற்றார், சிவானுபவந்**
**தானும் அற்றார், கற்பனையும் அற்றார்கள் காண்**

தெளிவான அமுதத்தை ஒத்த சிற்பர நிலையினையுங் கழன்றனர். சிவானுபவம் எனல் யாதோ, அதனையும் கண்டு கழன்றனர். கற்பனை எனப் படுபவை யாவையோ அதனையும் ஒக்கக் கழன்றனர். இத்தகையினரே சீவன் முத்தர்களாவார்கள் என நீ அனுபவித்துக் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(பத சாரம்)** உள்ளத்து உறு பொருளாவது பற்பலவாக நிச்சயித்துத் தேர்ந்த பொருளை எனவும், சிற்பரமாவது சுசாதி ஆதி அற்ற ஞானமா நிற்பது எனவும், சிவானுபவமாவது தடையில்லா ஆனந்தா அனுபவத்தை எனவும், கொள்ளக் கிடந்தமை காண்க. காணென்பது முன்னிலை ஏவலொருமை ஆதலின், அனுபவித்துக் காண் என்றாம். கூறி இருப்பவற்றைக் கொண்டு கூறாதவற்றிற்கும் உம்மைகள் கொடுத்துப் பொருள் கொள்க. மகான்கள் சிதாகாசமாக மிஞ்சி நிற்கின்றனர் என்பது கருத்து. (100)

**(அவ தாரிகை)**

இந்நூல் மகிமை இனை இது என இக் கவி கூறுகின்றது.

**பருவ சாரத்தாற், பலிக்கும் அனுபூதிச்,**
**சொருப சாரத்தின் சுவையை - இரு செவியால்**
**உண்டு இருக்க வல்லார், உலகம் எலாந் தாமாகக்**
**கண்டிருக்க, வல்லார்கள் காண். (101)**

[இதன் பொருள்]

**பருவ சாரத்தாற், பலிக்கும் அனு**
**பூதிச் சொருப சாரத்தின் சுவையை,**

தக்க பருவம் யாதோ, அஃதெய்திய இடத்து ஸ்வானுபூதி நிலை தடையின்றி வாய்க்கும். அங்ஙனம் இருக்க, இந் நூலாகிய சொரூப சாரத்தினது மதுர நிலையை.

**இரு செவியால், உண்டு இருக்க வல்லார்,**
**உலகம் எலாந், தாமாகக் கண்டிருக்க வல்லார்கள் காண்**

முன்னர் அனந்த சென்மத்தில் இயற்றிய நிட்காமிய தவம் காரண மாகத், துறைப்பணஞ் செய்து இருத்தலின், இரண்டு செவியாலும ஐயமறக் கேட்டு ஸ்வானுபூதிப் பிரத்தியட்சத்தால், உண்டிருக்க வல்லார் யாவரோ, அவரே சமஸ்த உலகமும். தமது ஞான ஸ்வரூப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவெனக் கண்டு, அமைதி பெற்றிருக்க வல்லவராவர். இதனை அனுபவித்து நீயே காண்.

**(பத சாரம்)** காண் என்பது அசை எனினும் அமையும். பருவ சாரம் எனல் ஞானமே தான் ஆதலுக்குத் தவம் இயற்றி முடிந்த பருவம் எனவும், சுவை எனல் மருளும் தெருளும் இல்லா மதுரத்தை எனவும் பொருள் தரக் கிடந்தமை காண்க. ''கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற் கேட்கப்படாத செவி'' என்று இருப்பதால் இரு செவியால் உண்டிருக்க வல்லார் என்றார். இந் நூன் முடிபு இஃதாதலின் இதனது மகிமை இனையதெனக் கூறியது என்பது கருத்து.

**சொரூப சாரம்**

**முற்றிற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிராம்சமே நாம்

தத்துவ ஞான தீபிகையில் உள்ள

# இதோபதேசம்

(தாளையான் ஆத்மார்த்த அந்தரங்கக் கூட்டத்தவர்)

ஸ்ரீ சி. அருணாசலம் சுவாமி அவர்களின் வேண்டுகோளின்படி
சாதுக்களுக்குக் கொடுக்கவேண்டி பிரசுரிக்கப்பட்டது.

மறு பதிப்பு: ஸ்ரீ சிவகுருநாத குருபீட அறக் கட்டளை

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்துவ ஞான தீபிகை
## இதோ உபதேசம்

உலகம் உயிர்கள் பரமாயும்
ஒன்றுந் தொடர்பின்றியும் என்றுங்
குலவு பெருமான் எவ் அருளாற்
குறைகள் அகற்றிக் கதி அளிக்க
நிலவு குரவனய் எனையும்
தேடி ஆள விரைந்து அருளும்
இலகும் அவ் அருளே எனது அக நின்று
இதோப தேசம் உரைத்திடுமால் (1)

குறிப்பு: இதம் - நன்மை. இதோபதேசம் (இத + உபதேசம்) - நற் போதனை குலவுதல் - பிரகாசித்தல், என்றுங் குலவு பெருமாள் - எப்பொழுதும் இன்புடன் பிரகாசிக்கின்ற கடவுள்.

உடல அவத்தை அபிமானி
இவ் ஒன்றொரு மூன்றாம் அவை தாம்
இடம் அதாகும் நினக்கு, என்றும்
இயல்பா வேறாய் இருத்தலினால்
சடம் அதாகும், அவற்றினுக்குச்
சான்றாம், அறிவு உன்னுரு, எனவே
திடமதாய் ஆய்ந்து தெரித்து, நீ
தெரிந்த தெரிவிற் இயக்கு, என்னோ (2)

குறிப்பு: உடல் 3 - துலவுடல், சூக்கும உடல், காரண உடல், அவத்தை 3 - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, அபிமானி 3 - துலவுடல் அபிமானி சூக்குமஉடல் அபிமானி, காரணஉடல் அபிமானி, சான்றாம் அறிவு உன்னுருவென - சாட்சியாகிய (சுயஞ் சோதியாகிய) அறிவு உன்னுடைய வடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட பொருளாஞ் சகலமும், நேர்
காணா இருளாங் கேவலமும்,
விண்டு போகும், நடு நிலையே
விசுத்த நிலை என்று, அந் நிலையில்,
பண்டை அறிவாய், உனை இருத்திப்
பரமானந்தம் பெறும் வண்ணம், யாம்
விண்டு, நீ அந் நிலை தவிர்ந்து,
வீணே உழலும் விதி என்னோ (3)

குறிப்பு: சகலம் - சாக்கிரமும் சொப்பனமும் ஆகிய இரு அவஸ்தைகள், இருளாங் கேவலமும் - உண்ட பொருள்கள் அனைத்துந் தோன்றாத பாழாகிய சுழுத்தி அவஸ்தையும், விண்டு போகும் - விட்டுப் போகும், விசுத்த நிலை - மிகவுஞ் சுத்தமான நிலை, யாம் விண்டும் - யாம் சொல்லியும்.

பொருளும் இருளும் அறியும் உனைப்
பொன்றும் அவைகள் அறியா வித்
தெருள் சேர் போத மாம், உன்னைத்
தெளிய வேண்டி ஒன்றனையும்
மருளுற் அறியாது, அறிவாயே
மன்ன வேண்டு நீயென யாம்
அருளுற், அறைந்தங் கண் பிசைந்தே
அயரும் இந்த அயர்வா என்னோ (4)

குறிப்பு: பொருளும் இருளும் அறியும் உனைப் பொன்றும் அவைகள் அறியா - சடப் பொருள்களையும் பாழாகிய கேவலத் தையும் அறிகின்ற ஆன்மாவாகிய உன்னை, அழிந்து போகுந் தன்மை உடைய அவைகள் அறியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருதி முடிவுஞ், சுரர்களும் அச்
சுரேசன் அயன்மால் உருத்திரரும்,
கருதி முறையிட்டு, அலறி, இன்னுங்
காண்டற் கரிய பரசிவமே,
மருவும் உடல் ஆதிகள் நீக்கி,
மன்னும் அவித்தை இருள் போக்கித்
தெரியும் அறிவாம், நீ, என யாந்
தெரித்த பின்னுந், திகைப்பு என்னோ (5)

குறிப்பு: சுருதி வேதம் சுரர்கள் - தேவர்கள், அவித்தை - அஞ்ஞானம்.

என்றும், எந்த இடங்களினும்
இருக்கும் எந்தப் பொருள்களையும்
துன்றி அறியும் அறிவே நீ,
துலங்கு நின்னை, ஒரு பொழுதும்
ஒன்று மறியாது, ஆதலினால்,
ஒப்பில் சிவம் நீ யாம் என யாம்
நன்று புகன்றும், அந்நிலை நீ,
நண்ணா, உயிர் போய் நண்லென்னோ (6)

குறிப்பு: ஒப்பில் சிவம் நீயாம் - உவமானம் இல்லாத சிவம் நீயாம், நண்ணாது - பொருந்தாது.

எந்த நிலைகள், யார் சொலினும்,
எல்லா நீயே, அறிவை அவை,
தொந்தம் அற நின்று, உனை அறியாது,
உலங்கும் உன்னை அறிந்திடுமேல்
உந்தன் அறிவை விடுத்து, அவற்றை
உறலாம் அன்று, உணர்பவன் நீ
எந் தம் மகனே என்று, உனக்கு யாம்
இயம்ப, அறிந்து, இம் இனர் என்னோ (7)

குறிப்பு: தொந்த மற - தொடர்பு அற (சம்பந்தம் நீங்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத மொழி போன், மேதினி தான்
விளங்க வந்த குருநாதன்
போத வடிவே நீ, என்னப்
பொருந்த உரைத்தும், போதம் உறாப்
பேத நிலைகள், பல பிதற்றும்
பித்தர் மொழியாற், பிரமை அடைந்த,
ஏத முறுதல் நன்று அன்று, என்று
உற நீ உணர்ந்து, அமிடர் என்னோ (8)

குறிப்பு: பிரமை - மயக்கம், பிராந்தி.

மாலும் அயன் அறிவரிய
மாதேவன் தான், மானிடனே
போல, உருவாய் வந்தருளிப்,
பொருளும் உடலும் உயிரும் உன்றன்
ஏலும் பொருள்கள் அலவெலன் கொண்டு
இயானே நீ, என்று ஒரு மொழியால்,
சாலும் உண்மைப் பொருள் அளித்து,
இனுந் தாழ் ஒழிக்காத், தரம் என்னோ (9)

குறிப்பு: மாதேவன் தாள் - சிவபிரான் தாள், ஒரு மொழி - மோனத்தைக் காட்டுஞ் சைக்கினை.

எங்கும் இருந்தே, இலங்கி இடும்,
இன்ப வடிவாம் ஒரு சிவமே,
தங்கி, நாமாய் இருக்கும், அது
சாரும் உடலாதிகள் நீக்கிப்,
பொங்கும் அறிவே நீயாகிப்,
பொலியும் நிலையை ஆய்ந்தெரித்தும்,
மங்கி, மயலுற்று, அந்நியமாய்,
இனும், நீ மயங்கும், வழக்கென்னோ (10)

குறிப்பு: பொங்கும் அறிவே நீ - வியாபகமாக விளங்கும் அறிவே நீ, யாம் தெரிந்தும் - யாம் உணர்த்தியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியும் அறிவே நீ, என்று
அறிவை அகலா ஆநந்தச்
செறிவாஞ் சிவமே நான், என்றுஞ்
செப்பு, நீ நான் ஒன்றுன்றுங்
குறியற்று இருந்த, ஒரு குறியிற்
குறிப்பாற்ட்டி வைத்தும் இன்னும்
பொறியில் பூதர் போல், வாளா
பொழுது போக்கு, உன் புலம் என்னோ *(11)*

குறிப்பு: பொறியில் பூதர் போல் - ஞானேந்திரியங்களை இழந்த உயிர்கள் போல் (செவிடர், ஊமையர், குருடர் போல்)

பொன்னை விடுத்துப், பூடணங்கள்
பூண நினைக்கும் புலமிலர் போல்
தன்னை விடுத்துச், சாத்திரங்கள்
சாற்று நிலைகள், தமைத் தேடிக்
கொன்னே உழல் உன் இயல் ஒழித்துக்,
கோதில் அறிவே நீ என்று,
சொன்னோம், அவ்வாறு அறிந்து நீ
சும்மா இராது, ஒழில் என்னோ *(12)*

குறிப்பு: பூடணங்கள் ஆபரணங்கள் புலமிலர் போல் அறிவிலிகள் போல் தன்னை விடுத்து தன்னை அறிவு சொரூபம் என்று அறியாது விட்டு.

உருவம் நாமமாம் எனவையும்,
உளவாய்த் தோன்றி ரமித்திடல் போல்,
தெரிதல் இயல்பே ஆனாலுந்,
தெரியும் நமை விட்டு, அவை வேறாத்
தெரியா. அதனால் நாம் அவையாத்
தெரிவும், பொற் பூண் போதும் என,
உரிய மொழியால், ஆய்ந் தெரித்து
ஒன்றாய், உணரா உணர்வு என்னோ *(13)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: உருவ நாமமாம், எவையும் உளவாய்த் தோன்றி எவையும் ரூபமும் பெயரும் உடைய சக்தியப் பொருட்களாய்த் தோன்றி.

ஏக மான அறிவு ஒன்றே,
எல்லாமாகி இருத்தலை, நாம்
பாகமான நினக்கு உணர்த்திப்,
பண்டை நிலையிற் பதிவித்துச்,
சோக மொடு சுகமளிக்குந்
தொடர் பந்தம் அன் வீடெனும் அனைத்தும்,
மோகம் எனச் செப்பியும், இனும் நீ,
மோனம் அடையா முறை, என்னோ (14)

குறிப்பு: ஏகமான அறிவொன்றே - எங்கும் நிறைந்த ஓர் அறிவே.

உடலை வெறுத்து, உண்டுறந்து
உறக்க மறந்து, உயர் கலையான்
மடமது ஒழித்து, ஓரிடத்தின்
மருவல் ஒழித்தும், வாஞ்சை எனும்
விடம் அழித்து, அறிவரிய
மெய்யாம் அறிவே அனைத்தும் எனத்,
திடமதாய் ஆய்ந்து, தெரித்து இனுந்
தெளிந்து, சுகத்திற், செலாய் என்னோ (15)

குறிப்பு: ஊண் துறந்தும் - சாப்பிடாது விரதம் அனுட்டித்தும்.

மூலமாக எவைக்கும் உள.
முன்னம் ஒழித்துற்று, ஒடுங்கிடமாம்
கோல மான அறிவே நீ,
குறிக்கும் அனைத்தும் அறிவெனவே,
சீல மான மறை மொழியாற்,
தெளிய, நீ ஆய்ந்து தெரித்த பின்னுங்,
காலை மாலை எப்பொழுதுங்.
கலைகள், பிதற்றுங் கருத்தென்னோ (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: மூலமாக எவைக்கும் - எவைக்கும் மூலகாரணமாகிய, உளம் உன்னல் ஒழித்து - மனம் நினைத்தலை நீக்கி, கோலமான அறிவே நீ - அறிவு சொபமே நீ.

மனமும் வாக்கும், அருவரிய
மறையின் முடிவில் வயங்கிடும் ஓர்,
கன சிற் சொபா நந்தம், அதைக்
கண்ணால் யாங் காட்டிடக் கண்டும்
தினமும் அசைவற்று இருந்ததை, நீ
சேராது, உலகம் வேறெனக் கொண்டு
இனும் உற்பவத்தை அடைந்திடுவான்,
இச்சை கொளு, நின் இழிபென்னோ (17)

குறிப்பு: மருவரிய - பொருந்துதற் கரிய, உலகம் வேறெனக் கொண்டு - உலகம் உனக்கு அன்னியமாக இருப்பதாக நினைத்துக் கொண்டு, இனும் உற்பவத்தை - இன்னும் பிறப்பை.

எங் கெங்கு, உனக்குப் பேதமெனு,
இழிபாம், புந்தி தோன்றிடுமோ,
அங்கங்கு என்றுந் துன்பம் அதே
அணுக, திண்ண மென உணர்த்திப்
பங்க மில்லாப் பதி நிலை யாம்
பதித்து, நினக்கந் நிலையினு, நீ
அங்குற் அநிய புந்தி கொடே,
மயங்கு, நினது மதி யென்னோ, (18)

குறிப்பு: பேதம் எனும் இழிபாம் புந்தி - பேதமுள்ளது என்னும் இழிவாகிய புத்தி (இழிவாகிய பேத புத்தி) அநிய புந்திகொடே - அந்நிய புத்தி கொண்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப் பவத்தினுக்கு மனவா
விணை, இல்லன, வித்தென்று உலகு உரைக்கும்,
அந்தச் சொலை நீ கேட்டறிந்து,
அவாவிற் சிந்தை ஒழிக்காது,
பந்தப் பிறவி ஒழித்திடவோ,
ஆர்அங் கொளலும் பான்மை கொல், யாம்
இந்தக் கணம், நீ அதை ஒழி என்று,
இயம்ப, உணர்ந்தும், விடாய் என்னோ(19)

குறிப்பு: பவத்தினுக்கு - பிற்பினுக்கு, அவா இணையில் வித்தென்று - ஆசை ஒப்பில்லாத விதை என்று (பிறப்புக்குக் காரணம் ஆசை).

இம்மை மறுமைகளால், எங்கும்
இருக்கும் போகம் அனைத்தும், ஒரு
செம்மை மனத்தாற் தெளிந்து அறியிற்,
செப்பும் ஐந்தே அவற்றினை நீ,
எம் மெய்யானும் அநுபவித்தே
இருந்தும், பின்னும் அவை வேண்டல்
அம்ம அழகன் உனக்கு எனய்யா
மறைந்தும் அகற்றாது உறல் அழகோ (20)

குறிப்பு: செப்புமைந்தே - சொல்லப்படும் ஐந்தே, (பஞ்ச புலன்களால் போகம் நுகரப்படும்), அகற்றாது உறல் அழகோ - நீக்காது சேர்தல் அழகோ.

ஆசை அகன்றே, அறிஞரெலாம்
அளவில் பெருமை அடைந்தமை நல்
நேச முறவே அறிந் திருந்து,
நெடி அப் பெருமை விரும்பிய நீ,
பாச முறும் அவ் வாசை உறல்,
பண்பாங் கொல்லோ, நினக்கு என்றும்
மோச மறு, மாறி யாம் உரைத்தும்,
மோக மடை, நின் முயல்வு என்னொ (21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: அளவில் பெருமை - அளவில்லாத மகிமை.

தவத்தைச் செயலும் அநேக வித
தானஞ் செயலுஞ், சாற்றரிய
பவத்தை அறுக்கும் வாளெனவே,
பகர் மந்திரங்கள் செபித்திடலும்,
அவத்தைக் அதீத மாம் பொருளை,
அணுக அகத்தில் எணலும் அறச்
சிவத்தை அறிவின் யாந் தெரித்துந்,
தேர்ந்தாங், அமையாச் செயல் என்னோ(22)

குறிப்பு: அவத்தைக்கு அதீதமாம் பொருளை - சாக்கிரம் சொப் பனம் சுழுத்தியாகிய நிலைகளுக்கு அப்பாற் பட்ட வஸ்துவை (கடவுளை)

கருமம் அகன்றே, அறிவு உருவாய்க்,
களங்கம் அகன்ற அறிஞரை,
அருமை அறிந்து அறிவினை நீ,
மதியாது அந்தக் கருமம் அதே
தரும மென, நன் ஆசை அதிற்,
சார்ந்துன், வாணாளினைக் கழித்தல்,
பெருமை அன்றென்று, உனக்கு யாமும்
பேச உணர்ந்தும், பித்தென்னோ (23)

குறிப்பு: கரும மகன்று - கிரிகைகள் நீங்கி, களங்கம் - குற்றம்.

எல்லாப் பொருளும், இருப்பதற்கும்,
யாவுஞ் சுத்தம் ஆக்குதற்கும்,
பல்லாயிரமாம் உருப் பெயரும்
படைத்தும், உதித்தும், அழிப்பதற்கும்
சொல்லார், தலமுந், தீர்த்தமும், நற்
துணைர்த்தியமோ அறிவினிடத்து,
எல்லா சமதாயாந் தெரித்து
ஓர் வேறென நீ, உனலென்னொ (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: படைத்துந் திதித்தும் அழிப்பதற்கும் - ஆக்கியும், காத்தும், அழிப்பதற்கும், உருப்பெயர் - வடிவமும் பெயரும், ஓர் அறிவே மூர்த்தி தலம் தீர்த்தமாகக் கற்பித்ததில் காட்சி அளிக்கின்றது.

நம்மால் அனைத்தும் ஆம் என்றே,
நான் என்ற அகந்தையினைப் பெருக்கி,
வெம் மால் கோபங் கொண்டு, உழன்று
வீணே பிறப்பு பல உறல் ஒழித்துப்,
பெம்மான் செயல் என்று, எலாம் உணர்ந்து,
பேசாதுற, யாம் பேசியவா,
சும்மா விருந்தே, நீ என்றுஞ்
சுகத்தை அடையாது, அலைவு என்னோ (25)

குறிப்பு: பேசாதுற - மோன நிலை பொருந்த, பேசியவா - போதித்த வண்ணம்.

என்று பவத்தில் வந்தனையோ,
வினைஅற ஒளிருஞ் சிவபெருமான்,
அன்று முதலா, இரு வினைகள்
அருத்தி, உனக்குப் பக்குவம் வந்து
ஒன்று கால நோக்கி இருந்து,
உனது ஆணவத்தை ஒழித்து, அருளை
நன்று புரியுந் திறங் கருது
நாதற்கு, உருகா நலமென்னோ

குறிப்பு: பவம் - பிறப்பு, பக்குவம் வந்து ஒன்று காலம் - பரிபக்குவம் வந்து பொருந்துங் காலம், ஆணவம் - தனது யதார்த்த சொபத்தை மறைக்கும் மறைப்பு, நாதற்கு உருகா - சற் குருநாதனை நினைந்து உருகாத.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரணம் ஒன்றுமிலா இடத்திற்,
கருத் தற்று உறங்கு நினை எழுப்பிப்,
புரண அருளைக் கொடுத்து, ஆண்ட
போதாந்தனப் புண்ணியன் தன்,
சரண கமலங்களை வாழ்த்தித்,
தலையான் வணங்கி, மனத்து உன்னி,
மரண பவங்கள ஒழிக்க முயலாது
மயங்கு, உன் மயக்கென்னோ (27)

குறிப்பு: கரணம் - அகக் கரணம் (மனமாதி கரணம் ஒன்றும் இலா இடம் - பாழ், புரணவருளை பூரண அருளை, போதாநந்தம் - அறிவானந்தம்)

எண்ணற் கரு நின் குற்றங்கள்,
யாவும் பொறுத்து, அன்றனக் அருளால்,
தண்ணற் கரிய, பர கதியை
நல்குங் கருணைக் கடல் வடிவாம்,
அண்ணல் கழற்கா நினைந்து உருகி,
அமையாது இன்னும் உலகருறும்
வண்ணம், உழல் எனகென, நீ
மதித்தே, மயங்கு மதி, என்னோ (28)

குறிப்பு: அமையாது - ஆறுதல் அடையாது.

மாறு வேண்டாது, உனக்கு அருளான்,
வடிவு கொண்டோர் மொழி அதனைக்,
இருளை ஒழித்து, அருளைக்
கொடுத்த கருணைக் குருபரனை,
நாறு மலர் கொண்டு, அருச்சனை எந்
நாளும் இயற்றி, அகம் உருகும்
அறும், என வாய் விட்டலறாது
களிப்போடு, உழனின், கருத்தென்னோ
(29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: மாறு வேண்டாது - கைமாறு விரும்பாது, நூறு மலர் கொண்டு - வாசனையுடைய பூக்களைக் கொண்டு.

தாயுந் தந்தை குரு தேவாந்,
தானே வந்து தனை அறிய,
வாயும் மனமும் அடக்கி ஒரு
மௌன நிலையில் உனை வைத்து,
ஆய சின்பம், அருண் ஞான
நோக்கம், அளித்த, வாரியனை
ஆயுந் துதிகள் சொல்லி, இறைஞ்சாது,
அழியும் உன்றன், அடைவென்னோ (30)

குறிப்பு: ஆரியனை - குருவை இறைஞ்சாது அழியும் - வணங்காது கெடும்.

நனவு கனவு கழுத்திகளின்,
நண்ணி விளங்குந் தோற்றம் எலாம்,
நினைவு மறைவும் ஆமவற்றை,
நீக்குஞ் சுத்தத் இருந் அறியின்,
கன சிற் சொபம் ஒன்றேயாய்க்,
காணும் என யாங் கழறலை நீ,
மனனஞ் செய்து, தெளிந்து அமைந்தால்,
வாழ்வாய், சிவமாய் வாழ்வாயே (31)

குறிப்பு: நனவு கனவு - சகலம் சுழுத்தி - கேவலம் தெளிந்து அமைந்தால் - தெளிவு பெற்று அமைதி அடைந்தால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

பிரதிகளுக்கு தொடர்பு கொள்க :-

**ஸ்ரீ சிவகுருநாத குரு பீட**
**அறக் கட்டளை**
**Dr. K. Sivam, M.V.Sc**
**501, Land Mark Court**
**33, Rudra Mw**
**Colombo - 06,**
**Sri Lanka.**
**Tel - 0094 - 11- 2364553**
**E-mail : drksivam@yahoo.co.in**

**க. மகாதேவசிவம்**
**K. M. Sivam,**
**166, K.K.S. Road,**
**Jaffna.**
**Tel : 021-222-2996**

**சிவன் மாளிகை,**
**28, மாரிஅம்மன் வீதி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல. 021-222-6781**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# யாழ்ப்பாணத்துச் சுவாமியின் புகழ்

கோவிந்த சாமி புகழ் சிறிது சொன்னேன்,
குவலயத்தின் விழி போன்ற யாழ்ப்பாணத்தான்
தேவி பதம் மறவாத தீர ஞானி,
சிதம்பரத்து, நடராஜ மூர்த்தி யாவான்
பாவியரைக் கரை ஏற்றும், ஞானத் தோணி,
பரம பத வாயில் எனும், பார்வை யாளன்,
காவி வளர் தடங்களிலே மீன்கள் பாயும்
கழனிகள் சூழ், புதுவையிலே, அவனைக் கண்டேன்

தங்கத்தாற் பதுமை செய்தும் இதர லிங்கம்
சமைத்தும், அவற்றினில், ஈசன் தாளைப் போற்றும்,
துங்கமுறு பக்தர் பலர், புவி மீதுள்ளார்,
தோழரே! எந் நாளும், எனக்குப், பார் மேல்,
மங்களஞ் சேர், திரு விழியால், அருளைப் பெய்யும்,
வானவர் கோன், **யாழ்ப்பாணத்து ஈசன்** தன்னைச்,
சங்கரன் என்று, எப்போதும், முன்னே கொண்டு,
சரணடைந்தால், அது கண்டீர், சர்வ சித்தி.

**- மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# வீழ்வேன் என்று, நினைத்தாயோ

தேடிச் சோறு நிதந் தின்று - பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பம் மிக உழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப் பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக்கு இரையெனப் பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?

**மகாகவி பாரதியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எழுமின்! விழிமின்! உழைமின்!

– எழுமின்

இமய உச்சி, விழுமிய நோக்கு,
கலையா சித்தம், மலையென ஓங்க

– எழுமின்

உழைப்பே உன் சீர், உறவே நாதம்,
தெளிந்த சிந்தை, ஓய்வுறாச் செயல்,
புதுயுக இலக்கணம், புதுப்புது உத்திகள்,
தாழ்விலா சக்தி, அகிலம் ஆளவே

– எழுமின்

தாமதியாதே, சோர்வடையாதே,
காலமோ சிறிது, கருமமோ பெரிது,
பாதையோ கடினம், பயம் கொள்ளாதே,
காரியம் சித்தி, வீறுடன் செல்வாய்

– எழுமின்

தர்மம் ஓங்கிடும், தயையும் பெருகிடும்,
கருணைக் கர்மம், நிகரில் வலிமை,
சிலையாம் மெழுகாய், உலகெலாம் உருக்கிட,
கலையும் திருவும் என்றும் நடமிட

– எழுமின்

ஓம சக்தீ ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் தத் சத் ஓம் என்றே

– எழுமின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org